பொழிவு - 16
குவிப்பு - 11
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
நவம்பர் 2013
(ISSN 1800-2641)

Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

## மாவீரர் துயிலும் இல்லங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை!

# இவற்றை உடைத்து ஆக்கிரமிப்பது அநாகரிகமானது!

### மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை

**வடக்கில் தேவையற்ற நடவடிக்கைகளில் படையினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். மாவீரர் துயிலும் இல்லங்கள் பாதுகாக்கப்படவேண்டியவை. இவற்றை உடைத்து – ஆக்கிரமிப்பது அநாகரிகமானது. தமிழ்ச் சமூகத்திற்காக உயிர் கொடுத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவிடாமல் தடுத்து நிறுத்துவது எந்த வகையில் நியாயமானது? என மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை கேள்வி எழுப்பினார்.**

கிளிநொச்சி, கனகபுரம், முழங்காவில் மற்றும் முல்லைத்தீவு தேராவில் ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் கடந்த சில வாரங்களாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. துயிலும் இல்லங்களைச் சுற்றி முட்கம்பி வேலி போடப்பட்டு அங்கு படை முகாம்களை அமைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக தமிழ் சிவில் சமூகம் சார்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மன்னார் ஆயர் இவ்வாறு கூறினார். ஆயர் அவர்கள் தொடர்ந்து கூறுகையில்,

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடியவர்களின் இறந்த உடல்கள் இளைப்பாறக்கூட இந்த மண்ணில் இடமளிக்கக்கூடாது என்பதில் அரசும் அதன் படைகளும் குறியாகவுள்ளன. உயிரிழந்தவர்களின் உடல்கள் இருக்கும் இடத்திலும் இந்த அரச தரப்பு தமது பழிவாங்கலைக் காட்டுகின்றது.



உலகம் முழுவதும் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்த, அஞ்சலி செலுத்தப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையில் மட்டும் தமிழ் இனத்துக்கு இந்தச் சுதந்திரத்தை வழங்காமல் அரசும் அதன் படைகளும் தமது அடாவடியைக் காட்டுகின்றன. இது பெரும் மனித உரிமை மீறலாகும். காட்டுமிராண்டித்தனமான செயலாகும் என்றார்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 'மரியாயின் ஆண்டு' பிரகடனம்



உலகளாவிய திருச்சபையில் விசுவாச ஆண்டைத் தொடர்ந்து இவ்வாண்டு திருவருகைக்கால முதலாம் ஞாயிறன்று கார்த்திகை 24ஆம் திகதியிலிருந்து 2014ஆம் ஆண்டு திருவருகைக்கால முதல் ஞாயிறு கார்த்திகை மாதம் 30ஆம் திகதி வரையிலான ஆண்டை "மரியாயின் ஆண்டாக" கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கொழும்பு மறைமாவட்டத்தில் பிரகடனப்படுத்தவுள்ளார்.

## திருத்தந்தையின் நாற்காலியில் அமர்ந்து பரபரப்பை ஏற்படுத்திய சிறுவன்



மேடையில் திருத்தந்தை பிரான்சிஸ் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு சிறுவன் வேகமாக வந்து அவர் இருக்கையில் அமர்ந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினான். இத்தாலியில் உள்ள உரோம் நகரில் வத்திகான் நகரில் சென்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் வழக்கம்போல, பிரார்த்தனைக் கூட்டத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் பங்கேற்று உரையாற்றிக்கொண்டிருந்தார். பிள்ளைகள், பேரன், பேத்திகளை வளர்ப்பதில் குடும்பத்தில் தாத்தா பாட்டிகளின் முக்கிய பங்குபற்றி அவர் பேசிக்கொண்டிருந்தார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் தூய செபஸ்தியார் பேராலய வைரவிழா



மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தின் 60ஆவது ஆண்டு வைரவிழா கடந்த 27.10.2013 ஞாயிறு அன்று மன்னாரில் இடம்பெற்றது. யூபிலி விழாத் திருப்பலியை நிறைவேற்ற வந்த மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையை பேராலய இறைமக்கள் வரவேற்று அழைத்துவருவதை படத்தில் காணலாம்.

## புனித பூமிக்கு மடுமாதா திருச்சுருபம் அன்பளிப்பு


மடுத் திருப்பதி பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் இஸ்ராயேல் நாட்டுக்கான தூதுவர் திரு. சரத் விஜயசிங்க அவர்களுடன் இணைந்து புனித பூமியின் திருத்தலத்திற்கு விஜயம் செய்து மடுமாதா திருச்சுருபத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இத்திருத்தலத்தில் உலகின் முக்கிய மரியன்னை திருத்தலங்களின் திருச்சுருபங்கள் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



## குருத்துவ பொன்விழாக் காணும் யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை

## வாழ்த்துகிறோம்! செபிக்கிறோம்!

மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயரும் தற்போதைய யாழ் ஆயருமான மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தனது குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து (டிசம்பர் 21ஆம் திகதி) பொன்விழாக் காண்கின்றார். தோமஸ் ஆண்டகை அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.



இறையருள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

**Ad multos annos viva!**

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு

### 2014 - மனித உரிமைகள் ஆண்டு

எதிர்வரும் 2014ஆம் ஆண்டை மன்னார் மறைமாவட்டத்தில் மனித உரிமைகள் ஆண்டாகக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் என்ற தொனிப்பொருளை மையப்படுத்தியதான 2014ஆம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு இவ்வாண்டு 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் 26ஆம் திகதிகளில் மடு தியான இல்லத்தில் நடைபெறும்.

இம்மாநாடு தொடர்பாக மன்னார் ஆயர், குருமுதல்வர் மற்றும் மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுவினர் ஒன்றுகூடி ஆலோசனைகளை மேற்கொண்டனர். மேய்ப்புப்பணி மாநாட்டுத் திட்டமிடல் குழுவின் செயலர் அருட்பணி. டக்ளஸ் மில்ரன் லோகு மற்றும் திட்டமிடல் குழுவினர் இம்மாநாட்டிற்கான பூர்வாங்க ஆயத்தங்களை மேற்கொண்டுவருகின்றனர்.

நிறைவுபெறும் இந்த 2013 ஆம் ஆண்டை விசுவாச ஆண்டாக அகில உலகத் திருச்சபையோடு சேர்ந்து மன்னார் மறைமாவட்டமும் கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிய உதைபந்தாட்டப் போட்டிக்காக மன்னார் மாணவர்கள் தாய்லாந்து பயணம்





இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தினால் 41வது ஆசிய உதைபந்தாட்ட போட்டிக்காக இலங்கை 19 வயது தேசிய உதைபந்தாட்ட அணியானது நவம்பர் மாதம் 6ம் திகதி தாய்லாந்து சென்று 16ம்திகதி இலங்கை திரும்பவுள்ளது. இந்த இலங்கை தேசிய அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியைச் சேர்ந்த யோண்சன், கிசோர் ஆகிய மாணவர்கள் இலங்கை அணிக்காக ஆடுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மன்னாரில் தலைசிறந்த கால்ப்பந்தாட்ட வீரர்களாகத் திகழ்வதுடன் மன்னாருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னா

## மனப்பொழிவு

### பதிப்பாசிரியர் பகர்வது

## நீத்தாரை நினைக்கும் நவம்பர் மாதம்

"பிறக்கின்றபோதே இறக்கின்ற சேதி இருக்கின்றதென்பது மெய்தானே. உடம்புகள் என்பது உண்மையில் என்ன கனவுகள் வாங்கும் பைதானே?" என்கிறார் கவிஞர் கண்ணதாசன், டாள்ஸ்டாய் என்ற ரஷ்ய எழுத்தாளர், "நாம் எல்லோருமே மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்தான். ஆனால் தூக்கில் இடும் தினம்தான் வித்தியாசம்." என்கிறார். ஆம் நாம் எல்லோரும் சாவுக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கின்றோம். இதிலிருந்து யாருமே தப்பமுடியாது. நாம் எல்லோரும் நமது சவக்குழியை நோக்கி நடந்துகொண்டிருக்கிறோம். எல்லோரும் நடக்கின்றோம். சிலர் முன்னே சிலர் பின்னே சென்று கொண்டிருக்கின்றோம்.

நவம்பர் மாதம் நீத்தாரை நினைக்கும் மாதம். நமது நெருங்கிய உறவுகள், நண்பர்கள் இன்று நம்மோடு இல்லை. நமது அணுவின் அணுவாய், ஆவியின் ஆவியாய் வாழ்ந்து நமது உறவுகளையும் உணர்வுகளையும் உள்ளன்போடு பகிர்ந்துகொண்ட பலர் இன்று நம்மோடு இல்லை.

மரணம் பாசத்தின் எதிரி. தவிர்க்க முடியாத யதார்த்தம். மரணம் நாம் பெற்றுக்கொண்டதல்ல, பிறக்கும்போது இருப்பது, வாழும்போது தொடர்வது, நேரம் வரும்போது நிகழ்வது.

மரணம் சிலருக்கு வேதனை. சிலருக்கு விடுதலை. சிலருக்கு வேடிக்கை. சிலருக்கு வாடிக்கை. சிலருக்கு முடிவு, சிலருக்கு பிடிவு. மரணத்திற்கு நிறமில்லை, அளவில்லை, இடமில்லை, இனமில்லை, வயதில்லை, வகுப்பில்லை காரணம் அதற்கு உணர்வில்லை.

சாவு பற்றிய எண்ணமானது நமக்குப் பயத்தைத் தருகின்றது. அதைப்பற்றிச் சிந்திக்க நாம் விரும்புவதில்லை. சாவு என்பது என்ன? சாவுக்குப்பின் நடப்பது என்ன? இன்றைய அறிவியலால் அறியப்படாத - புரியாத புதிராக இது இருக்கலாம். ஆனால் நமது விசுவாசம் நமக்கு விடைதருகிறது.

"கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவதில்லை. மண்மீது நாம் குடியிருக்கும் இக்கூடாரம் தகர்ந்து வீழ்ந்தாலும் கடவுளிடமிருந்து கிடைத்த வீடு ஒன்று நமக்கு விண்ணில் உண்டு." "சகோதரர்களே, இறந்தோரைப்பற்றி உங்களுக்கு ஐயமிருக்கலாகாது, நம்பிக்கையற்ற ஏனையோரைப்போல் நீங்களும் வருந்தலாகாது." என பவுலடியார் கூறுகின்றார்.

ஆகவேதான் நாம் சொல்கிறோம், ஒரு கிறிஸ்தவன் புதைக்கப்படுவதில்லை, அவன் விதைக்கப்படுகின்றான். ஒரு கிறிஸ்தவனின் மரணம் என்பது மறுவாழ்வின் ஜனனம். ஒரு கிறிஸ்தவனின் அடக்கம் என்பது புதிய வாழ்வின் தொடக்கம்.

1 கொரிந்தியர் 15: 54 சொல்கிறது. "சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே உன் வெற்றி எங்கே! சாவே உன் கொடுக்கு எங்கே!"

திருவெளிப்பாடு 21:4 சொல்கிறது, "அவர்களுடைய கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்துவிடுவார். இனிமேல் சாவு இராது, துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது. முன்பு இருந்தவை எல்லாம் மறைந்துவிட்டன."

ஒவ்வொரு மனிதனும் இறக்கின்றான் அவன் இருப்பவன் கண்ணைத் திறக்கிறான். சாவைச் சந்திக்கும்போதுதான் சாதாரண மனிதன் வாழ்வைப் பற்றிச் சிந்திக்கின்றான். நாம் எப்போது எப்படிப் பிறப்போம் என்று நமக்குத் தெரியாது. அதுபோலவே நாம் எங்கே எப்படிச் சாவோம் என்றும் தெரியாது.

சாவு நம்மை எங்கேயும் எப்போதும் சந்திக்கலாம். ஆகாயத்திலும் சாவு, அண்டைவெளியிலும் சாவு, நீரிலும் சாவு, நிலத்திலும் சாவு. நிலமை இப்படியிருக்க நமது நிலையற்ற இந்த வாழ்வில் நாம் எதைச் சாதிக்கப்போகின்றோம்? எதைத் தேடப்போகின்றோம்? பாவத்தின் விளைவுதான் சாவு எனில் பாவமில்லாதவன் சாவுக்கு அஞ்சவேண்டியதில்லை. கிறிஸ்துவிடம் தோல்விகண்ட சாவு அவரைப் பின்பற்றுகிறவர்களிடம் வெற்றி பெற்றுவிடக்கூடாது.

"ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்.-அவர்கள் தமது உழைப்பில் நின்று இளைப்பாறுவார்கள். ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூடவரும்" (தி. வெ – 14: 12)

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
**அருட்திரு. தமிழ் நேசன்**
**மன்னா பதிப்பாசிரியர்**

## மன்னாரின் மகுடம் இரா. யோசேப்பு ஆண்டகை!

### ஓர் இந்துமத சகோதரியின் இதய உணர்வுகள்

மன்னார் பதியின் அருகாமையில் இருக்கும் அழகு அன்னை மடுமாதாவின் அருள் கமலும் இடமே மன்னார் மறை மாவட்டம். இம்மறைமாவட்டத்தில் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையின் பணி எண்ணில் அடங்காது. நாட்டில் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள், சுமைகளையும், வடுக்களையும் ஏழைகளின் இன்னல்களையும் இனங்கண்டு ஆங்காங்கே வெளிப்படுத்தி துயர் துடைத்த கோபுரம் அல்லவா அவர்?

நான் மதத்தால் வேறுபட்டாலும் இறைநம்பிக்கையுடன் உங்கள் ஆராதனைகளையும் போதனைகளையும் செவிமடுக்கின்றேன். இப்பூவுலகில் யேசுபிரானை கன்னிமரியாள் பெற்றெடுத்ததுபோல எங்கள் இரா. யோசேப்பு ஆண்டகையை இலங்கை மண்ணில் மலரவைத்த மரியன்னைக்கு கோடானகோடி மலர்தூவி தாழ்பணிகின்றேன். காலத்தின் தேவையைக் கருதியே இந்த இறை தெய்வத்தை ஆண்டவர் மன்னார் பதிக்கு அனுப்பிவைத்துள்ளார். இரா. யோசேப்பு ஆண்டகை நீதி, நேர்மை, நியாயம். ஒழுக்கம், ஆளுமை, மன உறுதியான குருபிதா. இத்தனையும் ஒருங்கே கிடைக்கப் பெற்ற குருபிதாவையும் அவருடைய சேவைகளையும் பாராட்டுகிறேன்.

இன்றைய காலத்தில் தேவையில்லாத பிரிவினைகள், மனக்குழப்பங்கள் வந்தபோதும் எதிர்ச்சல் போட்டு இனிதே தீர்த்து நிறைவு காணும் தீர்க்கதரிசி ஆண்டகை அவர்கள். உடையிலே வெண்மைபோல் உள்ளத்திலும் வெண்தாமரையே! நீங்கள் பல்லாண்டு வாழ்க! மன்னார் பதி மக்கள் மனதால் மலர்க்கொத்து அளித்து வாழ்த்துகிறோம். வாழ்க வளமுடன்!

**திருமதி. தவபாலசிங்கம் (இந்து மதம்), விடத்தல்தீவு**

## சிறந்த முதியோர் பகல் நேர நிலையமாக வங்காலை புனித சூசையப்பர் நிலையம் தெரிவு

சமூக சேவைகள் அமைச்சினால் தேசியமட்டத்தில் மாவட்டங்களில் இயங்கும் சிறந்த முதியோர் பகல் நேர நிலையங்களைத் தெரிவுசெய்யும் போட்டியில் மன்னார் மாவட்டத்தில் வங்காலை புனித சூசையப்பர் முதியோர் பகல்நேர நிலையம் சிறந்த நிலையமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 01.10.2013ல் நடைபெற்ற சர்வதேச முதியோர்தின விழாவின்போது பிரதம அதிதியாக கௌரவ சமூக சேவைகள் அமைச்சர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வின்போது தெரிவுசெய்யப்பட்ட சிறந்த பகல் நேர நிலையங்களுக்கு கேடயமும், சான்றிதழும் ரொக்கப் பரிசும் (காசோலை) வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. வங்காலை புனித சூசையப்பர் முதியோர் பகல் நேர நிலைய பரிசினை அதன் தலைவர் திரு. எஸ். எஸ். லேம்பேட் J.P (பாக்கியம் மாஸ்ரர்) பெற்றுக்கொண்டார்.

## அதிபர் சேவையிலிருந்து ஓய்வு!



பேசாலை மன்/ சென். பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக அதிபராகப் பணியாற்றிய பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சி. எம். சேவியர் பெர்னாண்டோ (B.Ed, S.L.P.S. 2-1) அவர்கள் தனது அகவை அறுபதின் நிறைவில் ஆசிரியராக 15 வருடங்களும், அதிபராக 21 வருடங்களுமாக மொத்தம் 36 வருடங்கள் கல்விப் புலத்திற் சேவையாற்றியபின் கடந்த ஒகஸ்ட் மாதம் 21ம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1977 யூன் 03ல் சமூகக் கல்வி ஆசிரியராகக் கற்பித்தற் பணியில் காலூன்றிய இவர் மன்/ சின்னப்பண்டிவிரிச்சான் அ.த.க பாடசாலை, மன்/ சென் பற்றிமா ம.ம.வி ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராகவும், 1992 செப்ரெம்பர் 01 முதல் மன்/ துள்ளுக்குடியிருப்பு றோ.க.த.க. பாடசாலை, மன்/ புதுக்குடியிருப்பு அ.மு.க பாடசாலை, மன்/ சென். லோறன்ஸ் றோ.க.த.க. பாடசாலை, மன்/ சென். பற்றிமா ம.ம.வி. ஆகிய பாடசாலைகளில் அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

மாவட்டத்தின் சக அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக் கல்விப் பணிமனை அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடனும் மதப் பெரியார்கள் ஆகியோரின் நல்லாசிருடனும் அவ்வப்பாடசாலைச் சமூகங்களின் மிகுந்த ஒத்துழைப்புடன் ஆசிரியர்களோடு இணைந்து மாணவர்களின் கல்வி, ஒழுக்கம், ஆன்மீக, சமூக விழுமியங்களையும் பாடசாலைப் பௌதீக கட்டுமானங்களையும் சிறப்பாக முன்னெடுத்து சிறந்த சேவையாற்றியுள்ளார்.

இவர் அகில இலங்கை சமாதான நீதவானும், தற்போது பேசாலை பங்கு மறுவாழ்வுப் பணியாளர் அமைப்பு, பேசாலை புனித சூசையப்பர் பரித்தியாக சபை என்பவற்றின் தலைவரும், பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய அருட்பணிப் பேரவை, புனித வெற்றிநாயகி இளைஞர் ஒன்றியம் ஆகியவற்றின் முன்னாள் செயலரும் ஆவார்.

இவர் மன்/ சென். ஆன்ஸ் ம.ம.வி. வங்காலை, மன்/ எருக்கலம்பிட்டி மு.ம.ம.வி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது கல்வி, சமய, சமூகப் பணிகளை மன்/ வலயக் கல்விப் பணிமனை, பேசாலைச் சமூகம், மன்னா பத்திரிகை என்பன மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றன.


## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2013

### மார்கழி

- 03 - தூய சவேரியார் திருவிழா - கீரியன் குடியிருப்பு, புளியங்குளம்.
  - மன்னார் தூய சவேரியார் ஆண்கள், பெண்கள் கல்லூரிகளின் விழா
  - யாழ் தூய சவேரியார் பெரிய குருமட விழா
- 06 - தூய நீக்கிலாஸ் திருவிழா - பட்டித்தோட்டம்
- 08 - தூய கன்னி மரியாளின் அமல உற்பவம் - கடன்திருநாள்
  - தூய வெற்றிநாயகி திருவிழா - பேசாலை
  - அ.ம.தி குருக்களின் திருவிழா
  - அமலோற்பவ மாதா அருட்சகோதரிகளின் விழா
- 13 - தூய லூசியா திருவிழா - பள்ளிமுனை
- 25 - இயேசு பிறப்பு பெருவிழா - கடன் திருநாள்
- 29 - திருக்குடும்பத் திருவிழா
- மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



"பிரதிபா பிரபா" என்ற ஜனாதிபதி விருதைப்பெற்ற நானாட்டான் மண் தந்த அருட்சகோதரியும் யாழ்/ இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மட அதிபருமாகிய அருட்சகோதரி ஜெயநாயகி செபமாலை (B.A. D.p in Ed. S.L.P.S. 2,11) அவர்களை வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சேவையில் அகவை 25இல் அதியுயர் விருதாம் "பிரதிபா பிரபா" விருதினை அறிவொளியால் பெற்றிட்ட எம் அன்புச் சகோதரியை பல்லாண்டு நலமுடன் வாழ அன்பொழுக குடும்பத்தினரும் பங்கு மக்களும் வாழ்த்தி நிற்கின்றனர்.

**தகவல் : எஸ். எமில் J.P, உமநகரி, நானாட்டான்.**

# அனைத்து வாழ்வுக்கும் ஒளிக்கும் ஆதாரமாக இருக்கும் இறைவன் உங்கள் வாழ்வையும் மகிழ்வையும் ஆழப்படுத்துவாராக!

## திருப்பீடத்தின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

“அனைத்து வாழ்வுக்கும் ஒளிக்கும் ஆதாரமாக இருக்கும் இறைவன் உங்கள் வாழ்வை ஒளிர்வித்து உங்கள் வாழ்வையும் மகிழ்வையும் ஆழப்படுத்துவாராக” என்ற வாழ்த்தோடு தீபாவளி வாழ்த்துக்களை திருச்சபை தெரிவித்துள்ளது. இந்துமத சகோதரர்களின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான தீபாவளியை முன்னிட்டு திருப்பீடத்தின் பல்சமய உரையாடலுக்கான பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகாயுதப் போக்குகளால் மனிதகுல உறவுகள் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில் நட்புணர்வு மூலமும் ஒருமைப்பாட்டின் மூலமும் மனிதகுலத்தின் பொதுநலனுக்காக கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து உழைக்க முடியும். மனிதர்களிடையே உருவாகும் உறவைச் சார்ந்தே உலகில் அமைதியை கட்டியெழுப்புதல் மூலமே உண்மையான ஒருமைப்பாட்டையும் இணக்க வாழ்வையும் கொண்டுவர முடியும் நாம் அனைவரும் ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இன உணர்வுகளையும் கலாச்சார மதம் மற்றும் கொள்கை வேறுபாடுகளையும் தாண்டியதாக நம் உறவுகள் இருக்க வேண்டும்.




உலகாயுதப் போக்குகளின் அதிகரிப்பால் ஆழமான ஆன்மீகம் மற்றும் சமய மதிப்பீடுகளின் முக்கியத்துவம் இழக்கப்பட்டு வருகின்றது. ஆகவே நல்லுறவுகள் மற்றும் ஒருமைப்பாட்டின் கலாச்சாரத்தைப் போற்றி ஊக்குவிக்க வேண்டும். முழு மனிதகுல நன்மைக்கென மதங்களிடையே நல்லுறவுகள் பேணப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# துயர் பகிர்கின்றோம்!

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த சிலாவத்துறைப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். இராஜநாயகம் மற்றும் அருட்சகோதரி அழகேஸ் செபஸ்தியாம்பிள்ளை (தி. கு) ஆகியோரின் அன்புத் தாயார் திருமதி செபஸ்தியாம்பிள்ளை அன்னம்மா (நானாட்டான்) அவர்கள் கடந்த 07.10.2013 அன்று இறைபதமடைந்தார்.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் அவர்களின் அன்புத் தந்தை திரு. கபிரியேல் குரூஸ் அவர்கள் கடந்த 31.10.2013 அன்று இறைபதமடைந்தார்.

இறைபதமடைந்த இக்குருக்களின் பெற்றோர் ஆன்மசாந்தி பெறவும் இவர்களின் பிரிவால் துயருறும் எமது அன்புக்குரிய குருக்களுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்களின் ஆழ்ந்த அனுதாபங்களையும், செபங்களையும் மன்னா தெரிவிக்கின்றது.

# திருத்தந்தையின் பிரதிநிதி பிரியாவிடை பெறுகிறார்

திருத்தந்தையின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் ஜோசப் ஸ்பிறிற்றேரி ஆண்டகை அவர்கள் இலங்கைக்கான தமது சேவையை முடித்துக்கொண்டு வத்திக்கான் திரும்பவுள்ளார்.

இலங்கையில் கடந்த நான்கு வருடங்களாக அளப்பரிய சேவைசெய்துவந்துள்ள இவர் இங்கிருந்து மாற்றலாகி ஆபிரிக்காவின் ஐவோரிகோஸ்ட் நாட்டில் திருத்தந்தையின் அப்போஸ்தலிக்கப் பிரதிநிதியாகப் பணியாற்றவுள்ளார். இலங்கையில் அவர் பணிசெய்த காலகட்டங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று மக்கள் மத்தியில் தமது பணிகளை மேற்கொண்டதுடன் விசுவாசப்பயணத்தில் மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கும் சிறந்த மேய்ப்புப்பணியையும் மேற்கொண்டுள்ளார்.

சிறந்த குணாம்சம், சாந்தமான முகம், அவரைச் சந்திப்போருடன் அவர் பழகும் விதம் என்பன பேராயரின் சிறப்பம்சங்களாகும். அவர் இலங்கையில் நம் மக்களுக்கும் திருச்சபைக்கும் ஆற்றிய அரும்பணிகளுக்காக மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா அவருக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

பேராயர் அவர்கள் செல்லுமிடமெல்லாம் அவரது விசுவாச மேய்ப்புப் பணியை சிறப்புற மேற்கொள்ள இறையருள் வேண்டி செபிப்போம்.



# திருத்தந்தையையும் விட்டுவைக்காத அமெரிக்கா!

திருத்தந்தை பிரான்ஸின் தொலைபேசி அழைப்புகளையும் அமெரிக்கா ஒட்டுக்கேட்டதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க உளவு அமைப்பான என். எஸ். ஏ. உலகத் தலைவர்களின் தொலைபேசி தகவல்களை ஒட்டுக்கேட்டதாக தகவல் வெளியாகி பெரும் சர்ச்சையில் மாட்டிக்கொண்டுள்ளது.

இந்நிலையில் வத்திகானில் உள்ள திருத்தந்தை பிரான்ஸிஸின் தொலைபேசி உரையாடல்களும் ஒட்டுக்கேட்கபட்டன என்று இத்தாலி நாட்டு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டதுடன், அது தொடர்பாகத் தற்போது விவாதிக்கப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வத்திகானின் செய்தித் தொடர்பாளர் வானே வினீஸ், “அந்தச் செய்தியில் உண்மை இல்லை, வத்திகான் புனிதமான இடம், அங்கு ஒட்டுக்கேட்பு எதுவும் நடக்கவில்லை” என்று தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை அமெரிக்க தேசிய உளவு அமைப்பும் மறுத்துள்ளது


# இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கல் கருத்தமர்வு

கடந்த ஒக்ரோபர் மாதம் 07 – 09 ம் திகதிவரை இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கல் கருத்தமர்வு நிகழ்வு இடம்பெற்றது. யாழ் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி இரா. ஸ்ரலின் அவர்களுடைய தலைமையிலே இந்தக் கருத்தமர்வு ஆரம்பமாகியது. இதில் யாழ், மன்னார் மறைமாவட்டங்களுடைய இளம் குருக்கள் (குருத்துவ வாழ்வில் 1-7 ஆண்டுகளை நிறைவுசெய்த) 30 பேர் கலந்துகொண்டார்கள்.

இளங்குருக்களுடைய உருவாக்கத்திற்கு உகந்தவிதத்திலே பல்வேறு தலைப்புக்களின்கீழ் கருத்துரைகளும், கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. இந்தக் கருத்துரைகளிலும், கலந்துரையாடல்களிலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் யாழ்ப்பாண மற்றும் மன்னார் மறைமாவட்டங்களைச் சேர்ந்த குருமுதல்வர்கள் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்திரு. விக்ரர் சோசை, இவர்களோடு இரண்டு மறைமாவட்டங்களுடைய குருக்களும் இணைந்துகொண்டார்கள்.

இந்த உருவாக்கல் கருத்தமர்வானது இளம் குருக்களுடைய உருவாக்கத்திற்கும், அவர்களுடைய பணி வாழ்விற்கும் பெரும் பயனுடையதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆடம்பரமாக வாழ்ந்த ஜேர்மன் ஆயர் பாப்பரசரால் இடைநிறுத்தம்!



ஜேர்மனியின் தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பல மில்லியன் டொலர்கள் செலவுசெய்து புதுப்பித்த கத்தோலிக்க ஆயர் ஒருவரை பாப்பரசர் பிரான்சிஸ் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார். வத்திகானில் பாப்பரசருடன் நடந்த சந்திப்பையடுத்து ஆயர் பீற்றர் ரெபாஸ் அவர்கள் காலவரையறையின்றி அவரது மறைமாவட்டத்தில் இருந்து வெளியேறும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

பெருமளவிலான மக்கள் கத்தோலிக்க திருச்சபைக்கு வரி செலுத்தும் ஜேர்மனியில் இந்த ஆயரின் அளவுகடந்த செலவினங்கள் தொடர்பில் அதிருப்தி வெளியிடப்பட்டிருந்தது. ஏழை மக்கள்மீது திருச்சபைச் சமூகம் இரக்கமும் மரியாதையும் காட்டவேண்டும் என்று புதிய பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆயரை ‘ஆடம்பர ஆயர்’ என்று ஜேர்மனிய வானொலிகள் வர்ணித்திருந்தன.

### கத்தோலிக்க கிராமத்தில்

# வேறு இனத்தவர்களைக் குடியேற்ற வேண்டாம்.

### மன்னார் அரச அதிபருக்கு மகஜர்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கத்தோலிக்க கிராமமான பொன்தீவு கண்டல் பகுதியில் அரசியல் ரீதியாக வேற்று மத மக்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்தக் கிராம மக்கள் கடந்த 23.10.2013 அன்று மாலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

1866 ஆம் ஆண்டு மூன்று குடும்பங்களுடன் குடியேற்றம் செய்யப்பட்ட கிராமம் பொன்தீவுகண்டல் கிராமமாகும். இத்தீவானது எமது கிராமத்தை அண்டிய தீவாகவும் எம் மக்கள் இத் தீவில் வசித்ததற்கான ஆதாரமும் எம்மிடம் உள்ளது.

தற்போது எமது சமூகம் பரந்து விரிந்து இன்னமும் பெருகி உள்ளது. எமது மக்களுக்கு காணிகள் இல்லாத நிலையில் இத்தீவை நாம் மீண்டும் புதுப்பித்து காணிகளை வழங்குவதன் மூலம் இக்கிராமத்தை இன்னும் பெருப்பிக்க எண்ணியுள்ளோம்.

ஏறத்தாள 80 குடும்பங்களைக் கொண்ட இக்கிராமம் 100 வீதம் கத்தோலிக்க மக்களைக் கொண்டதாகும். ஆனால் இக்கிராமத்திற்குச் சொந்தமான காணிகளை வேறு இன மக்களுக்கு கொடுத்து அவர்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் அரசியல் ரீதியாக இடம்பெற்று வருகின்றன. இதனால் இக்கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு காணி அற்ற நிலை ஏற்படும். அதுமட்டுமன்றி எமது பொதுத் தேவைகளுக்காகவும் குழந்தை யேசு கோவில் அமைப்பதற்கும், அநாதை இல்லம் அமைப்பதற்கும் நாம் ஆலோசித்து வருகின்றோம்.

இந்த நிலையில் இந்தக் குடியேற்றத்தை உடனடியாக தடுத்து நிறுத்தி இக்காணிகளை அக்கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் நூலுக்கு ‘தமிழியல் விருது’



யாழ்ப்பாணம் பிசப் சவுந்தரம் மீடியா நிலையத்திலிருந்து செயற்படும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா இணையம் மற்றும் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரி.சி.என்.எல்) தொலைக்காட்சி இயக்குனரும், தமிழ்நாடு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக இணைப்பாளருமான அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை அவர்களுக்கு மட்டக்களப்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் அவரத்து கட்டுரை நூலரான “ஆசிரிய தலையங்கம் ஓர் அறிமுகம்” நூலுக்கு 2012ஆம் ஆண்டுக்கான செந்தமிழ்ச் செல்வர் எஸ். ரி. கந்தீர்ராஜா “தமிழியல் விருதினை” வழங்கி கௌரவித்தது.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# அன்பியப் பணியாளர்களுக்கான வலுவூட்டல் பயிற்சிநெறி

மன்னார் மறைமாவட்டத்தின் ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஐந்து அன்பியப் பணியாளர்கள் அழைக்கப்பட்டு, நான்கு மறைக்கோட்டப் பங்குகளிலும், மறைக்கோட்ட ரீதியில் 2 நாட்கள் வலுவூட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சிகளின் ஆரம்ப நாளில் மறைமாவட்ட அன்பியக் கொடியேற்றப்பட்டது. பங்குபற்றும் அன்பிய இணைப்பாளர்கள் விவிலியம் கையில் ஏந்தி பவனியாக வந்து தூய ஆவியானவரின் பாடல் பாடி இறைவார்த்தைப் பகிர்வோடு வலுவூட்டல் பயிற்சி ஆரம்பமாயிற்று.

மறைக்கோட்ட முதல்வர்கள் மற்றும் பங்குக்குருக்களின் ஆசி உரைகள், சிறப்புரைகள் இடம்பெற்றன. பயிற்சியாளர்களை அனுப்பிவைத்த பங்குத்தந்தையர்கள், அருட்பணிப் பேரவை உறுப்பினர்கள், அருட்சகோதரிகள் ஆகியோரின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இந்நிகழ்வுகளுக்கு பெரிதும் உதவியாக அமைந்திருந்தன.

25, 26 ஆவணி, 2013 அடம்பன் பங்கில், மடு மறைக்கோட்ட பங்குகளின் அன்பியப் பணியாளர்களுக்கும், 28,29 ஆவணி, 2013 முருங்கன் பங்கில் முருங்கன் மறைக்கோட்ட பங்குகளின் அன்பிய பணியாளர்களுக்கும், 01, 02, புரட்டாதி, 2013 மன்னார் அன்பியத் தொடர்பகத்தில் மன்னார் மறைக்கோட்ட பங்குகளின் அன்பியப் பணியாளர்களுக்கும். 11, 12 ஐப்பசி, 2013 வவுனியா பங்கில் வவுனியா மறைக்கோட்ட பங்குகளின் அன்பியப் பணியாளர்களுக்கும் வலுவூட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மடு மறைக்கோட்டதில் 04 பங்குகளிலிருந்து 19 அன்பிய பணியாளர்களும், முருங்கன் மறைக்கோட்டத்தில் 6 பங்குகளில் 28 பணியாளர்களும், மன்னார் மறைக்கோட்டத்தில் 8 பங்குகளில் 27 பணியாளர்களும், வவுனியா மறைக்கோட்டத்தில் 6 பங்குகளில் 39 பணியாளர்களும், இப்பயிற்சிகளில் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

இப்பயிற்சிகளில் ஆன்மீக உரைகள் கொடுத்த தியான மைய இயக்குனர் அருட்பணி. அ. யூட்குரூஸ் அடிகளார், அமலோற்பவ சபைக்கன்னியர் அருட்சகோதரி ஜெயா ஜெபகிரீடம் ஆகியோருக்கு நன்றிகள் தெரிவித்து நிற்கின்றோம். நான்கு மறைக்கோட்டங்களின் 24 பங்குகளிலிருந்து 113 அன்பிய இணைப்பாளர்கள் இவ்வலுவூட்டல் பயிற்சிகளில் பங்கெடுத்தமை பாராட்டுக்குரியதே. பெரும்பாலான பயிற்சிகள் அன்பிய இயக்குனரால் பல்லூடக எறியி (Multi media Projector) யினை பயன்படுத்தி காணொளி வாயிலாக (Power Point Presentation) வழங்கப்பட்டன.

பயிற்சி நிறைவு நாட்களின் ஆய்வுகளின்போது பின்வரும் கருத்துக்கள் பயிற்சியாளர்களினால் முன்வைக்கப்பட்டன.

1. காணொளி மறையறிவு விளக்கம், விசுவாச அறிக்கை பற்றிய பயிற்சி, அன்பிய வாழ்வின் அவசியம், இயற்கையில் இறைவன், முடியும் என்னும் நம்பிக்கை, ஆன்மீக உரைகள், பாடல் பயிற்சி, செபவாழ்வு அனுபவம் என்பன பெருமளவு பயனளித்தன.
2. அன்பியப் பணியில் சோர்வுற்றிருந்த நிலையில் இப்பயிற்சி உற்சாகமளித்து பணிகளைத் தொடர்ந்தாற்ற உந்துதல் தந்துள்ளன.
3. அன்பியங்களை வளர்க்க வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டுள்ளது.
4. இறைவார்த்தையைத் தவறாமல் வாசிக்க வேண்டும் என்னும் உந்துதல் ஏற்பட்டுள்ளது.
5. குடும்ங்களில் நாளாந்த குடும்ப செபம் செய்வது என்னும் முடிவு எடுக்க தூண்டுதல் கிடைத்தது.
6. சிறுவர்களுக்காகவும் செபிக்கும் தேவையுள்ளதையும் உணர முடிந்தது.
7. தாழ்ச்சியோடு எல்லோரையும் ஏற்று அன்பு செய்ய வேண்டும் என்னும் உணர்வு ஏற்பட்டுள்ளது.
8. கிறிஸ்தவம் என்றால் என்ன? கிறிஸ்தவன் யார்? என்னும் விளக்கம் பெற்றோம்.
09. அன்பிய வாழ்வு என்பது இலகுவானதல்ல. ஆனால் அதில்தான் பயணம் செய்ய முன்வர வேண்டும் என்பதை புரிந்துகொண்டோம்.
10. பங்கில் அன்பியப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இப்பயிற்சிகள் பெரிதும் உதவியுள்ளன.
11. ஒவ்வொரு மாதமும் அன்பிய இணைப்பாளர்கள் தங்கள் பங்கில் ஒன்றுகூடலை பங்குத்தந்தையுடன் நடத்துவதென்று முடிவு எடுத்தனர்.
12. ஓவ்வொரு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மறைக்கோட்ட ஒன்றுகூடல் நடாத்தி அன்பிய ஆணைக்குழுவின் பயிற்சிகள் பெறுவது அவசியம்.

அன்பிய மத்திய குழு உறுப்பினர்கள் இப்பயிற்சிகள் நடைபெற முழு ஒத்துழைப்பு வழங்கினர். சிறப்பாக இப்பயிற்சிகளுக்கான பின்புல ஏற்பாடுகளைக் கவனித்த அன்பிய மத்திய குழு உறுப்பினர்கள் திருமதி. தே. மேரி அமலி டபரேரா, திருவாளர்கள் ரி. ஜெயக்குமார், எஸ். காந்தன், திரு. கைபொன்கலன் ஆகியோருக்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

**தகவல் : டி.பி.எவ். ஞானப்பிரகாசம், அன்பிய செயலாளர், அன்பிய ஆணைக்குழு.**

## முருங்கன் வைத்தியசாலையில் ஆலய அடிக்கல் நாட்டு வைபவம்





முருங்கன் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் திருஇருதய ஆண்டவர் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வானது கடந்த 15.09.2013 அன்று மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை தலைமையில் பிற்பகல் 4.00 மணியளவில் இடம்பெற்றது.

இதில் முருங்கன் பங்குத்தந்தை அருள்ராஜ் குரூஸ் அடிகளாரும், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஓஸ்மன் சாள்ஸ் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் போன்றோரும் கலந்துகொண்டனர்.

இந்த ஆலயக் கட்டுமானப்பணிகளுக்கு இயலுமானவர்கள் தங்களால் முடியுமான (பொருள், பணம்) உதவிகளை நல்குமாறு வைத்தியசாலை சமூகம் சார்பாக முருங்கன் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். தொடர்புகளுக்கு முருங்கன் பங்குத்தந்தையை நாடவும்.

# நாட்டு நடப்புக்கள்

## தருவது நாங்கள் ....... தீர்மானிப்பது நீங்கள்........

### 5 வருடங்களில் 15 ஆயிரம் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறைகள்

**இதுவா ஆச்சரியம்மிக்க நாடு என்று திஸ்ஸ கேள்வி**

நாட்டில் கடந்த 5 வருட காலப்பகுதியில் சுமார் 15 ஆயிரம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளில் இலங்கை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

### முதல் 100 செல்வந்தர்களின் ஓராண்டு வருமானம் உலகின் வறுமையை ஒழிக்கப் போதுமானது

ஒக்ஸ்பாம் நிறுவனம் கூறுகிறது

உலகின் முதல் 100 பணக்காரர்களின் கடந்த வருட வருமானம், உலகில் வறுமையில் இருக்கும் ஏழைகளின் மோசமான நிலையை ஒழிக்கத் தேவையான தொகையைவிட நான்கு மடங்கு அதிகமானது என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒக்ஸ்பாம் தொண்டு நிறுவனம் தெரிவிக்கிறது.

கடந்த வருடத்தில் உலகின் முதல் 100 பணக்காரர்களின் மொத்த வருமானம் 240 பில்லியன் டொலர் ஆகும். அதற்கு மாறாக, உலகில் மிகவும் வறுமையில் இருக்கும் மக்கள் ஒரு நாளைக்கு ஒன்றேகால் டொலருக்குக் குறைவான பணத்திலேயே வாழ்கின்றனர் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

### இலங்கையில் லஞ்ச ஊழல்கள் முறைப்பாடு 2012 இல் உச்சத்தில்

இலஞ்சம் பெறுவது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் மாத்திரம் இலஞ்சம், ஊழல் பெற்றமை தொடர்பில் 3163 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லஷ்மி ஜயவிக்ரம தெரிவித்தார். 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்ற சம்பவங்கள் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மன அழுத்தமின்றி மக்கள் வாழும் நாடு சிங்கப்பூர்

மக்கள் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் மன அழுத்தம் இன்றி வாழும் நாடு சிங்கப்பூர் என்று கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

உலகில் மக்கள் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் மன அழுத்தம் இன்றி வாழும் சமூகம் எந்த நாட்டில் உள்ளது என்பதைக் கண்டறிவதற்காக சுமார் 150 நாடுகள் பங்குபற்றிய கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

சிங்கப்பூரில் காணப்படும் மிகச் சிறியளவு வேலை வாய்ப்பில்லாதோர் வீதத்தாலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியாலுமே சிங்கப்பூர் முன்னணி வகித்துள்ளது. மேலும் உலகில் அதிகளவு நேரம் மக்கள் வேலை செய்யும் நாடாகவும் சிங்கப்பூர் விளங்குகின்றது. சிங்கப்பூரில் 5.2 மில்லியன் மக்கள் ஒரு கிழமைக்கு 46.6 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மன்னாரில் கடந்த 9 மாதங்களில் 60 பேர் டெங்குநோயால் பாதிப்பு

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 60 பேர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். பரீட் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் அக்ரோபர் வரையிலான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 60 பேரும் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

### பணிப்பெண்களாக சென்றவர்களில் 463 பேர் சடலங்களாக அனுப்பப்பட்டனர்

**பாராளுமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி**

பணிப்பெண்களாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களில் 463 பேர் கடந்த வருடத்தில் சடலங்களாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 300க்கும் அதிகமானோர் 30 வயதுக்கும் குறைவானவர்கள் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யான ரஞ்சன் ராமநாயக்க 08.10.2013 அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### வடமேல் மாகாணத்தில் மட்டும் 400 விகாரைகள் மூடப்பட்டுள்ளன

பௌத்த பிக்குகள் இன்றி வடமேல் மாகாணத்தில் மட்டும் 400 விகாரைகள் மூடப்பட்டுள்ளன.

ரம்புக்கண திஸ்மல்பொல விகாரையில் 3 சிறுவர்களை துறவறத்தில் இணைத்துக்கொண்டபோது அங்கு உரையாற்றிய தெல்தெனிய ரத்னசார தேரர் இதனைத் தெரிவித்துள்ளார். இரண்டு கோடிக்குமேல் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் அதிகளவானவர்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். எனினும் இந்த மக்களுக்கு சேவையாற்ற 35,000 பௌத்த பிக்குகளே இருக்கின்றார்கள். அதிகளவான விகாரைகள் மூடப்படுவதற்கு பௌத்தபிக்குகள் போதியளவு இன்மையே காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

### உலகில் 30 மில்லியன் பேர் கொத்தடிமை வாழ்க்கை

உலகில் 30 மில்லியன் மக்கள் கொத்தடிமைகளாக உள்ளதாகவும் அதில் பாதிப்பேர் இந்தியாவில்தான் உள்ளனர் என்றும் கணக்கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது. வோக் ப்ரீ பவுன்டேஷன் 162 நாடுகளில் கொத்தடிமைகளாக உள்ள மக்கள் குறித்து கணக்கெடுப்பை நடத்தியது. இதில் உலகம் முழுவதும் 29.8 மில்லியன் மக்கள் கொத்தடிமைகளாக இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தியாவில் 14 மில்லியன் பேர் கொத்தடிமைகளாக உள்ளதாகவும் சீனாவில் 3 மில்லியன் பேர் கொத்தடிமைகளாக உள்ளதாகவும் கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

உலக கொத்தடிமைகளில் 76 சதவீதம் பேர் இந்தியா, சீனா, பாகிஸ்தான், நைஜீரியா, எதியோப்பியா, ரஷ்யா, தாய்லாந்து, கொங்கோ, மியர்மார் மற்றும் பங்களாதேஷ் ஆகிய 10 நாடுகளில் உள்ளனர்.

மக்களை கடத்தி வந்து பாலியல் தொழிலில் ஈடுபட வைப்பது, தொத்தடிமைகளாக வேலை செய்ய வைப்பது, கடன் தீரும்வரை வேலை வாங்குவது, குழந்தைகளை கடத்தி வேலை வாங்குவது உள்ளிட்டவை நவீன கொத்தடிமைத்தனம் எனக் கருதப்படுகின்றது.

### நஞ்சினால் வருடாந்தம் 1,20,000 பேர் வைத்தியசாலைகளில் அனுமதி

நஞ்சு உடலினுள் உட்செல்வதினால் வருடத்திற்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் வரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதுடன், இதில் ஆயிரம் தொடக்கம் 1500 பேர் வரை உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

28ஆம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரை தேசிய நஞ்சு தவிர்ப்பு வாரமாக சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைக் கலந்தாய்வரங்கம்

விசுவாச ஆண்டினை மையமாகக்கொண்டு மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையும், யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையும் இணைந்து கலந்தாய்வரங்கம் ஒன்றை கடந்த 06.10.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று நடாத்தின. மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள தூய யோசவ்வாஸ் குடும்பநல - பொதுநிலையினர் மையத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. காலை 9.00 மணிக்கு திருப்பலியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவையின் தலைவர் திரு. G. ஜேக்கப் தலைமையில் இவ்வாய்வரங்கம் இடம்பெற்றது. பொதுநிலையினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நம்பிக்கை ஆண்டையொட்டிய ஆய்வரங்காக இது இடம்பெற்றது. "பொதுநிலையினர் குருக்களின் எடுபிடிகள் அல்ல பங்கேற்பாளர்கள் என்றும், அவர்கள் தங்களுக்கும் வலிமையுண்டு என்ற மனநிலையோடு பணிகளைத் தட்டிக்கழிக்கின்ற தன்மையை விடுத்து ஆர்வத்துடன் திருச்சபையின் பணிகளில் பங்கேற்க முன்வரவேண்டும்" என்றும் மன்னார் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் தந்தை அருட்பணி. எஸ். கே. தேவராஜா பொதுநிலையினருக்கு அழைப்புவிடுத்தார்.

யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளாரோடு தலைவர் ஜே. கீதப்பொன்கலம் தலைமையில் ஏழு பொதுநிலையினர்கள் இதில் கலந்துகொண்டனர். அருட்பணி ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளார், "பொதுநிலையினரின் திருப்பணிகள்" என்ற தலைப்பில் பிரதான உரையை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் கழகத்தின் தற்போதைய செயற்பாடுகள்பற்றி திரு. ஜே. கீதப்பொன்கலம், திரு. பெ. பிரான்சிஸ் ஆகியோர் பகிர்ந்துகொண்டனர். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## நானாட்டான் மகாவித்தியாலய மாணவன் தேசிய மெய்வல்லுனர் போட்டியில் இரண்டாமிடம்

2013ம் ஆண்டிற்கான தேசிய மட்ட மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டியில் மன்னார் மாவட்டத்திற்கு ஒரு இடம் கிடைக்கப்பெற்றது. நானாட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் ச. அன்ட்று டிலக்சனுக்கே இவ்விடம் கிடைத்துள்ளது.

இவர் 21 வயது ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தலில் 1.98 மீற்றர் பாய்ந்து தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். அதேவேளை இப்பாடசாலைச் சேர்ந்த மாணவன் செல்வன் கொ. நெவில்ராஜ், 19 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தலில் 7ம் இடத்தைப் பெற்றுள்ளார். இவ்விரு மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

இவ்வெற்றிக்கு காரணமாக இருந்த பாடசாலை அதிபர் அருட்சகோ. ச. இ. றெஜினோல்ட், உடற்கல்வி ஆசிரியரும் பயிற்றுவிப்பாளருமான சிறிதேவகரன், உடற்கல்வி ஆசிரியர் திருமதி. ஜெ. ஜெ. தேவராசா (றூபா), ஆரம்ப பயிற்றுவிப்பாளர் வி.ஏ.சி. பெர்ணான்டோ ஆகியோரும் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

## விடத்தல்தீவில் முதியோர் தின விழா

விடத்தல்தீவு பங்கு புனித சூசையப்பர் முதியோர் தின விழா கடந்த 27.10.2013 ஞாயிறு அன்று புனித இயாகப்பர் ஆலயத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை பங்குத் தந்தை ச. சவுல் நாதன் அடிகளாரின் தலைமையில் திருப்பலியோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதியோர் சங்கத்திற்குப் பொறுப்பான அருட்சகோதரி ஜெயவதி அவர்களின் நெறிப்படுத்தலில் மாலை 4.00 மணிக்கு நிகழ்வுகள் நிறைவுற்றன. இவ்விழாவில் 30க்கும் அதிகமான முதியோர் பங்கெடுத்தனர்.

திருப்பலியைத் தொடர்ந்து முதியோரை வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவித்து பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் முத்தமிட்டனர். முதியோர்களுக்கான காலை, மதிய உணவுகள் ஆலய வளாகத்திலேயே பரிமாறப்பட்டன. காலை 10.00 மணிக்கு அருட்சகோதரி சலோமி அவர்களினால் சிறு ஆன்மீக தியான உரை வழங்கப்பட்டு சில வாழ்க்கை அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன. இதில் பலர் மகிழ்ச்சியோடும் துக்கத்தோடும் தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

மதிய உணவை முடித்து சிறு ஓய்வுக்குப்பின் மீண்டும் சில கலை நிகழ்வுகளும் சிறுசிறு மகிழ்ச்சி விளையாட்டுக்களும் அருட்சகோதரிகள் சலோமி மற்றும் ஜெனோவா அவர்களினால் நடாத்தப்பட்டன. முதியோர் எல்லாரும் தங்கள் இளமை நினைவுகளுடன் சுறுசுறுப்போடும் மகிழ்வோடும் இதில் பங்கேற்றனர். விழாவில் பங்குகொண்ட அனைத்து முதியோருக்கும் நினைவுப் பரிசிலும் வழங்கப்பட்டது. இறுதியில் செயலாளரினால் நன்றி வார்த்தைகளுடன் விழா நிகழ்வுகள் நிறைவுற்றது.

**தகவல் : செ. நீ. செபஸ்ரியாம்பிள்ளை, தலைவர், புனித சூசையப்பர் முதியோர் சங்கம், விடத்தல்தீவு**

## பிச்சகுளம் மரியாள் முதியோர் சங்கத்தின் எட்டாவது ஆண்டு விழா

சிறுக்கண்டல் பங்கில் உள்ள பிச்சகுளம் மரியாள் முதியோர் சங்க எட்டாவது ஆண்டுவிழா கடந்த 24.10.2013 அன்று முற்பகல் 9.00 மணியளவில் பிச்சகுளம் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இடம்பெற்றது. சிறுக்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்ராஜ் நன்றித்திருப்பலியை நிறைவேற்றினார். தொடர்ந்து முதியோரைக் கௌரவிக்கும் முகமாக அன்பளிப்பும் சிற்றுண்டியும் பகிரப்பட்டு நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

**தகவல் : அ. அலக்சாந்தர், பிச்சகுளம்.**

## சிறுத்தோப்பு ஆலயத்திற்குச் சொந்தமான காணி அபகரிப்பைக் கண்டித்து அமைதிப் போராட்டம்

மன்னார் ஆயரின் பெயரில் உள்ள பேசாலை சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்குச் சொந்தமான தென்னங்காணியில் இலங்கை கடற்படையினர் நிலைகொண்டுள்ளதைக் கண்டித்து இப்பகுதி மக்கள் கடந்த 12.09.2013 அன்று அமைதிப் போராட்டம் ஒன்றை நடாத்தினர்.

சிறுத்தோப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்கு சொந்தமான சுமார் 17 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தென்னங்காணியிலிருந்து பெறப்படும் வருமானம் கோயில் பராமரிப்பு, விதவைகளுக்கு உதவுதல் போன்ற தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த 2000 ஆம் ஆண்டு சுமார் 8 ஏக்கர் காணியில் கடற்படையினர் முகாம் அமைத்து அதிலுள்ள தென்னை, பனை மரங்கள் என்பவற்றை அழித்துள்ளதுடன் எஞ்சியுள்ள பகுதி மரங்களையும் அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இவ்விடயம் குறித்து முன்னாள் பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி. இ. அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளாரின் பரிந்துரையில் சிறுத்தோப்பு மக்கள் மன்னார் பிரதேச செயலாளர், சனி விலேஜ் கடற்படைப் பொறுப்பாளர், வட மாகாண ஆளுனர் ஆகியோருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இக்காணி இலங்கை கடற்படையின் கஜபா படையணிக்கு முகாம் அமைப்பதற்கான காணி எடுத்தற் சட்டத்தின்கீழ் தாபிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே தற்போது போராட்டம் நடாத்தப்பட்டது. 'எமது நிலம் எமக்கு மட்டும்' 'அபகரிக்காதே! அபகரிக்காதே! எங்கள் கோயில் சொத்தை அபகரிக்காதே' போன்ற பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி நின்றனர்.

மன்னார் பிரதேச் உதவிச்செயலாளர் பி. பவாகரன், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ரர் சோசை ஆகியோர் பொலிஸ் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

## தலைமன்னரில் முதியோர், ஆசிரியர், திருமணமானவர் தினம்

தலைமன்னார் பங்கில் கடந்த 13.10.2013 ஞாயிறு அன்று முதியோர் தினம், சிறுவர் தினம் மற்றும் ஐப்பசி மாதம் திருமணமானவர் தினம் ஆகிய நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன.

இந்நிகழ்வுகளைச் சிறப்பிக்கும்வண்ணம் சிறப்புத் திருப்பலியை பங்கத் தந்தை அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் நிறைவேற்றினார். இம்மூன்று நிகழ்வுக்குரியோரை பங்குத்தந்தை திருப்பலிப் பீடத்துக்குமுன் அழைத்து நின்றார். விசேடமாக முதியோர் பவனியாக வந்து மலர் அஞ்சலி செலுத்தி பீடத்தைச் சுற்றி வந்து நின்றமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

திருப்பலியின்பின் முதியோரை மீண்டும் பீடத்துக்கு அழைத்து நல்வாழ்த்துக்கூறி ஆசீர்வதித்தார். அனைத்து மக்களும் இவர்களிடம் ஆசீர் பெற்றனர்.

இதனை அடுத்து பணிமனைக்குமுன் ஒன்றுகூடல் இடம்பெற்றது. தொடர்ந்து வரவேற்பு நடனத்தை கலைச் செல்வி தமிழினி குழு ஆடியது. பரதநாட்டியம், குழு நடனம் ஆகியவையும் இடம்பெற்றன. தமிழினி தலைமையில் 12 - 13 வயதுச் சிறுவர் டிஸ்கோ நடனம் ஆடி முதியோரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

ஈற்றில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்த 2 குடும்பங்களான அந்தோனிப்பிள்ளை பிலோமினா குடும்பம், செபமாலை வெற்றிமேரி குடும்பங்களை அழைத்து மலர் பூச்செண்டு வழங்கி கௌரவித்து வாழ்த்துக் கூறப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டதுடன் முதியோர் தினம் நிறைவுபெற்றது.

**தகவல் : அல்விறெட் சில்வா, தலைமன்னார்.**

## விசுவாச ஆண்டு மேய்ப்புப்பணித்திட்ட மீளாய்வு

"நம் இறை நம்பிக்கையை அர்த்தமுள்ளதாக்குவோம்" என்னும் கருப்பொருளில் மன்னார் மறைமாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விசுவாச ஆண்டு தொடர்பான மேய்ப்புப் பணித்திட்ட மீளாய்வுக் கூட்டங்கள் மறைக்கோட்ட ரீதியாக இடம்பெற்றன.

மன்னார், மடு, முருங்கன், வவுனியா ஆகிய மறைக்கோட்டங்களில் இடம்பெற்ற இந்த மீளாய்வில் மறைக்கோட்ட முதல்வர், அந்த மறைக்கோட்டத்தைச் சேர்ந்த பங்குத்தந்தையர்கள் மற்றும் பங்கு மேய்ப்புப்பணிச் சபை உறுப்பினர்கள் இருவர் பங்கேற்றனர். மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் குழுச் செயலாளர் அருட்திரு. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்கள் இந்த மீளாய்வுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தார். மேய்ப்புப் பணித் திட்டமிடல் குழுவின் உறுப்பினர்களான அருட்பணியாளர்கள் விக்ரர் சோசை, றெஜினோல்ட், தமிழ் நேசன், நெவின்ஸ் ஆகியோர் இந்த மீளாய்வுக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

**விசுவாச ஆண்டுச் செயற்திட்ட மீளாய்வுக்காக பின்வரும் வினாக்கள் கொடுக்கப்பட்டன.**

1. இவ்விசுவாச ஆண்டில் மறைமாவட்ட/ பங்கு மேய்ப்புப்பணித்திட்ட அடிப்படையில் முன்னெடுத்த செயற்திட்டங்கள் எவை?
2. முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டங்களால் வெளியரங்கமாக காணக்கூடிய நல்மாற்றங்கள், நன்மைகள், பலாபலன்கள் எவை? நீண்டகால நோக்கில் காணமுடியுமான நன்மைகள் எவை?
3. விசுவாச ஆண்டின் மேய்ப்புப்பணித்திட்டங்களை செயற்படுத்த விளைந்தவேளையில் உங்களை ஊக்கப்படுத்திய காரணிகளையும் பெற்றுக்கொண்ட ஒத்துழைப்புக்களையும் விபரிக்குக? (உ+ம்) பங்கு மேய்ப்புப்பணிச்சபையின் ஆர்வம், பங்கு மக்களின் ஈடுபாடு, பக்திசபைகளின் ஒத்துழைப்பு ஆணைக்குழுக்களின் உதவி இவை போன்றவற்றை உள்ளடக்குக?
4. இவ்விசுவாச ஆண்டின் மேய்ப்புப்பணிச் செயற்திட்டங்களை முன்னெடுத்தவேளையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்களையும் சில, பல செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் இருந்தமைக்கான காரணங்களையும் எடுத்துரைக்க?

## சூரியகட்டைக்காட்டில் மறைக்கல்வி வார நிகழ்வுகள்

நானாட்டான் பங்கின் சூரியகட்டைக்காடு ஆலயத்தில் மறைக்கல்வி வாரத்தையொட்டி பல நிகழ்வுகள் ஒரு வாரமாக நடைபெற்றன. அதில் இறுதி நாளாகிய 28.09.2013 அன்று சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. அன்று காலையில் வீதியோட்ட நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு மறைக்கல்விபற்றிய பேச்சு போட்டி, பாடல் போட்டி போன்ற போட்டி நிகழ்வுகளும் பின்பு கயிறிளுத்தல், யானைக்கு கண்வைத்தல், சங்கீதக்கதிரை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. மறையாசிரியர் றெஜிஸ் பெனாண்டோ தலைமையில் ஏனைய மறையாசிரியர்களான அன்ரனிதாஸ், பிரசாந்தன், அர்ஜீன், மேரி ஜெனிபிறெற், மேரி கலிஸ்ரா ஆகியோரின் உதவியுடன் இந்நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

அன்று இரவு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அடிகளார் பங்கேற்றார். இந்நிகழ்வில் நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் புஸ்பராஜ அவர்களும் கலந்து சிறப்பித்தார். அதில் அருட்பணி. நெவின்ஸ் அடிகளார் மறையறிவு பற்றிய குறும்பட காட்சிகளைக் காண்பித்து மாணவர்களிடம் கேள்விகளைக் கேட்டார். மேலும் மறுநாள் நடைபெற்ற ஞாயிறு திருப்பலியை மறைக்கல்வி மாணவர்கள் சிறப்பித்திருந்தார்கள்.

**தகவல் : அ. அர்ஜீன், பெரிய கட்டைக்காடு.**

## காத்தான் குளத்தில் மறைக்கல்வி வாரநிகழ்வுகள்

காத்தான்குளம் பங்கில் 06.10.2013 ஞாயிறு அன்று வண. பங்குத்தந்தை வசந்தகுமார் அடிகளாரின் தலைமையில் மறைக்கல்விதினத் திருப்பலி சிறப்பாக இடம்பெற்றது. இதில் முக்கிய அம்சமாக பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆன்மீகம் எவ்வாறு பயனுடையது என்பது பற்றி பங்குத்தந்தை அவர்கள் ஆழமான உரையாற்றினார். அதிலும் முக்கிய விடயமாக இறைவனுக்கு நன்றி கூறுவதை மறந்துவிடக்கூடாது என்பதுபற்றி அறிவுரையும் ஆலோசனையும் வழங்கி தெளிவுபடுத்தினார்.

அன்றைய தினம் மன்/ கருங்கண்டல் றோ.க.த. மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரர் விஜயதாசன் அவர்களின் பிறந்தநாளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அருட்சகோதரர் அவ்ர்களுக்கு பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

சிறப்புக் கட்டுரை

# கடவுளால் ஆளப்படாதவன் கடவுளைத் திருப்திப்படுத்தாதவன்!

கி. அருளப்பு, இறைவார்த்தை பணியாளர் (விடத்தல்தீவு)

வாழ்கை என்பது இறைவன் படைத்த ஓவியம். வாழ்வதென்பது மனிதன் படைத்த காவியம்! இறைவன் ஓவியமாக படைத்த இந்த உலகை மனிதர்களாகிய நாம் காவியமாக மாற்றி அமைக்க கடவுள் மனிதரை தன்னுடைய சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார். அவர் ஓவியமாக உருவாக்கிய தன்னுடைய திருச்சபையை தனது வாழ்வினால் காவியமாக்க எம் ஒவ்வொருவரையும் அவர் அழைக்கின்றார். ஆனால் மனிதர்களாகிய நாம் அதற்கு மாறாக நமக்கென்று ஓர் உலகைப் படைக்க விரும்புகின்றோம். மனித குலம் தனக்கென்று ஓர் அளவுகோலை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் ஓர் உலகை அமைக்க விரும்புகின்றது.

கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒரு சராசரித்தனமான சாமானிய வாழ்வு அல்ல. அது பல சவால்களை உள்ளடக்கியது. கிறிஸ்தவர்களுக்கு வாழ்வு என்பது சாதாரண தற்செயல் நிகழ்வு அல்ல! மாறாக அது ஓர் அழைப்பு. தனிப்பட்ட ஓர் அன்பின் கனி. கிறிஸ்தவ வாழ்வு ஓடுகிற தண்ணீரோடு பயணம் செய்வதல்ல! அது எதிர்நீச்சல் போடுவது. மலிவான கிறிஸ்தவம் என்று எதுவும் இல்லை. ஆண்டவர் இயேசுவையே முன்வைத்து தீமையையும் தன்னலத்தையும் புறக்கணித்து பேரலைகளை எதிர்த்து நீந்துவதாகும். என்னைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் எப்படி எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று ஓர் பட்டியலை ஆண்டவர் இயேசு தன்னுடைய நற்செய்தியிலே ஆங்காங்கே தந்துள்ளார். அதில் ஒன்று தன் சிலுவையைச் சுமக்காமல் என்னை நாள்தோறும் பின்பற்றுபவர் எனக்கு ஏற்புடையவர் அல்லர். தன் தாயையோ, தந்தையையோ அல்லது மகனையோ, மகளையோ என்னைவிட மிகுதியாக அன்பு செய்பவனும் எனக்கு ஏற்புடையவராய் இருக்க முடியாது என மத்தேயு 10 : 37, 38 இப்படி விபரிக்கிறது.

விசுவாசிகளாகிய நாம் எமது கண்களை எங்கே பதியவைக்கின்றோம்? இயேசுவுக்கு சாட்சியாக வாழாத எக்குடும்பமும் விசுவாசிகள் அல்லர். நற்செய்தியை ஏற்றுக்கொள்பவர் அதை வாழ்ந்து காட்ட வேண்டும். "உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ? அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு ஊட்டுவதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி கேடுவிளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர். நீங்கள் என்னிடம் வந்து கூக்குரலிட்டு மன்றாடுவீர்கள் அப்பொழுது நான் உங்களுக்கு செவிகொடுப்பேன்" என எரேமியா : 29-11,12 இப்படிச் சொல்லி நிற்கின்றது!

மீட்பை நம்முடைய சொந்த முயற்சியால் அடைய முடிவதில்லை. அது கடவுளின் கொடை. அவர் முன்னிலையில் எமது பலவீனத்தை உணர்ந்து அவரிலே நாம் நம்பிக்கைகொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை ஆண்டிலே நாம் நினைவில் கொள்ளவேண்டிய உண்மை இது. அதாவது நம்மில் வைத்துக் கொள்வதற்காகவல்ல மாறாக பிறருடன் பகிர்ந்து கொள்ளவே நம்பிக்கை நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருத்தூதரே என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது உரையில் கூறி இருக்கின்றார்.

மனித மதிப்பீடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட இறையரசின் விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். புதிய வாழ்வு பிறக்க வேண்டும் என்றால் எமது பழைய வாழ்வுக்கு நாம் மடிவது அவசியம். விதையின் இறப்பில்தான் செடிகள் முளைக்கின்றன. மேகத்தின் சாவில்தான் புதுவாழ்வு பிறக்கின்றது. எமது பிறப்பின் பயனை நாம் இறப்பதற்குள் அடைவதற்காகத்தான் இக்காலங்கள் நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டிருக்கின்றன. கடவுளால் ஆளப்படாதவன் கடவுளைத் திருப்திப்படுத்தாதவன். தன்னையே திருப்திப்படுத்துபவன் எப்போதுமே சந்தோஷம் அடைவதில்லை.

ஒருமுறை இயேசுவின் பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான பிலிப்பு என்பவர் ஆண்டவர் இயேசுவிடம் "ஆண்டவரே தந்தையை எங்களுக்கு காட்டும். அதுவே போதும்" என்றார். இயேசுவோ, "பிலிப்புவே, இத்தனை காலம் நீ என்னோடு வாழ்ந்திருந்தும் தந்தை என்னுள்ளும் நான் தந்தையுள்ளும் இருக்கிறேன் என்று நீ இன்னும் விசுவசிக்கவில்லையா?" என்று கேட்டார். இது அன்று வாழ்ந்த பிலுப்புவின் ஏக்கம் மட்டுமல்ல. ஆயிரம் ஆயிரமாண்டு காலமாக மனித வாழ்வின் தவிப்பும் இதுதான். மனிதன் இறைவனைக் காண வேண்டும். அவர் எத்தகையவர் என்பதை அறிய வேண்டும். அவரோடு உறவாடி, உரையாடி நிலைவாழ்வைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது தான் மனித வாழ்வின் உயிர்த் தேடல்.

மனிதனுடைய வாழ்வும், வரலாறும் இறைவனைத் தேடும் திருப்பயணமே. மனிதன் இறைவனைத் தேடிக்கொண்டிருக்கின்றான். இறைவனோ மனிதனைத் தேடி வந்து அவனோடு உறவாடி உரையாடி தான் யார் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அதனுடைய உச்ச நிலைதான் இறுதி இராப்போசன நிகழ்வு. "நீங்கள் இப்போது தூய்மையாய் இருக்கிறீர்கள். ஆனால் எல்லோரும் தூய்மையாய் இல்லை. நான் செய்வது இன்னதென்று உங்களுக்கு தெரிகிறதா?" யோவான் 13: 11-15 வரை உள்ள வார்த்தைகள் இதை எமக்கு விபரிக்கின்றன.

நம்பிக்கை என்பது அலங்காரப் பொருளோ அல்லது கண்காட்சிக்குரியதோ அல்ல! நம்பிக்கை கொண்டிருத்தலென்பது இயேசுவை உண்மையாக வாழ்வாக்குவதாகும்.

ஆண்டவன் வாசல் அளவில் சிறியது! சாத்தானின் வாசல் சாலையில் பெரியது! அதிலே செல்வோர் அளவில் குறைவு! இதில் செல்வோர் எத்தனை பேரோ! குறுகிய வாசலில் குனிந்து செல்லுங்கள். நிறைந்த இடத்தில் நிம்மதி பெறுவீர்கள்.

## மன்/ புனித ஆனாள் மத்திய ம.வி. யின் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகளின் நிழல்கள்



## மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின்

# சிறுவர், முதியோர் தின வருடாந்த நிகழ்வு – 2013

மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடந்தோறும் நடைபெறும் சிறுவர், முதியோர் தின விழா நிகழ்வுகள் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியோகு தலைமையிலும், பொறுப்பாசிரியர் அருட்சகோதரி யூடிற்றா வசந்தியின் வழிநடத்தலிலும் கடந்த 25.09.2013 புதன்கிழமை தொடக்கம் நடைபெற்றன.

இதன் முதல் நிகழ்வாக பாடசாலைக் கூட்டத்தில் சிறுவர் முதியோர்தின நிகழ்வுகளின் ஆரம்ப வைபவம் நடைபெற்றது. முதியோர் சங்கத் தலைவர் திருவாளர் பாக்கியம், வெளிநாட்டில் வசித்துவரும் றோஸ் பெரிதா என்பவர்களால் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. முதியோர் தினத்தை முன்னிட்டு சிறுவர் கழக உறுப்பினர்கள் முதியோரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வசனங்களை உள்ளடக்கிய சுலோகங்கள், அட்டைகள் என்பவற்றைத் தாங்கி கிராமத்தைச் சுற்றி ஊர்வலமாகச் சென்றார்கள். இவ்விடயமானது மாணவர்களுக்கும் கிராமத்திலுள்ள ஏனையவர்களுக்கும் முதியோர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்ததுடன் இவ்வூர்வலம் காலை 10.30 மணியளவில் முடிவடைந்தது.

அதனைத் தொடர்ந்து அன்றைய நாள் 12.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அருட்தந்தை நெவின்ஸ் அடிகளாரால் கருத்தமர்வு ஒன்று இடம்பெற்றது. சிறுவர்களுக்கான பல நல்ல விழுமியக்கருத்துக்கள் பற்றியும், சமுதாயத்தில் சிறுவர்களின் பங்களிப்பு பற்றியும் அவர்களுக்கு இருக்கவேண்டிய நல்ல குணங்கள் பற்றியும் பல உபாயங்களைக் கையாண்டு நகைச்சுவைப் பாங்கில் எல்லோர் உள்ளங்களையும் தொடும் வண்ணம் கருத்துரை வழங்கினார். அத்துடன் ஐந்து ரூபா என்னும் குறும்படம் காண்பிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அன்று மாலை 4.30 மணியளவில் புனித சூசையப்பர் முதியோர் சங்க வளாகம், சேமக்காலை போன்ற இடங்களில் சிரமதானப்பணி இடம்பெற்றது. ஆசிரியர்களின் வழிகாட்டுதலின்பேரில் சிறுவர்கள் குழுக்களாகப் பிரிந்து முதியோர் வளாகம், சேமக்காலை போன்ற இடங்களிலுள்ள குப்பைகள், கூழங்கள், புற்கள், கற்கள் போன்றவற்றை துப்பரவு செய்து சுத்தமாக அவ்விடங்களை வைத்தனர். பின் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டு மாலை 5.00 மணிக்கு இப்பணிகள் நிறைவுற்றன.

ஏனைய இறுதி நாள் நிகழ்வு 02.10.2013 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியோகு தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் வெகுசிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வினைச் சிறப்பிக்குமுகமாக பிரதம விருந்தினராக திரு. எம். பரமதாசன் (மாவட்ட உதவிச் செயலாளர், மன்னார்) அவர்களும் சிறப்பு விருந்தினராக திரு. என். ராஜமனோகரன் (சமூகசேவைகள் உத்தியோகஸ்தர் சமூக சேவைகள் திணைக்களம், வடமாகாணம்) அவர்களும், விசேட விருந்தினர்களாக திருமதி. எம். யேசுநேசன் (சமூகசேவைகள் உத்தியோகஸ்தர், மன்னார்) அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இதன் ஆரம்ப நிகழ்வாக பேண்ட் வாத்திய இசைக்குழுவின் இன்னிசை இசைத்தனர். அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கும் முதியோர்களுக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர்ச்செண்டுகள் வழங்கப்பட்டன.

அடுத்து பாடசாலைக்கொடி கல்லூரி முதல்வரால் ஏற்றப்பட்டு பாடசாலைக்கீதம் இசைக்கப்பட்டு கொடிக்கு மரியாதை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இறைவணக்கமும் இடம்பெற்றது. அடுத்து சிறுவர் கழகத் தலைவர் செல்வன். இ. வை. டிலான் சோசை வரவேற்புரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனமும், பின் திருக்குடும்ப கன்னியர்மடத் தலைவி அவர்களால் ஆசியுரையும் வழங்கப்பட்டது. அத்துடன் கவிதை, குழுப்பாடல், பேச்சு யாவும் மாணவர்களால் வழங்கப்பட்டன. ஆசிரியர் சார்பாக முதியோர் எம் முத்துக்கள் என்ற கவிதையும், அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை, கல்லூரி முதல்வரின் உரை யாவும் இடம்பெற்றன. இவ்வுரைகளின் சாரம்சமாக சிறுவர்களின் கடமைகள் பொறுப்புக்கள் முதியோரை நாம் எப்படி மதிக்க வேண்டும், அவர்களின் முதுமைக் காலத்தில் எப்படி அவர்களுக்கு உதவ வேண்டும், எப்படி அவர்களின் மனம் நோகாமல் நடந்துகொள்ள வேண்டும், சிறுவர்கள் முதியோரை எப்படி பேணவேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் இம்முறை க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் பரீட்சை எழுதும் மாணவர்கள் முதியோரின் கால்களில் விழுந்து வணங்கி ஆசிரைப் பெற்றனர்.


அடுத்து கிராமத்தில் வயதில் முதிர்ந்த இரு முதியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், வருகை தந்த அனைவருக்கும் விசேடமாக செய்யப்பட்ட அன்பளிப்புப் பொருட்களை பாடசாலை முதல்வர் வழங்கி கௌரவித்தார். அடுத்து முதியோர்களால் நடனம், பாடல் போன்ற கலை நிகழ்வுகள் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து சிறுவர் கழக செயலாளரினால் நன்றியுரை வழங்கப்பட்டு இறுதியாக நண்பகல் 1.00 மணியளவில் நிகழ்வுகள் யாவும் இறைவணக்கத்துடன் நிறைவடைந்தன.

**தகவல் : அதிபர், மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம், வங்காலை.**

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# இன, மத, மொழி பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைக்கும் சக்தி கல்வி ஒன்றுதான்

### மட்டக்களப்பு ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை



பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு அளிக்கக்கூடிய அதி உயர் சொத்தாக கல்வி விளங்குவதோடு ஒரு குழந்தையின் வாழ்வில் அன்னையே முதலாவது ஆசானாக விளங்குகிறார். கல்வியை வழங்குபவன் கடவுளுக்கு ஒத்தவனாகக் கணிக்கப்படுகின்றான். அதன் அடிப்படையில் அன்னைக்கு அடுத்தபடியாக ஆசிரியர் விளங்குகிறார் என மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா தெரிவித்தார். கல்முனை கார்மேல் கன்னியர் சர்வதேச ஆங்கிலப் பாடசாலையின் பெற்றோர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆயர் கூறியதாவது, தமது குழந்தைகளுக்கு எந்தவிதத்திலாவது கல்வியை வழங்கவேண்டும் என்று தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்கின்ற பெற்றோர்கள் எம்மத்தியில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அதேவேளை சில பெற்றோர்கள் தமது குழந்தைகளுடன் சிறியளவு நேரத்தைக்கூட பகிர்ந்துகொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். இன்னுமொரு வகையான பெற்றோர் தாம் கல்வியறிவு அற்றவராக இருந்தாலும் தமது பிள்ளைகள் கல்வி அறிவில் வளர வேண்டும் என்பதற்காக தம்மை அர்ப்பணிக்கின்றார்கள். அதற்காக வேண்டி தம்மை அர்ப்பணிக்கும் பெற்றோர்களும் இருக்கின்றார்கள்.

குழந்தைகள் எப்போதும் கற்கவேண்டும் என்ற ஆர்வம் காட்டுகின்றவர்கள். புதிய விடயங்களைத் தேடி அறிய வேண்டும், வினாக்களைக் கேட்க வேண்டும் என்று ஆர்வம் காட்டுவார்கள். அவர்களின் இந்த ஆர்வத்தை பெரியோர்கள் எந்த வகையிலும் மழுங்கடிக்கக்கூடாது. இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள் என்பதனை அனைவரும் மனதில் நிறுத்தவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கல்வி என்பதன் ஆங்கில பதமானது 'வெளிக்கொணர்' என்று கருதப்படுகின்ற இலத்தீன் பதத்தை மூலக் கருவாகக் கொண்டுள்ளது. பெரியோர்களாகிய நாம் சிறுவர்களின் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துள்ள அறிவு, மனப்பாங்கு, ஆற்றல்கள் போன்ற விடயங்களை வெளிக்கொணர முயற்சிசெய்ய வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் ஒரு வைத்தியராக, பொறியியலாளராக கல்வியில் உயர் அதிகாரிகளாக வரவேண்டும் என்றே கனவு காண்பார்கள். ஆனால், ஒவ்வொரு குழந்தையும் நாட்டில் விழுமியங்கள் நிறைந்த, பண்பு நிறைந்த ஒரு நல்ல பிரஜையாக மிளிரவேண்டும் என்று கனவுகாண வேண்டும். அதற்கு ஏற்றாற்போல் சிறுவயதிலிருந்தே அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

கல்வியே இன, மத, பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைக்கின்ற கருவியாக இருக்கின்றது. எமது நாட்டுக்குத் தேவையானவர்கள் பலசாலிகள் அல்ல. மாறாக ஒற்றுமை, அன்பு, சகோதரத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்பும் நல்ல பண்புநிறைந்த இந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் எமது இன்றைய நாட்டிற்கு தேவையானவர்களாக இருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் கத்தோலிக்க துறவற சபையினால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது சர்வதேச ஆங்கிலப் பாடசாலையாக இப்பாடசாலை விளங்குவதும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் பணி நோக்கமாகக் கல்வி அமைந்திருப்பதும் அந்த நோக்கத்திற்கு அமைவாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் இலங்கைக்கான மாகாணத் தலைவி அருட்சகோதரி சுமித்திரா இங்கு பிரசன்னமாகியிருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது. இங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் மிகவும் தரமானதாக அமைந்துள்ளன. சிறுவர்களைக் கொண்டு இவ்வாறான நிகழ்ச்சிகளைப் பயிற்றுவித்த ஆசிரியர்களைப் பாராட்டுகின்றேன். அதிபர் அருட்சகோதரி எம். லூக்கிறிஸையும் இப் பாடசாலையை ஆரம்பிக்க நிதி உதவி வழங்கி வருகின்ற மைக்கலையும் நான் பாராட்டுகின்றேன் எனக்கூறினார்.

## திரு. அம்புறோஸ் பீற்றருக்கு 'சேவைச்சுடர்' விருது

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இயங்கும் அருளாளர் ஜோசேவ்வாஸ் மன்றத்தினால் மன்ற உறுப்பினருக்காக வழங்கப்படும் அதி உயர் விருதான 'சேவைச்சுடர்' விருது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சமூக சமய கலை இலக்கியப் பணியாளருமான திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இவர் ஏற்கனவே மன்றத்தினால் வழங்கப்பட்ட "மறை வளர்க்கும் பணி" விருதினையும் மற்றும் பல விருதுகளையும் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை இவ்விருதை வழங்கிவைத்தார்.

## அருளாளர் ஜோசவ்வாஸ் முனிவரின் புனிதப்பட்ட நிகழ்வுக்கான முன்னெடுப்பு



அருளாளர் ஜோசவ்வாஸ் முனிவரின் பரிந்துரையால் இடம்பெற்ற புதுமைகள் திருப்பீடத்தால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு, விசுவாசிகள் அனைவரும் பங்கு மட்டத்திலும், பணி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளிலும் புனிதர் பட்டத்திற்கான செபத்தை உருக்கமாக செபிக்கும்படியாகவும், அருளாளர் ஜோசவ்வாசைப் பின்பற்றி பிறரன்புச் செயல்களில் வாஞ்சையோடு ஈடுபடுமாறும் அருளாளர் ஜோசவ்வாஸ் முனிவரின் புனிதர்பட்ட நடவடிக்கைகளுக்கான தேசிய செயலகத்தினால் விடுக்கப்பட்ட விசேட குறிப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கை கரிற்றாஸ் 45வது வருட பூர்த்தி




இலங்கை செடேக் கரிற்றாஸ் அமைப்பின் 45வது வருட பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற விசேட நிகழ்வுகளில் விசேட அம்சமாக நன்றித் திருப்பலி 17.09.2013 அன்று செடெக் சிற்றாலயத்தில் அப்போஸ்தலிக்க பிரதிநிதி அதிமேதகு ஜோசப் ஸ்பிட்டேரி ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஆயர் நோபேட் அந்திராடி ஆண்டகை, மற்றும் ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகை மேலும் ஆரம்பகால இயக்குனரான அருட்தந்தை ஜோ பர்னாந்து அடிகளார் உட்பட பல குருக்கள், துறவிகள் மற்றும் பல்நாட்டு பிரதிநிதிகள் ஒன்றுசேர்ந்து சிறப்பித்தனர்.

அப்போஸ்தலிக்க பிரதிநிதி உரையாற்றுகையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைப் பின்பற்றி பிறருக்கு சேவை செய்யும்போது முதலில் ஏழைகளை இதயங்களில் ஏற்று அவர்களோடு ஒரு உறவை ஏற்படுத்திய பின்னரே கிறிஸ்தவ அன்புச் சேவை இடம்பெற வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

## இறையடியார் தோமஸ் கர்தினால் குரே இறைபதம் அடைந்த 25ஆம் ஆண்டு நினைவு

இறையடியார் தோமஸ் கர்தினால் குரே ஆண்டகை இறைபதம் அடைந்ததன் 25ஆம் ஆண்டு பூர்த்தியான ஐப்பசி 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று தேவத்தையில் தற்போதைய கர்தினால் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இறைமக்கள் ஒன்றுசேர்ந்து கர்தினால் இறையடியார் தோமஸ் குரேயை திருச்சபைக்கு தந்தமைக்காக இறைவனுக்கு நன்றிகூறி கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

இறையடியார் தோமஸ் குரே ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள், இத்திருப்பலியில் கலந்துகொண்டது சிறப்பம்சமாக அமைந்தது. அவருடைய ஞாபகமாக தபால் உறை மற்றும் முத்திரையும் வெளியிடப்பட்டது.



## கொழும்பு குருக்களுக்கான ஒன்றுகூடலில் 400 குருக்கள் பங்கேற்பு

கடந்த செப்ரம்பர் மாதம் 21,22ஆம் திகதிகளில் கொழும்பு உயர் மறைமாவட்டக் குருக்களுக்கான ஒன்றுகூடல் பேராயர் மற்றும் துணை ஆயர்கள் தலைமையில் இடம்பெற்றது. 400க்கும் மேற்பட்ட குருக்கள் இதில் ஒன்றுகூடி இருந்தனர். இதன்போது உயர் மறைமாவட்டத்தில் திருச்சபையில் மறுமலர்ச்சி மற்றும் அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் ஆராயப்பட்டன.

- கத்தோலிக்க திருமறையில் அழகையும் அதன் அர்த்தங்களையும் புரிந்துகொள்வதற்கான அழைப்பு.
- கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுக்களுக்கான பதிலடி.
- மக்கள்மீது கரிசனையுடன் அவர்களின் இன்ப துன்பங்களை பகிர்ந்துகொள்ள குருக்களுக்கான அழைப்பு.
- மரியாவின் ஆண்டும், அதன் செயல் திட்டங்களும். இது தொடர்பாக பேராயருடைய மேய்ப்புப்பணி மடலில் குறிப்பிட்டிருக்கும், நிகழ்ச்சிகளை துரிதகதியில் இயக்குதல்.
- சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான விடுமுறை களியாட்ட நிகழ்வுகள். இதனூடாக திருவிவிலியம், திருமறை, கிறிஸ்தவ வாழ்வு பற்றிய விழுமியங்களைப் புகட்டுதல்.
- பங்குக் குருக்கள் மற்றும் துறவற சபைகளுக்கிடையில் உறவும், பொது மேய்ப்புப் பணியில் அனைவரது பங்களிப்பும்.

## தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணிக்கு வித்திட்டவர் ஆயர் றோச் ஆண்டகையே

**– மேதகு இம்மானுவேல் ஆண்டகை –**




தனிநாயகம் அடிகளார் இம்மானுவேல் ஆண்டகை

கொழும்பு கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி இலக்கிய மன்றமும், கொழும்பு திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடாத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா கடந்த புரட்டாதி மாதம் 28ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கூறியதாவது, தூத்துக்குடி மறைமாவட்டத்தின் முதல் ஆயர் மேதகு திபூசியஸ் றோச் ஆண்டகை தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிக்கு வித்திட்டவர் ஆவார். றோச் ஆண்டகை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். உரோமையில் தனது குருத்துவக் கல்வியை முடித்துக் கொண்ட தனிநாயகம் அடிகளார் கேரள மாநிலத்தில் உள்ள திருவனந்தபுரம் வந்து அங்கிருந்து தூத்துக்குடி மறைமாவட்டத்தில் சேர்ந்தார். இவரை றோச் ஆண்டகை அழைத்து தூத்துக்குடி மறைமாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் பாடசாலையில் ஐந்து வருடங்கள் கல்விகற்பிக்கப் பணித்தார். அடிகளாரின் தமிழ் ஆர்வத்தைக் கண்டுகொண்ட ஆயர் இவரை அங்கிருந்து சென்னையில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை தொடர உதவிசெய்தார். அதனைத் தொடர்ந்தே தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி விரிவடைந்து வளர்ந்து உலகப் புகழ் பெற்றது. இந்நிகழ்விற்கு தலைமைதாங்கி உரையாற்றிய தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. இரகுபரன் கூறியதாவது, இந்த அளவிற்கு தனிநாயகம் அடிகளார் உலகப் புகழ்பெறக் காரணம் அவரிடம் விளங்கிய மொழிப் புலமையே ஆகும். அவரைப்போல் ஒருவர் அன்றும் இன்றும் என்றுமே இருந்ததில்லை எனப் புகழாரம் சூட்டினார். கொழும்பு திருமறைக்கலா மன்ற கலைஞர்கள் வழங்கிய நடனங்கள் மேலும் விழாவிற்கு மெருகூட்டின. கொழும்பு திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் திரு. அம்புறோஸ் பீற்றரின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

## முருங்கன் பிரதேச வைத்தியசாலையில்
# இலவச மருத்துவ முகாம்



மன்னார் டிலாசால் அருட்சகோதரர்கள், புனித டி மசனட் கல்லூரி, கந்தானை (லசாலியன் பாடசாலை) பழைய மாணவர்கள், இலங்கை வைத்திய சங்கம் ஆகியோரின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க மன்னார்க் கிளையும் மன்னார் பிராந்திய சுகாதார பணிமனையும் இணைந்து மன்னார் மக்களின் மருத்துவ தேவை கருதி, பல துறைகளிலும் தேர்ச்சிபெற்ற நாட்டின் பல பாகங்களிலும் பணிபுரிந்த வைத்திய நிபுணர்களை அழைத்துவந்து இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

முருங்கன் பிரதேச வைத்தியசாலையில் மு. ப 8.30 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகான சபை சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டி மெல் மற்றும் கந்தானை டிலாசால் அருட்சகோதரர்கள், முருங்கன் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் திரு. ஓஸ்மன் சாள்ஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெ. ஜெ. கென்னடி, ஆளுனர் சபை உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் அலுவலர்கள் பங்குபற்றி இந்நிகழ்வினைச் சிறப்பித்தனர்.

காலையில் 800 பேர் வருகை தந்திருந்தபோதும் சிகிச்சை முகாமின் முடிவில் 1,200 பேர் வரையில் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்தச் சிகிச்சை முகாமில் குழந்தைகள் முதல் முதியவர்களெனப் பலதரப்பட்ட நோயாளிகளும் சிகிச்சையினைப் பெற்றனர்.

பின்வரும் நோய்களுக்கான சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

1. கண் சிகிச்சை 2. நீரிழிவு, ஆஸ்மா, குருதி அழுத்தம் 3. நோவு, கட்டி, காயங்களுக்கான சிகிச்சை 4. பற்சிகிச்சை 5. மகப்பேறு மற்றும் பெண்களுடன் தொடர்புபட்ட நோய்கள் 6. வயது வந்தவர்களுக்கான கல்சியக் குறைப்பாடு, எலும்புடன் தொடர்புபட்ட நோய்கள் மற்றும் 7. இருதய நோய்கள்

கண்சிகிச்சையினைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான சத்திர சிகிச்சைக்காக 80 பேர் முதற்கட்டமாக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இச்சிகிச்சை முகாமிற்கான அறிவித்தல்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், பதிவுகள் 17.10.2013 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக முருங்கன் வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டவேளை 600 பேர் வரையில் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கௌதம புத்தருக்கு ஏன் இந்த நிலை?
## ஓர் கருத்துப் பகிர்பு

மதம் என்பது மனிதனை ஆன்மீக வழியில் நெறிப்படுத்த உதவும் மிகமுக்கியமான நிறுவனமாகும். இதன் அடிப்படையில் உலகில் மக்கள் பல மதங்களைப் பின்பற்றித் தம்மை ஆன்மீக வழியில் நெறிப்படுத்தி வருவதுடன் தம் கடவுளின் மாண்பை மேன்மைப்படுத்தி வருகின்றனர்.

இதேபோல் நம் இலங்கைத்தீவிலும் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் செயற்பட்டுவருகின்றன. அவரவர் தத்தம் மதத்திற்குரிய வழிபாடுகளையும், நெறிமுறைகளையும், தத்தம் கலாச்சார வழிகளையும் பின்பற்றி வருகின்றனர். மிகமுக்கியமானது என்னவெனில் மதம் என்பது கடவுளைப் பிரதிபலிப்பது. ஆகவே அது அன்பையும், நீதியையும், நேர்மையையும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பது அவசியம். மதத்தை அடிப்படையாகக் கொண்டு வன்செயல்களிலே, அடாவடித்தனங்களிலே இறங்குவது அம்மதத்தைச் சார்ந்த இறைவனை அவமதிப்பிற்கு உள்ளாக்குவதாயும், துதிக்க வேண்டியவரை தூசணிப்பதாயும் முடிகிறது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது பெருமதிப்பிற்குரிய கௌதம புத்தரின் சிலைகளையும், விகாரைகளையும், பிற மதத்தவர் மத்தியில் மாத்திரமல்ல, அவர்களின் காணிகளில் பலாத்காரமாக நிறுவுவதும், அம்மக்களை மலர் வைக்கும்படியும், தீபமேற்றும்படியும் கட்டாயப்படுத்துவதும் அம்மக்களிடையே புத்தரின்மேல் வெறுப்பையும் அவகீர்த்தியையும் உண்டாக்குவதாக முடிகிறது. இப்படியான சிறுமைத்தனமான செயல்கள் புத்தருக்கும், அம்மதம் சார்ந்த மக்களுக்கும் இந்த உண்மையை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. ஆகவே தயவுசெய்து கௌதம புத்தரின் பக்தர்கள் என்று உங்களைக் காட்டிக்கொண்டு அவரை அவலநிலைக்கு உள்ளாக்காதீர்கள் என்று மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஞா.வி.இரட்ணசிங்கம், 130,2ம் குறுக்குத்தெரு, வவுனியா.**

## காணாமல்போனோரின் விபரங்களை திரட்டும்
# மன்னார் பிரஜைகள் குழு
## 2,301 பேரின் விபரங்கள் கையளிப்பு

இலங்கையில் காணாமல்போயுள்ளவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அண்மையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்கு விபரங்களை வழங்கி உதவும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவினர் வட மாகாணத்தில் தகவல்களைத் திரட்டிவருகின்றனர். நவம்பர் மாதம் 6ஆம் திகதி மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்திரு. இ. செபமாலை அடிகளார் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவுக்கு காணாமல்போன 2,301 பேரின் (இரண்டாயிரத்தி முன்னூற்றி ஒருவரின்) விபரங்களை கொழும்பில் வைத்துக் கையளித்துள்ளார்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி நியமித்துள்ள ஆணைக்குழுபற்றி பொதுமக்கள் கவனமில்லாமல் இருந்து விடக்கூடும், இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டுவிடக்கூடும் என்பதற்காகவே தாங்கள் பொதுமக்களிடமிருந்து இந்தத் தகவல்களைத் திரட்டி ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் தேவசகாயம் புலேந்திரன் சிந்தாத்துரை தெரிவித்தார்

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் முதல் தொகுதியாகத் திரட்டப்பட்டுள்ள தகவல்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதுடன் மேலும் கால அவகாசம் கேட்டுப்பெற்று, தற்போது இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவர்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் சிந்தாத்துரை கூறினார்.

பல வருடங்களுக்கு முன்னர் காணாமல்போயுள்ள தமது உறவுகளைத் தேடுபவர்கள் பல இடங்களுக்கும் அலைந்தும் எந்தவிதமான பயனும் கிடைக்காததனால், அவர்கள் இத்தகைய பதிவு நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்திருப்பதனால் காணாமல்போனவர்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் தயக்கம் காட்டி வருவதாக மன்னார் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டுகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமல்போயுள்ளவர்கள் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்காகத் தனியான விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்திருந்தது. அதற்கமைவாகவே ஜனாதிபதி இந்த புதிய ஆணைக்குழுவை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் காணாமல்போயுள்ளவர்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறையான, நம்பகமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ. நா.வும் சர்வதேச நாடுகளும் இலங்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற நிலையிலேயே அரசாங்கம் இந்தப் புதிய ஆணைக்குழுவை நியமித்துள்ளது. இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே தெரிகின்றது என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

# ஆசிரியர் ஞானராஜ் நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிப்பு



இலங்கை கல்வி அமைச்சினால் ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி 'சிறந்த ஆசிரியர்' என்ற கௌரவத்தையுடைய கல்வி அமைச்சின் அதிசிறந்த விருதான 'பிரதீபா பிரபா' விருது 2013ம் ஆண்டில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் ஆசிரியர் திரு ப. ஞானராஜ் அவர்களுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இக்கௌரவிப்பு நிகழ்வு 05.10.2013 சனி காலை 10.00 மணியளவில் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் இலங்கை கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்த்தன அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதம மந்திரி கௌரவ டி. எம்.ஜயரத்தின அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# மன்னார் கல்வி வலயத்தில் இருந்து சிறந்த ஆசிரியர்களாக, சிறந்த அதிபர்களாக 'பிரதீபா பிரபா' விருதுபெற்றோர் விபரம்

### சிறந்த ஆசிரியர் விருதுபெற்றோர்

திரு. பி. ஞானராஜ் - மன்/ சென். சேவியர் ஆண்கள் கல்லூரி
திருமதி எஸ். யோகராஜ் - மன்/ கௌரியம்பாள் அ.த.க.பா
திருமதி என். பிரான்சிஸ் - மன்/ சென். சேவியர் பெண்கள் கல்லூரி
திரு. எஸ். நெடுங்குளத்தர் - மன்/ முசலி ம.வி
திருமதி.ஜி.அந்தோனிப்பிள்ளை - மன்/சூ. கட்டைக்காடு றோ.க.த.க.பா.

### சிறந்த அதிபர் விருது பெற்றோர்

திரு. ஏ. ஆர். அமலதாசன் - மன்/ வஞ்சியன்குளம் றோ.க.த.க.பா
திரு. பி. சந்தியோகு - மன்/ முருங்கன் ம.வி.
திரு. ஐ. தயானந்தராஜா - மன்/ சித்திவிநயாகர் இ. க.
திரு. ஏ. சி. பஸ்மி - மன்/ கரிசல் றோ.க.த.பா

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை தேவைதானா?

## கனடாவில் இருந்து ஜெனிவி காணிக்கைநாதன்



இலங்கையின் கல்வித்திட்டத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அவசியமா? இது தேவைதானா? மாணவர்களுக்கு - அதுவும் குழந்தைகளுக்கு மகிழ்ச்சிகரமான கற்பித்தல் அவசியம். இந்தப்பரீட்சையைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்கு மகிழ்ச்சியில்லை. இது மாபெரும் சுமை. இது மாணவர்களுக்கான போட்டிப்பரீட்சையில்லை. பெற்றோர்களுக்கான கௌரவப்பரீட்சை, அடுத்து பாடசாலைகளுக்கிடையிலான போட்டி, மிகவும் முக்கியமான விடயம் என்னவெனில் ஆசிரியர்கள் கல்வி எனும் பெயரில் செய்யும் சேவையான வியாபாரம்.

அன்று பாரதி பாடினார்.

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு
என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா ...

ஆனால் புலமைப்பரிசில் மாணவர்கள்

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கஸ்ரம் கொடுக்கம் நல்ல படிப்பு
மாலை முழுவதும் படிப்பு – பின்பு
நித்திரை, சாப்பாடு இல்லாத படிப்பு
என்று வழக்கப்படுத்துக்கொள்ளு பாப்பா

என்று நாம் பாரதியின் பாடலை மாற்றிப்பாட வேண்டும். இது என்ன மாதிரி எனில்... "குருவி தலையில் பனங்காயைப் பாருங்க" "கட்டெறும்பு முதுகில கூடை சுமையைப் பாருங்க" என்ற கதையாக உள்ளது.

இலங்கையில் உள்ள கல்வியியலாளர்களுக்கு இந்தத்தவறு புரியவில்லையா? இவர்கள் கல்வி உளவியலைக் கற்கவில்லையா? மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களில் ஏன் கல்வியை பற்றிய கசப்புணர்வை விதைக்க வேண்டும்? எல்லா மாணவர்களுமே திறமையுள்ளவர்கள். அவர்களின் திறமை கல்விப்பொது சாதாரணதரப்பரீட்சை, உயர்தரப்பரீட்சைகளில் சோதிக்கப்படுவது நல்லது. ஏனெனில் அவர்களுக்கு அந்த வயதில் எதையும் சீர்தூக்கிப்பார்க்கும் அறிவு இருக்கும்.

புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகி, முடிவுகளைத் தாங்கமுடியாமல் இலங்கை முழுவதும் எத்தனை விதமான அசம்பாவிதங்கள்! ஒரு புள்ளியால், இரண்டு புள்ளியால் வெட்டுப்புள்ளியை நெருங்க முடியாத மாணவர்களின் பிஞ்சு உள்ளங்களை கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

உளவியலாளர்கள் பொதுவாக ஸ்கின்னர், சிக்மன்புரொயிட், ஜீன்பியாஜே போன்றவர்கள் ஒரு வயது தொடக்கம் பதினொரு வயதுவரை பிள்ளைகளை குழந்தைகள் என்ற அமைப்புக்குள்ளேயே வகைப்படுத்துகின்றனர். அது இலங்கை கல்வியலாளர்களுக்குத் தெரியாதா?

அதிலும் இந்தப்பரீட்சைப் பெறுபேறுகளைப் பொறுத்தவரை பல குழறுபடியான தகவல்கள் வேறு. எதிலும் நீதி, சமத்துவம், உண்மைகளைக் காணமுடியவில்லை.

'புலமை' என்பதன் கருத்து தெரிந்தவர்கள் நாம் ஐந்தாம்தர மாணவர்களிடம் எந்தப் புலமையை பரீட்சிக்க முடியும்? அதுக்கு அவர்கள் எந்தவிதத்தில் தகுதியானவர்கள்? சிந்தியுங்கள்.

வெளிநாடுகளில் பொதுவாக பரீட்சைகளில் சரியான விடைகளுக்கு சரி போடுவார்கள். தவறான விடைகளுக்கு பிழை போடமாட்டார்கள். ஏன் தெரியுமா? ஒன்று அவர்களது மனம் பாதிக்கப்படக்கூடாது. இன்னொன்று தவறு என்று ஒன்றும் இல்லை, மாணவர்களின் அறிவிற்கு அது சரி. ஆனால் இதனை இவ்வாறு எழுதினால் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று மாணவர்களை வழிப்படுத்துவார்கள். அதாவது எதிர்மறையான எண்ணங்களில் மாணவர்களை வளரவிடாது நேர்மறையான எண்ணங்களில் வளர வழிப்படுத்துவார்கள்.

இறுதியாக கல்விச் சமூகத்திற்கும் பெற்றோர்களுக்கும் விடுக்கின்ற அன்பான தாழ்மையான வேண்டுகோள்!

உங்கள் குழந்தைகளை நீங்கள் குழந்தைகளாக சந்தோசமாக வளரவிடுங்கள். சுமக்க முடியாத சுமைகளை அவர்களின்மேல் சுமத்தாதீர்கள். அவர்கள்மேல் அக்கறையாக இருங்கள். கண்டிப்பாக இருங்கள். அன்பாக இருங்கள், சரியாக நல் ஒழுக்கங்களோடு வளர்த்தெடுங்கள்.

கல்வியை கசப்பாக அல்ல கனிவாக கற்றுக்கொடுங்கள், சுமையாக அல்ல சுகமாகக் கற்றுக்கொடுங்கள். பாடசாலைகள் குழந்தைகளுக்கு ஆரோக்கியமானதாக மகிழ்ச்சிகரமானதாக அமையட்டும்.

புலமைப்பரிசில் முடிவுகள் குறைந்தது 1 வாரம் பேசப்படும். அத்தோடு மறைந்துவிடும். அரசாங்க பணியாளர்களின் பிள்ளைகளுக்கு உதவிப் பணமும் இல்லை, முடிந்தால் தரமான பாடசாலைகளில் இடம். இங்கு புலமைப்பரிசில் பரீட்சையில் தேறிய மாணவனுக்கு ஏன் தரமான பாடசாலை? தூரமான பாடசாலை என்றபடியால்தானே இங்கு தேறியிருக்கின்றான்.

அதைவிட இந்தப் புலமைப்பரிசில் பரிட்சையை விட்டுவிட்டு வறிய மாணவர்களுக்காக நிதி உதவித்திட்டங்களை அல்லது வறிய மாணவர்களுக்கான நிதியம் ஒன்றை உருவாக்கினால் பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால் இலங்கைப் போர் எம் மக்களை மிகவும் வறியவர்கள் ஆக்கியதுதான் உண்மை. அரசு எம்மக்களுக்கு செய்கின்ற ஒரு பரிகாரமாகவும் அமையும். கல்விச்சமூகமே! பெற்றோர்களே! ஆழமாக சிந்தியுங்கள் புலமைப்பரீசில் பரீட்சை அவசியம்தானா?

## உலகத் திருச்சபைச் செய்திகள்

### தனிமனிதர்மீது முதலில் கவனம் செலுத்தினால் மட்டுமே


# நல்லதோர் உலகு அமையும்

### திருத்தந்தை பிரான்சிஸ்

தனிமனிதர்மீது முதலில் கவனம் செலுத்தினால் மட்டுமே மனிதரின் ஆன்மீகம் உட்பட அவரின் ஒவ்வொரு கூறும் கவனத்தில் எடுக்கப்படும். மனித வளர்ச்சி முழுமைபெற்றால் மட்டுமே நல்லதோர் உலகு அமையும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஏழைகள், நோயாளிகள், கைதிகள், தேவையில் இருப்போர், அந்நியர் ஆகியோர் உட்பட யாரும் ஒதுக்கப்படாமல் இருந்தால் மட்டுமே எதையும் தூக்கியெறியும் கலாச்சாரத்தை முறியடிக்க முடியும். சந்திக்கும் அனைவரையும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே நல்லதோர் உலகு அமையும் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 2014ம் ஆண்டு ஜனவரி 19ம் திகதி கத்தோலிக்கத் திருஅவை கொண்டாடும் அனைத்துலக குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் நாளுக்கென செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், நல்லதோர் உலகு அமைவதற்கு ஒவ்வொரு மனிதரும் சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

நல்லதோர் உலகின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதேவேளை, இழுக்கு ஏற்படுத்தும் வறுமையின் பல்வேறு வடிவங்கள் குறித்து நாம் மௌனமாய் இருக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். குடியேற்றதாரர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் களைவதற்கு அனைத்துலக அளவில் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.



குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோரைக் கருத்தில்கொண்டு நல்லதோர் உலகை அமைக்கும் முயற்சியில் குடியேற்றதாரர் குறித்த முற்சார்பு எண்ணங்கள் களையப்பட வேண்டும் என்பதை திருத்தந்தை வலியுறுத்தினார்.

“குடியேற்றதாரரும் புலம்பெயர்ந்தோரும் : நல்லதோர் உலகை நோக்கி...’ என்ற தலைப்பில் நூறாவது அனைத்துலக குடியேற்றதாரர் மற்றும் புலம்பெயர்ந்தோர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

## மிகப்பழமையான தேவாலயம் பிலிப்பைன்ஸ் நிலநடுக்கத்தில் சேதம்



பிலிப்பைன்ஸ்ஸின் மத்திய பகுதியை தாக்கிய நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 156ஆக உயர்வடைந்துள்ளது.

மத்திய பிராந்தியத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேவாலயங்களும் பாரம்பரிய மத அடையாளங்களும் இதன்போது மிகமோசமாகச் சேதமடைந்துள்ளன.

ஸ்பானிய காலனித்துவ யுகத்தின் எஞ்சியுள்ளதும் 16ம் நூற்றாண்டுக்குரிய சீபு நகரின் பஸ்லிகா திருக்குழந்தை தேவால்யமும் சேதமடைந்துள்ளது.

போகோல் பிராந்தியத்தின் பல தேவாலயங்களும் மத அடையாளங்களும் சேதமடைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் புனரமைக்க முடியாதபடி காணப்படுவதாகவும் போகோல் ஆளுநர் தெரிவித்தார்.

கடந்த 15.10.2013 முஸ்லிம்களின் பெருநாளான ஹஜ் கொண்டாடப்பட்டமையால் தேசிய விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. இதனால் பாடசாலைகள், அலுவலங்கள் மற்றும் கட்டிடங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. இதன்மூலம் அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்கப் - பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

## பாப்பரசரின் தலைமையில் இடம்பெற்ற மாபெரும் செபமாலை



உலகில் மிகவும் புகழ்பெற்ற அன்னை மரியின் 10 திருத்தலங்களை இணைத்து ரோமிலிருந்து பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தலைமையில் கடந்த 12.10.2013 அன்று இரவு 10 மணிக்கு மாபெரும் பெபமாலை நடைபெற்றது.

புனித லூர்து, புனித பற்றிமா போன்ற புகழ் பெற்ற அன்னையின் திருத்தலங்களும் இணைந்துகொண்ட இந்நிகழ்வில் ஆசியா சார்பாக அன்னை வேளாங்கண்ணி (நாகபட்டினம்) பேராலயமும் இடம்பெற்றது.

சகல திருத்தலங்களிலும் அதிநவீன கணனித்திரை மற்றும் அதிநவீன கெமரா பொருத்தப்பட்டிருந்தது.

உரோமிலிருந்து பரிசுத்த பாப்பரசர் செபம் சொல்ல மற்ற எல்லாத் திருத்தலங்களிலும் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் அவரவர் மொழிகளில் இணைந்து பதில் செபம் சொன்னார்கள். வேளாங்கண்ணியில் செபித்துக்கொண்டிருந்தவர்கள் மற்ற எல்லாத் திருத்தலங்களையும் கோடானகோடி மக்களையும் பரிசுத்த பாப்பரசரையும் கண்டுகொண்டனர். இதேபோல் ஏனைய திருத்தலங்களிலும் கண்டனர்.

## பிரேசிலில் கன்னி மரியாளுக்கான படகு ஊர்வலத்தின்போது விபத்து

**12 பேர் பலி : 6 பேரைக் காணவில்லை.**

வட பிரேசிலில் கன்னிமரியாளை கௌரவப்படுத்தும் வகையில் ஆறொன்றில் இடம்பெற்ற பாரம்பரிய படகு ஊர்வலத்தில் படகொன்று மூழ்கியதில் 12 பேர் பலியானதுடன் 6 பேர் காணாமல் போயுள்ளார்.

40 பேரை ஏற்றிச்செல்லக்கூடிய படகில் 100 பயணிகள் வரை பயணித்ததால் அளவுக்கதிகமான நிறை காரணமாக படகு மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

அமபா மாநிலத்தில் இடம்பெற்ற படகு ஊர்வலத்தில் கலந்துகொண்டு மூழ்கிய மேற்படி படகில் பயணித்து காணாமல் போயுள்ள 6 பேரைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

கன்னி மரியாளுக்கான இந்தப் படகு ஊர்வலம் சன்தானா நகருக்கும் மாநில தலைநகர் மகபாவுக்குமிடையில் வருடந்தோறும் இடம்பெறுவது வழமையாகும்.

## பாக். தேவாலயம்மீது தாக்குதல் பாப்பரசர் கடும் கண்டனம்



வடமேற்கு பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் அமைந்துள்ள தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத்தாக்குதலுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் சேர்ச் என்று அழைக்கப்படும் தேவாலயத்தின் மீது தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் கடந்த 22.09.2013 அன்று வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். அதில் 70 பேர் உயிரிழந்தனர்.

## திருத்தந்தை பிரான்சிஸ் இத்தாலிய நாளிதழுக்கு அளித்த பேட்டி

திருஅவையில் மாற்றம் கொண்டுவருவதற்கு தான் முயற்சிப்பதாகவும், இதன்மூலம் திருஅவை மீண்டும் இறைமக்களின் சமூகமாக மாறும் எனவும் லா ரிப்லிக்கா என்ற இத்தாலிய தேசிய நாளிதழுக்கு அளித்த தனிப்பட்ட நேர்காணலில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். ஆன்மாக்களைக் கவனிக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் ஆயர்களும் குருக்களும் அருட்பணியாளர்களும் இறைமக்களின் சேவையில் தங்களை அர்ப்பணிக்கும் இடமாக இறைமக்களின் சமூகம் அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

800 ஆண்டுகளுக்கு முன்னர் புனித பிரான்சிஸ் அசிசியார் வித்திட்ட ஏழைத் திருஅவை இக்காலத்தில் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது. இளையோரிடையே நம்பிக்கையை நிலைநாட்டவும், முதியோருக்கு உதவவும், வருங்காலம் நோக்கிக் கதவுகளைத் திறக்கவும், அன்பைப் பரப்பவும் இத்தகைய திருஅவை அவசியம் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒதுக்கப்பட்டவர்கள் உட்பட ஏழைகள் மத்தியில் ஏழையாக இருக்கும் திருஅவையும் அமைதியைப் போதிக்கும் திருஅவையும் தேவை என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## புனிதர்களின் பாதையில்

### புனித பெரிய ஆல்பர்ட்

**ஆயர், மறைவல்லுனர் - (கி.பி. 1193 - 1280)**



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

ஜேர்மனியில் டான்யூப் நதியோரத்தில் லவிங்கன் என்னும் இடத்தில் இவர் தோன்றினார். பதுவை நகரிலும், பாரிசிலும் கலைகள் பல கற்றார். பிறகு தொமினிக்கன் சபையில் சேர்ந்தார். அங்கு படிப்பு சற்றே கடினமாகத் தோன்றவே ஒரு நாளிரவில் யாருக்கும் தெரியாமல் ஓடிவிட எண்ணினார். யாரும் பார்க்காத முறையில் சுவர் ஏறிக் குதிக்க முயன்றார். அப்போது மரியன்னையின் குரலைக் கேட்டார். “ஆல்பர்ட்! உனக்கு அனைத்து வரங்களையும் பெற்றுத்தர என்னால் இயலும் என்பது உனக்குத் தெரியாதா? உன் அறைக்குப் போ” என்ற வார்த்தைகளைக் கேட்டவுடன் தன் அறைக்குச் சென்றார். அன்றுமுதல் படிப்பு அவருக்கு எளிமையாக இருந்தது மட்டுமன்று முதல் மாணவராகவே தேர்ச்சிபெற்று வந்தார்.

இவர் பௌதிகம், வேதியல், வான சாஸ்திரம், மினராலஜி தாவர இயல், பயலோஜி என்று இதுபோன்ற கலைகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார் என்பதைவிட நமக்கு வியப்பை உண்டுபண்ண வேண்டியது அரிஸ்டாட்டிலின் தத்துவ ஞானத்தையும், கிறிஸ்தவ வேதக்கலையையும், ஒருமுகப்படுத்தினார் என்பது மட்டுமே. அரிஸ்டாட்லின் தத்துவ ஞானத்தைக் கிறிஸ்தவ ஒளியில் காண்பித்துவிட்டார் என்பதை இவரது மிகப்பெரிய சாதனை என்று கூறலாம். இவரது மாணவர் புனித தாமஸ் அக்வினாசின் போதனைகளும் எழுத்துக்களும் தாக்குதலுக்கு உள்ளானபோது அதுவும் பாரிஸ் நகர் ஆயர் ஸ்டீபன் என்பவர் இதற்குக் காரணமாயிருந்த சூழலில், பாரிஸ் விரைந்தார் ஆல்பர்ட். தாமஸ் அக்வினாசின் கருத்துக்கள் முற்றிலும் சரியானவையே என்று வெற்றிகரமாக வாதாடினார்.

பல குருமடங்களிலும் திறம்படக் கற்றுத்தந்தார். ரீகன்ஸ்பர்க் நகரின் ஆயராக உயர்வு பெற்றபின், எங்கெல்லாம் ஒற்றுமை சீர்குலைந்திருந்ததோ அங்கேயெல்லாம் அதனை நிலைநாட்ட அரும்பெரும் முயற்சிகள் செய்தார். பல அரிய நூல்கள் எழுதியுள்ளார். பிரான்ஸ் நாட்டினரையும், ஜெர்மனி நாட்டினரையும் பொஹிமியா சிலுவைப் போருக்குத் தயாரித்தார்.

அரிஸ்டாட்டில் என்ற புகழ்வாய்ந்த தத்துவஞானி தந்த ஞானத்தைக் கிறிஸ்தவ நற்செய்தியின் ஒளியில் ஒளிரச் செய்த பெருமை இவருக்குரியது. இவருக்கு மறைவல்லுநர் பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவர் புனித அக்வீனாஸ் தோமையாரின் ஆசிரியர்.

இவரது காலத்தில் மரியன்னையைப் புகழ்ந்து இவர் எழுதிய அளவுக்கு வேறு யாரும் அவ்வளவு விரிவாக எழுதவில்லை.▯



# அதிர்வுகள்......!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 25.


உதயன்
மலர்ந்தது
தமிழர் அரசு
மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன்
கூட்டமைப்பு வடக்கில் அமோக வெற்றி

# கூத்துக்காட்டுகின்றார்களா கூட்டமைப்பினர்!

**தீர்க்கமான தீர்மானம்**

ஆவணித்திங்கள் வெளியான 'அதிர்வுகள்' கடந்த 2013 வடமாகாணசபைத் தேர்தலில் எத்தகைய தாக்கத்தை - மாற்றத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது என்பதைப் பலர் தெரியப்படுத்தி இருந்தார்கள். அவர்களுடைய பின்னூட்டல்களுக்கு தலைசாய்த்து நன்றி சொல்கிறேன். ஆவணித்திங்கள் 'அதிர்வுகள்',"...தமிழ்த்தேசிய கூட்டமைப்பை வீழ்த்துவது தமிழர் அபிலாசைகளை – தமிழர் வாழ்வுரிமையை தோற்கடிப்பதற்குச் சமமானது என்பதைத் தமிழ்மக்கள் நினைவில் நிறுத்தவேண்டியவர்கள் ஆகின்றனர்..." என்று தெளிவுபடுத்தி இருந்தது.

"... இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே இன்று ஒட்டுமொத்த தமிழ்மக்கள் நலன் சார்ந்த தமிழ்த் தேசியக் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கின்றது என்பதை தமிழ்மக்கள் இம்மாகாணத் தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும் என சமூகத் தலைவர்களும் புத்திஜீவிகளும் எதிர்பார்த்து நிற்கின்றனர். எனவே, ஒவ்வொருவரும் வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களித்து தமிழர் அபிலாசைகளை வெளிப்படுத்த முன்வருவது நம் அறக்கடனாகும்" என்று வடமாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமிழர் அபிலாசைகளுக்கே வாக்களித்து தமிழரின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்தோம். இறுதியில்,'உரிமையா? சலுகையா? வரலாற்று முடிவு இன்று' என்று தேர்தல் தினத்தன்று 'உதயன்' தலைப்புச் செய்தியாகத் தீட்டியிருந்தது. 21.09.2013 அன்று பல்வேறு அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள், அழுத்தங்கள், குழப்பங்கள், இடையூறுகள் மத்தியிலும் வடமாகாணத்தில் 68 சதவீதமான வாக்குகள் பதிவாகி இருந்தன.

**எப்போதும் காணாத வரலாற்று வெற்றி**

2013 வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டு இருப்பினும் 38 ஆசனங்களில் ஆகக்கூடியது 24 – 25 ஆசனங்களையே பெறக்கூடியதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு என்று எதிர்வு கூறப்பட்டது. நிலவிய அரசியல் களநிலமையில் 25ஆசனங்கள் கிடைத்தாலே போதுமானது என்றிருந்தது. ஆயினும், அனைவருடைய எதிர்பார்ப்புக்கும் மேலாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 78.48 விகிதமான வாக்குகளைப் பெற்று 30 ஆசனங்களைக் கைப்பற்றி மிகப்பெரும் வெற்றியை ஈட்டிக்கொண்டது. இவ்வெற்றியானது முன்னர் எப்போதுமே காணா சரித்திர வெற்றி என வர்ணிக்கப்படுகிறது.

1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட வெற்றி தமிழர் வரலாற்றில் பேசப்படுகின்ற, கடந்த காலங்களில் பெறப்பட்ட வெற்றிகளுக்கெல்லாம் மூலமாகத் திகழ்கின்ற ஒன்றாக இருந்தது. ஆனால், 2013 வடமாகாணசபைத் தேர்தலில் பெறப்பட்ட வெற்றியானது 1977இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் கோட்பாட்டில் அமைந்த வெற்றியிலும் பார்க்க மகத்தானது என விதந்துரைக்கப்படுகிறது. "... வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வெற்றியும் சிறப்பானதுதான். எனினும், அது தொகுதி வாரித் தேர்தலில் கிடைத்த வெற்றி. மாகாணசபைத் தேர்தலில் இப்போது கிடைத்திருக்கும் வெற்றி, விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்கீழ் பெற்ற வெற்றி. இவ்வாறு விகிதாசார பிரதிநிதித்துவத்தின்கீழ் கிடைத்த வெற்றி என்பது நிச்சயம் 1977இல் பெற்றுக்கொண்ட வெற்றியைவிடவும் மேலானது" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாள் 22.09.2013அன்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

**மக்களின் ஆணைக்கு மதிப்பளியுங்கள்**

இத்தேர்தல் முடிவிலிருந்து ஒன்று மிகத்தெளிவாகப் புலப்படுகிறது. வடபகுதி மக்கள் தம் அரசியல் கொள்கையில் தெளிவாக இருக்கிறார்கள் என்பது மீண்டும் ஒருதடவை மிக உறுதியாக சர்வதேசத்திற்கும், நம் நாட்டுத் தலைவர்களுக்கும், நம் தமிழ்த் தலைமைகளுக்கும் நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. எனவேதான், வடபகுதி மக்கள் தேர்தலில் வழங்கிய அங்கீகாரம் தமிழர் அபிலாசைகளை அடைய ஜனநாயக ரீதியாகக் கொடுத்த ஆணை என்பதை வடமாகாணசபைத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இச்சிந்தனையின் அடிப்படையில்தான் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு அவர்கள், "இனியாவது மகிந்த தமிழரை மதிக்கட்டும்" என்ற தலைப்பில் 'உதயன்'இல் 24.09.2013அன்று வெளிப்படுத்திய கருத்தினை நோக்கவேண்டும். அதேபோல்,'தமிழரின் ஆணைக்கு பெருமதிப்பளியுங்கள்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியிருப்பதனையும் கவனிக்கவேண்டும்.

**சிறுமைத்தனமான செயற்பாடுகள் வேண்டாம்!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் தேர்தலுக்கு முன்னைய நாட்களில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் செய்ததுபோல சில குறுக்குவழிக் கைத்தந்திரியங்களைக் கையாண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில இடங்களில் மதுபானங்கள் தாராளமாகவே வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து தேர்தல் முடிவுகள் வெளியாகிய கையோடு வாக்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் சில 'புள்ளிகள்'இன் துணையோடு தமிழ் சிவில் சமூகப் பிரதிநிதிகளின் சிபார்சுகளை எப்படியேனும் பெற்று தமிழ் அரசியல் தலைமைகளிடம் 'போனஸ்' (Bonus) ஆசனங்களைப் பெறக் கடும் பிரயத்தனம் செய்ததாக அறியமுடிகிறது. இவையெல்லாம் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமான அணுகுமுறைகள் அல்ல என்பது மட்டும் புரிகிறது.

இத்தேர்தலில் விரும்பிய கட்சி ஒன்றுக்கும், அக்கட்சியின் விரும்பிய மூன்று வேட்பாளர்களுக்கும் புள்ளடியிட வாய்ப்பிருந்தும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புள்ளடி இட்டபின்னர் மூன்று விருப்புவாக்குகளில் தமக்கு மட்டும் புள்ளடியிட்டு மற்றய இரு புள்ளடிகளை இடவேண்டாம் என சில பச்சைச் சுயநலத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தங்கள் உறவினர்களையும் ஊரவர்களையும் ஆதரவாளர்களையும் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. அதனால், சில மாவட்டங்களில் தெரிவான உறுப்பினர்கள் இன்னும் அதிக விருப்புவாக்குகளைப் பெறமுடியாமல் போனதோடு ஒருசில ஆசனங்களையும் மேலதிகமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெறமுடியாது போனது என்றும் சொல்லப்படுகிறது. இதேபோன்ற சின்னத்தனமான - சில்லறைத்தனமான செயற்பாடுகளை கடந்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது நம்முடைய கௌரவ பாராளுமன்றத்திற்கு வேட்பாளர்களாகப் போட்டியிட்டவர்கள் செய்ததாகவும் அறியமுடிகிறது. இவை, நம்மவர்களின் 'பச்சைச் சுயநல அரசியல் சிறுமைத்தனத்தையே' வெளிப்படுத்துகிறது!

**வடமாகாண அமைச்சுப் பதவிகளின் இழுபறிக்கு முடிவு!**

வடமாகாணசபை நான்கு அமைச்சுப் பதவிகளுக்கான போட்டி தேர்தல் முடிவுகள் வெளியான கையோடே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. அமைச்சுப் பதவிகள் கட்சி அடிப்படையிலா? மாவட்ட அடிப்படையிலா? நிபுணத்துவ (திறமைசார்) அடிப்படையிலா? அல்லது வேறு ஏதாவது அளவுகோலின் அடிப்படையிலா கொடுப்பது என்ற பேச்சுக்கள் நீண்ட நாட்களாகவே வாதப்பிரதிவாதங்களாக நடந்து வந்தன. இறுதியாக, சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் ஒரு முடிவு காணப்பட்டு வடமாகாணசபை நான்கு அமைச்சர்களும் அறிவிக்கப்பட்டு 11.10.2013அன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாணசபை அமைச்சர்களும் உறுப்பினர்களும் மாகாணசபை முதலமைச்சர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இவ்விழுபறி நடந்துகொண்டிருந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் (87,870) பெற்ற திருமதி. அனந்தி எழிலன் அவர்கள் அமைச்சுப் பதவிகள் இருந்தால்தான் மக்களுக்கான பணிகளை ஆற்றமுடியும் என்றல்ல, அவை இல்லாமலே மக்களுக்கான பணிகளை ஆற்றமுடியும், அதனை அவர் ஆற்றுவார் எனக் குறிப்பிட்டது இங்கு பெருந்தன்மையோடு நினைவுகூரத்தக்கது. ஆனால், வேறு எந்த உறுப்பினர்களும் இவ்வாறான கருத்தைத் பகிரங்கமாகத் தெரிவித்ததாகத் தெரியவில்லை! அந்தளவிற்கு அமைச்சுப் பதவிகளுக்கான போட்டி நிலவியது என்பது மறைமுகமாக நிரூபிக்கப்படுகிறது!

**பதவியேற்பில் 09 பேர் பங்கேற்கவில்லை!**

இந்நிகழ்வில், 'சித்தார்த்தன் உட்பட 09 பேர் நேற்று பதவியேற்கவில்லை' எனும் தலைப்பில் "...யாழ்.மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட க.சர்வேஸ்வரன், மற்றும் புளொட் சார்பில் போட்டியிட்ட த. சித்தார்த்தன், ரெலோ சார்பில் போட்டியிட்ட க. சிவாஜிலிங்கம், மன்னார் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்ட குணசீலன், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட து. ரவிகரன், க. சிவமோகன், வவுனியா மாவட்டத்தில் புளொட் சார்பில் போட்டியிட்ட ரி. லிங்கநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட இந்திரராசா தியாகராசா ஆகிய 09 உறுப்பினர்கள் மட்டும் பங்கேற்கவில்லை" என பத்திரிகைகளில் 12.10.2013அன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதேநாளில் 12.10.2013அன்று 'வடக்கு மாகாண சபைக்கு எமது முழுமையான ஆதரவு', 13.10.2013இல் 'நடந்தவை அனைத்தையும் மறந்து சரியான பாதையில் பயணிப்போம்' போன்ற தலைப்புக்களில் புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறியிருந்த விடயங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

**தமிழர் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்க வேண்டாம்!**

ஒருசிலர், மாகாணசபை வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டதே பெரிய விடயம்! இது இப்படியிருக்க, "அமைச்சுப் பதவிதான் வேண்டும் அப்போதுதான் மக்களுக்குப் பணியாற்றுவேன்" என்றால் நிலமை எப்படியிருக்கும் என யோசித்துப் பாருங்களேன்! ஒரு விடயத்திற்கு முடிவு எடுக்க, ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண ஜனநாயகக் கண்ணோட்டத்தில் பல நேர்மறையான - எதிர்மறையான கருத்துப் பரிமாற்றங்களும் - கருத்து முரண்பாடுகளும் - கருத்து மோதல்களும் ஏற்படலாம். அது ஒருவகையில் ஆரோக்கியமானதும்கூட! ஆனால், ஒரு தீர்மானம் எட்டப்பட்டதும் அதன் பின்னர் அறுபத்தியெட்டுக் காரணங்களைக் கற்பித்துக்கொண்டும் - காட்டிக்கொண்டும் தீர்மானத்திலிருந்து விலகிநிற்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயல்! குறிப்பாக 11.09.2013அன்று நடைபெற்ற மாகாணசபை உறுப்பினர்களின் சத்தியப்பிரமாணமும் பதிவியேற்பு வைபவத்திலும் 09 உறுப்பினர்கள் கலந்துகொள்ளாதது அவர்களுக்கு வாக்களித்த தமிழ்மக்களின் முகங்களில் கரி பூசியதற்கு ஒப்பானது!

ஏனெனில், இவர்களின் பதவியேற்பு நிகழ்வில் பங்கெடுக்காததற்கான நொண்டிக் காரணங்களை இனிமேலும் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. "மக்களின் நம்பிக்கையை வீணடிக்கும் முறையில் நடந்துகொள்ளக்கூடாது" என்றும், "பதவிப்பிரமாணத்தில் கலந்துகொள்ளாதது கவலைக்குரியது மட்டுமல்ல கண்டிக்கத்தக்கது" என்றும் மன்னார் ஆயர் 13.10.2013 அன்று 'வீரகேசரி'யில் வெளியிட்ட கருத்தை வடமாகாணசபை உறுப்பினர்கள் ஆழமாகச் சிந்தையில் கொள்ளவேண்டும். தமிழர் அபிலாசைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் எவ்வகையான ஒற்றுமையின்மையும் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதை இவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இல்லையென்றால், இப்பேர்ப்பட்டவர்கள் அரசியலில் இருந்து வெகுவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படுவார்கள் என்பது உறுதி. இதனை மக்கள் கடந்த காலங்களில் தெளிவாக செய்துகாட்டி இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக, வன்னித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த (ஆகக்குறைந்தது) மூவர் மக்களால் அடுத்து வந்த தேர்தல்களில் ஓரங்கட்டப்பட்டது நினைவிருக்கும்! அவர்களுக்கான மரியாதை கருதி அவர்களின் பெயர்கள் குறிப்பிடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

**மக்களின் கடமை வாக்களிப்பது மட்டுமல்ல!**

எனவே, தேர்தலில் வாக்குப்போடுவதோடு மக்களின் கடமையும் பொறுப்பும் முடிந்துபோகவில்லை. மக்கள் விழிப்பாயிருந்து தாங்கள் வாக்களித்த பிரதிநிதிகள் மக்களுக்காகச் செயற்படுகிறார்களா என அவதானிக்கவேண்டும். அப்போதுதான் அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் பணியாற்றாத 'அரசியல் பிரமுகர்களை' அரசியல் களத்திலிருந்து வெளியேற்றி உண்மையாக மக்கள் பணியாற்றத் தயாராயிருக்கும் அன்பர்களுக்கு அச்சந்தர்ப்பங்களை வழங்கமுடியும். எல்லோரையும் எல்லாவேளைகளிலும் ஏமாற்றமுடியாது என்பதை 2013ஆம் ஆண்டு வடமாகாணசபைத் தேர்தல் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டிவிட்டது. எனவே, தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்களுக்குப் பணியாற்றுகிறார்களா என்பதை உறுதிப்படுத்துவது மக்களின் கைகளிலேயே உள்ளது என்பதை சாதாரண மக்களும் சமூகத் தலைவர்களும் மறந்துபோகக் கூடாது.

**தமிழர் அபிலாசைகளை அடையவே மக்களின் ஆணை!**

விருப்புவாக்குகளின் மூலம் ஒரு தொகை வாக்குகளை ஒவ்வொரு உறுப்பினரும் பெற்றிருந்தாலும் தமிழரசுக்கட்சியின் சின்னமான வீடு தமிழ் மக்களின் அபிலாசைச் சின்னமாகத் தற்போது விளங்குவதால் ஒட்டுமொத்தத் தமிழ்மக்களும் தமிழர் அபிலாசைகளுக்கும் வாழ்வுரிமைக்குமே வாக்களித்தார்கள் என்பதை வடமாகாணசபை உறுப்பினர்களும் வடக்கை பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் தயவுசெய்து மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல், அடுத்து வரும் தேர்தல்களில் கட்டுப்பணமும் கிடைக்காமல் போகும்! 'அடுத்த தேர்தல் வருவதற்கிடையில் உழைக்கவேண்டியதை உழைத்துவிடுவோம்' என்று எண்ணி பொருளாசைக்கும் சலுகைகளுக்கும் இடம்கொடுத்தால் வேறு தொழில்துறைகளை இப்போதே தேடிவைத்திருப்பது பிற்காலத்தில் எதற்கும் உதவியாக இருக்கும்!

நிறைவாக, 'தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று தந்தை செல்வா அன்றைக்குச் சொன்னார்; இன்றைக்கு,'கூட்டமைப்பினரை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று கௌரவ வன்னித்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறியிருக்கிறார்! அடுத்து, 'எங்கள் ஒவ்வொரு மாகாணசபை உறுப்பினரையும் இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என ஏகோபித்து வாக்களித்த மக்கள் 'அனல் பெருமூச்சு'விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்! (அதிர்வுகள் தொடர்ந்து அ...தி.....ரு.......ம் .......... கருத்துக்களுக்கு: anpuomi@yahoo.com)

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=



# உடல் மன ஆன்ம ஒருங்கிணைப்பு நெறி

வேதியர். இ. யக்கோவுசேரம்

இறைவன் படைப்பில் ஏற்றமிகு படைப்பான ஒவ்வொரு மனிதனும் இன்பமாக வாழ வேண்டுமென்றே எண்ணுகின்றான். ஆனால் இந்த இன்பத்தைப் பெறும் வழிகளில், பலர் திசைமாறிச்சென்று எதிர்மறைவிளைவுகளையே அடைந்து துன்புறுகின்றனர். இத்தகு அவலநிலைக்கு ஆளானவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். தடம்மாறிச் சென்று, முடமாகிப்போன என் வாழ்வில் கடவுள் என்னுடனாக வந்து, மடை மாற்றஞ்செய்து வழிகாட்டினார். அந்தச் செம்மை வழிதனில் சீராக நடைபயின்று, இயன்ற பணிசெய்து, அன்று நான் எண்ணிய இன்பத்தைப்பெற திடமுடன் நடைபோடுகின்றேன். இன்றும், என்றும், இன்பமாக வாழ முடியும் என்பது எனது அசயா நம்பிக்கை. இந்த நன்நம்பிக்கையை நிகழ்வாக்கும் நெறியாக 'யோகம்' எனும் ஒப்பற்ற பலன் நல்கும் "ஒருங்கிணைப்புக் கலையை" முறையாகக் கற்று 47 ஆண்டுகளாகக் கைக்கொண்டு வருகின்றேன்.

இந்த அரிய கலையின் அன்றாடப்பயிற்சியின் விளைவாக நான் அடைந்த பயன்களோ மிகப்பல. வியத்தகு வகையில் உடல், மன, ஆன்ம நலன்களும், திறன்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனால் எனது சமூக வாழ்விலும், பணிவாழ்விலும், வரும் எதிரிடைகள் சவால்களுக்கு துணிந்து முகங்கொடுத்து வருகின்றேன். இன்பத்தையும், துன்பத்தையும், சமநிலையாக ஏற்றுக்கொண்டு, எனது இலக்கான இன்ப வாழ்வை நோக்கி எதிர்நடை போட்டுக்கொண்டிருக்கின்றேன். என்னில் மாற்றத்தையும், பக்குவத்தையும், வினைத்திறனையும் தோற்றுவித்து இயங்கவைக்கும் ஊடகமான ஒருங்கிணைப்பு நெறியை மண்ணில் வாழ்கின்ற பல்வகை மாந்தரும் கற்றுத்தேர்ந்து, கடைப்பிடித்தொழுக வேண்டும். என்பது என்னுளப் பேரவா. நான் அடைந்த அத்தனை பயன்களையும் எனக்கும் மேலாக ஒவ்வொருவரும் பெற்று மகிழவும், இறைவனோடு இரண்டறக் கலந்து, என்றுமே குலையா இன்பம் துய்க்கவும் விளைந்து என் எழுத்தைத் தொடர்கின்றேன்.

## இறைவன் - இயற்கை – மனிதன்

மண்ணுக்கும், விண்ணுக்கும் மேலான ஒன்று உண்டு என்று இவ்வுலகில் வாழும் மாந்தரும் நம்புகின்றனர். ஒரு சிலரைத்தவிர உலக மறைகள் அனைத்தும், உலகத்தையும், அதில் வாழும் உயிர்களையும் படைத்து, இயங்கவைப்பவர் இறைவன் என்பதை ஏற்றுப்போதிக்கின்றன. இறைவன் இன்பத்தின் உறைவிடம், தூய்மையின் நிறைவிடம், நல்லவர், எல்லையில்லா வல்லவர் என்றெல்லாம் போற்றிப்புகழப்படுகின்றார். இத்தகைய இறைவன் தம் சொல்லால் உலகையும், தம் கையால் மண்ணில் இருந்து மனிதரையும் படைத்ததாக விவிலிய நூல் விளம்புகின்றது.

## மனிதனில் கடவுள்

உருவாக்கிய மனித உடலுக்கு உள்ளுயிராய் இருப்பவரும் இறைவனே என்பதும் மறைமொழி. இதையே "உள்ளத்திலன்றோ உறைகிறான். இறைவன், உருவச்சிலைதனில் எங்கிருப்பான்". எனச் சொல்கின்றது ஞானியவர் வாக்கு. இதிலிருந்து மனிதனின் உடல் இறைவன் வாழும் திருக்கோயில் ஆகின்றது. ஞானம் நிறைந்த இறைவனின் வெளிப்பாடாக இந்நிலை இருப்பதையும், இறைவனுக்கும், மனிதனுக்கும் படைப்புக்களுக்கும் இடையில் ஒரு வலைப்பின்னல், பிணைப்பு உறவு, ஒன்றிப்பு இருப்பதையும் காணமுடிகின்றது. மேலும் படைப்புக்களைப் பயன்படுத்தி படைத்தவரின் திட்டத்தை நிறைவேற்றும் உரிமையும், பொறுப்பும் உன்னத படைப்பான மனிதனுக்கு உவந்தளிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கின்றோம். கடவுள் தமது இயல்பிலும், வாழ்விலும் பங்குகொடுத்த மனிதனுக்கு அவனது கண்ணியமான கடமையின் வெகுமதியாக, நிலைவாழ்வையும், நிறை இன்பத்தையும் உறுதி செய்திருப்பது அவரது அளப்பரிய ஈகையாகும்.

இப்பேற்றைச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமாயின், ஒவ்வொரு மனிதரும் அன்புக்கடவுளால் அருளப்பட்ட தம் உடலையும், மனதையும், ஆன்மாவையும், ஒழுங்காகப் பேணிப்பாதுகாப்பதால் மட்டுமே ஆகும். இப்பெருவாழ்வின் அழைப்பு ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கின்றது. ஒவ்வொரு மனிதனையும் எடுத்துப்பார்த்தால் சிலர் தனக்காக மட்டுமே வாழ்கின்றனர். சிலர் தம் குடும்பம், மனைவி, மக்களுக்காக வாழ்கின்றனர். இன்னும் சிலர் தம்மைச் சூழவுள்ள மக்களுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் உயிர் வாழ்கின்றனர். வேறுசிலரோ உலக மக்களின் ஆன்ம, உடல், சமூக நலன்களுக்காகவும் தம்மையே ஈந்துகொடுப்பார்கள். நம்மில் நாம், யாருக்காக, யார் உயிர்வாழ்ந்தாலும், நம் வாழ்க்கையின் குறிக்கோள் நிறைவுபெறும்வரை மனிதனின் உடல், மனம் ஆன்மா என்பவற்றைச் சீராக நோயற்ற கறையற்ற நிலையில் வைத்திருப்பது அவசியமாகின்றது.

## உடல், மன, ஆன்ம நலனைப் பேணும் வகை

தனது உடலைப் பாதுகாக்க இயலாதவனால், எதையுமே பாதுகாக்க இயலாது. மனதைச் சீராக ஒழுங்குபடுத்த முடியாதவன் அமைதிகாண முடியாது. ஆன்மத்தூய்மையில் அக்கறை இல்லாதவன் அழிவுக்கு விதை விதைக்கிறான் என்பது பட்டறிந்தவர்களின் பாடம். இந்தக் குறைநிலைகள் ஒருவரை அணுகாது அண்டாது இம்மை, மறுமை, இன்பநிலையைப் பெற்றுக் கொள்வதற்கு உதவும் முகமாக, அகிலமெங்கும் சமய சமூக மட்டங்களில், அநேக நெறிகள் காட்டப்பட்டு வருகின்றன. இவைபற்றி எடுத்துச்சொல்ல பலவகை தொகையான நூல்களும், வரையப்பட்டுள்ளன. இவையனைத்தையும், அடுக்கி அலசி ஆய்ந்தால் யோகம் - 'ஒருங்கிணைதல் என்னும் கருத்தினை மையப்படுத்தியவையாக இருப்பதைத் தெளிவாகக் காணலாம். இவை யாவும் அறவாழ்வுக் கலையின் வழிகாட்டிகளாக மிளிர்கின்றன.

'அறம்' என்பது, இல்லறம், துறவறம் என இருவகைப்படும். இந்த இரு திறத்தாரும், ஆண்டவன் நமக்களித்த அறக்கட்டளைகளைக் கருத்திற்கொண்டு அவர் இட்டதைத் தம் சொல்லிலும் செயலிலும் காட்டி, அவரது திட்டத்தை நிறைவேற்றி இன்பநிலையை எய்த, பலகலைகளை – நெறிகளை மேற்கொண்டுள்ளதாக அறிகின்றோம். இவைபற்றி இதிகாசங்களிலும், புராணங்களிலும், இலக்கியங்களிலும், எல்லா மறைநூல்களிலும் எழுதிப் பொதியப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவை வாழ்வியற்கலைகளாக வகுக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கலைகள்பற்றி நோக்குமிடத்து 'ஆயக்கலைகள் அறுபத்திநான்கு' என அருந்தமிழ் இலக்கியங்கள் அறிவிக்கின்றன. இக்கலைகள் அனைத்துக்கும் அடிப்படையாக யோகக்கலை எனும் ஒருங்கிணைப்புக்கலை உயர்ந்து ஒளிர்கின்றது.

## யோகக் கலையின் விளக்கம்

'யோகம்' என்பது 'யுசு' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து வந்ததாகும். 'யோகம்' என்ற பதம் ஒருங்கிணைதல் - எல்லாவற்றையும் எந்தவித வேறுபாடுமின்றி முழுமைப்படுத்துதல் - அலையும் மனதை அலையாமல் நேர் வழிப்படுத்தல் - எப்போதும் இறைவனோடிருத்தல் - செபநிலை – தவநிலை என்பனவற்றை சுட்டி நிற்கின்றது. இக்கலையானது நிறைவாழ்வை நோக்கமாகக் கொண்ட மக்கள் தம் உடலையும், மனதையும் அடக்கி ஆன்மாவை எப்போதும் ஆண்டவனோடு ஒன்றிக்கண்டறிந்த ஓர் அறிவியற் கலையாகும். யோகப்பயிற்சிகளில் ஒருங்கிணைப்புக்கலையில் தேர்ச்சிபெற்ற கலைஞர்கள், இயற்கையைத் தம்வயப்படுத்தும் ஆற்றலை அடையப் பெறுவார்கள். இதைச் 'சாகாக்கலை' என்றும் அறிஞர்கள் அழைக்கின்றனர். ஏனெனில் இக்கலையைக் கைக்கொள்வோர், தூய்மை, வலிமையுடன் நோவில்லாப் பெருவாழ்வைப் பெற்று நீண்டகாலம் இனிது வாழலாம்.

இக்கலை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆசிய கண்டத்தில், குறிப்பாக இந்திய மண்ணில் தோன்றித் துலங்கிய கலையாகும். இக்கலையைக் கைக்கொள்வோர் ஐம்புலன் அடக்கத்தில் ஆற்றல் பெற்றோராய் ஆவதால் ஐந்திரர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்த ஒருங்கிணைப்புக்கலை, அனைத்து நலன்களையும் தன்னகத்தே கொண்ட அருங்கலையாகும். ஒருவர் ஒரு கலையையோ, கல்வியையோ, பயில்வதற்கு எழுத்து இன்றியமையாததாய் இருப்பதுபோல, இதைப்பயில்வதற்கு முன்பதாக – முன் செயலாக, யோகாசனம் எனும் ஒருங்கிருக்கைகள் மூலம்தான் உடலின் உள் உறுப்புக்கள் முழு பயனைப் பெறுகின்றன. தூய்மை, வலிமை என்பவற்றை இவை பெறுவதற்கு மன ஒருமைப்பாடு, நிதானம், இறையுணர்வு என்பவற்றோடு நெறிபிறளாது செய்ய வேண்டியுள்ளது. ஒப்பற்ற இந்த ஒருங்கிருப்பு நெறியை, ஒவ்வொன்றாக தோற்றுவித்து உலகறியச் செய்தவர்களாக போற்றப்படுவோர் திருமந்திரத்தை எழுதிய திருமூலமும், பதஞ்சலி முனிவரும் எனச் சொல்லப்படுகின்றது.

## ஒருங்கிணைப்பு நெறியின் வகைகள்

நோயில்லா இன்பப் பெருவாழ்வைப்பெற பல ஒழுங்குநெறிகள் உண்டாம். அவை கீழ்வரும் வகையில் நான்காக வகுக்கப்பட்டுள்ளன. அவைகள் 1. அருள் (ஞான) நெறி, 2. இறைப்பற்று (பக்தி) நெறி, 3. வினை (கரும) நெறி 4. அரச ஒருங்கு (இராசயோக) நெறி என்பனவாம். இதில் முதல் வரும் மூன்று நெறிகளும் அரச ஒருங்கு நெறியுள் அடங்கும் என்பார் திருமூலர். 'யோகம்' என்ற சொல்லுக்கு தவம் என்ற பொருளும் உண்டென முன்னர் கண்டோம். தவம், துறவு என்பது அன்று அரசர்களுக்கும், கொடை வள்ளல்களுக்கும், செல்வச் செழிப்பில் இருந்தோருக்கு மட்டுமே உரியதாய் இருந்தது. எனவேதான் இதை 'இராசயோகம் - அரச ஒருங்குநெறி' என்றனர் போலும் இதை இன்று 'மீ உயர் ஒருங்கு நெறி' என்று வழங்குகின்றனர்.

தவ நெறியில் எட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. அவைகளாக, கடிவு, நோன்பு, இருக்கை, கலத்தல், தொகைநிலை, பொறை, நினைதல், சமாதி என்பன.

பதஞ்சலி முனிவர் வீடு பெறுவதற்கான இவ்வெட்டு உறுப்புக்களையும், 'அட்டாங்க யோகம்' – 'எண் ஒருங்கு நெறி' என்கிறார். இவற்றுக்கு ஆசான் நச்சினார்க்கினியர் இயமம் - நியமம் - ஆசனம் - பிராணாயாமல் - பிரத்தியாகாரம் - தாரணை – தியாகம் - சமாதி என விளக்கம் தருகின்றார். இவற்றை தூய தமிழில் காண்போம்.

1. **இயமம்** - இறைவேண்டல், நல்லன செய்தல், உயிர்களிடத்தில் அன்பு, கொல்லாமை, உண்மை, புலனடக்கம், பொருளாசை இன்மை.
2. **நியமம்** - உடலும், உள்ளமும் தூய்மையாய் இருத்தல் அற, அறிவு, மறை நூல்கற்று. இறைவனுக்குத் தன்னைக் கையளித்தல்.
3. **ஆசனம்** - உடலைச் சமநிலையில் நிறுத்தும் இருக்கை.
4. **பிராணாயாமம்** - உயிர்மூச்சை ஒழுங்காக நடாத்துதல், உயிராற்றலை உள்ளடக்குதல், கட்டுப்படுத்துதல், மூச்சுப்பயிற்சி.
5. **பிரத்தியாகாரம்** - மனதைப் பிறபொருள்களிடத்தில் செல்லவிடாது நிறுத்துதல், உலகியல் இன்பங்களைத் தவிர்த்தல்.
6. **தாரணை** – மனதை ஒரு நிலைப்படுத்தல்.
7. **தியாகம்** - ஆழ்ந்த இடையறாச் சிந்தனை.
8. **சமாதி** – மெய்மறந்த உயர்ந்த நினைவு நிலை.

மேற்கண்ட ஒழுங்கு நெறிகளின் முடிவான அடைவு எல்லாம் ஒன்றுதான். இதை அணுகிச்செல்லும் வழியில்தான் சிறு வேறுபாடு உண்டு. மனித குணங்கள் ஆளுக்கு ஆள் வெவ்வேறாக அமையப் பெற்றுள்ளன. இப்படி இருப்பதால், அவரவருக்கு ஏற்ற நெறிகளைத் தெரிந்தெடுத்து பயின்று, பயன்பெறலாம். அவை ஒன்றை ஒன்று ஒட்டித் தழுவி, ஒருங்கிணைந்து போவதால் கீழ்வரும் நெறிகளில் விரும்பியதை எடுத்துக் கைக்கொள்ளலாம்.

**இராசயோகம் - அரச ஒழுங்கு நெறி:**

உடலை ஒரே இடத்தில் அமர்த்திவைக்கின்ற இருக்கைகள் மூலம், உடலைவிட, மனதுக்கே சிறந்த பயிற்சியை அளிப்பது.

**கடயோகம் - எண் ஒழுங்கு நெறி:**

உடல் இருக்கைகளையே முக்கியமாகக் கொண்டு, பிடிவாதத்தோடு, அதனை மனதை செம்மை நிலைக்கு உயர்த்துவது.

**கர்மயோகம் - வினை ஒழுங்கு நெறி :**

கடவுளுக்கே தன்னைக் கையளித்து, கைமாறு கருதாது, கடமையையே கருத்தாகக் கொண்டு, மனிதர்களுக்குச் செய்யும் நன்மையே மாபெரும் பணி என்பதை உணர்ந்து அதில் முழு மூச்சோடு ஈடுபடல்.

**ஞானயோகம் - ஞான ஒழுங்கு நெறி:**

மெய் ஞான அறிவினை மிகுதியாக்க முயல்வது.

**பக்தியோகம் - இறைப்பற்று ஒழுங்கு நெறி :**

இறைபற்றுடையவராக, எப்போழுதும் இறைவனுடன் இருந்து அவர் விருப்பத்தையே நிறைவேற்றும் தன்மையை வளர்ப்பது.

**மந்திர யோகம் - மந்திர ஒழுங்கு நெறி :**

ஒலிப்பாடுகளின் அதில் வலைகள் பற்றிய அறிவியலில் ஈடுபட்டு, மந்திரங்கள், துதிகள் மூலம் மேன்மை நிலை அடைய உதவுகின்றது.

**கீதா யோகம் - பா ஒழுங்கு நெறி :**

இறைவனையே நினைத்துருகி, இசைநயத்தோடு தன்னை மறந்து என்றென்றும் பாடிப்பரவுதல் (பஜனை)

இறைவனோடும் இயற்கையோடும் இணைந்து, உடல். மன, ஆன்ம, நலமுடனும் வாழ்ந்து இறைவனுக்கு பணி செய்து அவரை மாட்சிப்படுத்தவும், என்றுமே குலையா இன்பநிலை எய்தவும், ஒவ்வொருவரும் ஒருங்கிணைப்பு நெறியில் ஈடுபாடுகாட்ட இறைவன் அருள்பாலிப்பாராக.

# மறைக்கல்வி நிலையமா? மறைக்கல்வி நடு நிலையமா?

இலங்கையிலே 12 மறைமாவட்டங்கள் உள்ளன. இந்த 12 மறைமாவட்டங்களிலும் அந்தந்த மறைமாவட்டங்களில் மறைப்பணி ஆற்றுவதற்கு மறைக்கல்வி இயக்குனர்கள் 12 பேர் உள்ளனர். இந்த இயக்குனர்கள் தமது மறைமாவட்டங்களில் மறைக்கல்வி நிலையத்தினூடாக மறைக்கல்விக்காக அருட்பணியாற்றுகின்றனர். மறைக்கல்வியை நோக்கமாகக் கொண்ட இந்தச் செயற்பாட்டில் மறைக்கல்வி வகுப்பு மாணவர்களும் மறையாசிரியர்களும் முக்கியத்துவம் வகிக்கின்றனர்.

முழு வருடத்திற்குமான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து கிறிஸ்துவை – மறைக்கல்வியை மாணவர்களுக்கு அளித்து அவர்கள் கிறிஸ்துவைத் தம் அனுபவங்கள் வாயிலாக பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டே மறைக்கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன.

இந்த மறைக்கல்வி நிலையங்கள் அனைத்தும் மறைக்கல்வி நிலையங்கள் என்று – உதாரணமாக கொழும்பு மறைக்கல்வி நிலையம், மன்னார் மறைக்கல்வி நிலையம், யாழ் மறைக்கல்வி நிலையம் என நமது மறைமாவட்ட இடத்தின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றன.

தேசிய மறைக்கல்வி நிலையமானது இந்த 12 மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களையும் ஒன்றிணைத்து பணியாற்றுகிறது. கத்தோலிக்க கல்வி, விவிலியப் பணி மறைக்கல்வி தொடர்பான தீர்மானங்கள் அனைத்தும் தேசிய மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெறும் தேசிய ஆணைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்படுகின்றன. இந்தத் தேசிய ஆணைக்குழுக் கூட்டத்தில் தலைவராக மேதகு மெக்ஸ்வெல் சில்வா, துணைத்தலைவராக மேதகு ஜோசப் பொன்னையா ஆகியோர் பணியாற்றுகின்றனர். தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. பியால் ஜானக்க அடிகளாவார். ஆணைக் குழு கூட்ட அங்கத்தவர்களாக மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்களுடன் மேலும் பிரதிநிதிகள் இருவரும் கல்வி, விவிலியப்பணி பிரதிநிதிகளும் பங்குபற்றுகின்றனர்.

இந்த 12 மறை மாவட்டங்களும் தேசிய மறைக்கல்வி நடுநிலையம் என்ற மரத்தின் கிளைகளாக செயற்படுகின்றன. தேசிய மறைக்கல்வி நடு நிலையம் அனைத்து மறைமாவட்டங்களுக்கும் மையமாக இயங்குவதால் அதனை தேசிய மறைக்கல்வி நடுநிலையம் என அழைக்கிறோம். அதன் கிளை மறைக்கல்வி நிலையங்களை நடுநிலையம் என கூறும்போது அங்கே கருத்துப்பிழை, சொற் பிழையைக் காண்கிறோம். ஆகவே அந்தத் தவறை நிவர்த்தி செய்வோம். தேசிய மறைக்கல்வி நடுநிலையம் அவ்வாறே தேசிய மறைக்கல்வி நடுநிலையம் என அழைக்கப்பட வேண்டும்.

மற்ற மறைக்கல்வி நிலையங்களை நடு நிலையம் எனக் கூற முடியாது. அவை உ+ ம் - கொழும்பு மறைக்கல்வி நிலையம், யாழ் மறைக்கல்வி நிலையம், மன்னார் மறைக்கல்வி நிலையம் என்றே அழைக்கப்பட வேண்டும். அவை நடுநிலையம் ஆக முடியாது. காரணம் ஒரே ஒரு நடு நிலையம் அது தேசிய மறைக்கல்வி நடுநிலையம் ஆகும்.

***அருட்சகோதரி ரஞ்சி போல்துரை,***
***தேசிய மறைக்கல்வி நடு நிலையம்.***


# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

**குரு வணக்கம்**

சூரியனின் கடர்வீச்சை தணிக்க
காரிகையர் அணிகின்றார் கறுப்புக்கண்ணாடி
பாலைவனம்கூட இங்கெனக்கு
பசுமையாய் தெரியுதென்றால்
காரணம் மேத்தாவின் கவிதைக் கண்ணாடி.

**கண்மலர்வு**



காதல் என்பது போதிமரம்
காலம் கடந்து ஞானம் வரும்.
பாழம் கிணற்றில் வாழ்ந்த பின்னர்
பரமன் நினைவு தானாய் வரும்.
வலிகள் வேதனை சுமந்த பின்னர்
வாழும்போதே மோட்சம் வரும்.
நரக நெருப்பைக் கடந்ததுமே
சிலுவையின் நிழலில் அமைதி வரும்.
தேவன் வார்த்தை வாழ்வு என்ற
தேம்பாவணியின் நினைவு வரும்.
காமம் தன்னைக் கடந்தவர்தான்
கடவுளைக் காண்பார் கண்மணியே.

- மதிமைந்தன்

**தாய்**



பத்து மாதம் சுமந்தாள் என்னை
அவள்தான் அன்னை.
என்னை வளர்ப்பதில்
மறந்தாள் தன்னை.

அம்மா நீ ஒரு கல்வி ஓடம்.
உன்னில் கற்றேன் பல பாடம்
இல்லை அம்மா உன்னில் வேடம்.



எனக்காய் விழித்தாய் பல காலை
நானோ ஏறினேன் பாட சாலை
இதனால் பெற்றேன் பல மாலை.

மாதா நீ நிழல் தரும் மரம்.
என்றும் அணைக்கும் உன் கரம்.
இறைவன் தரவேண்டும் ஏழு ஜென்மம்
மகளாய் பிறக்க வரம்

*கே. சலோமி, எமிலிநகர், மன்னார்.*

## உவப்புடன் வாழ உயர்ந்த நம்பிக்கை....!




நானிலத்தில் நாம் நலமுடன் வாழ
நாமும் வேண்டும் நம்பிக்கை!
நலிந்த எம் வாழ்வு நற்பயன் தந்திட
நினைவில் வேண்டும் நம்பிக்கை!

இருளான வாழ்வில் ஒளி வந்து சேர
இதயத்தில் வேண்டும் நம்பிக்கை!
இழந்த எம் வாழ்வை இன்பமாய் மாற்ற
இறைவனில் வேண்டும் நம்பிக்கை!

அழுகின்ற மனதில் அமைதியை அளித்திட
அனுதினமும் வேண்டும் நம்பிக்கை!
அலைமோதும் வாழ்வில் அகல்விளக்கேற்றிட
அவனியில் வேண்டும் நம்பிக்கை!

மடிகின்ற வாழ்க்கையில் மலைபோல் உயர்ந்திட
மனதிலே வேண்டும் நம்பிக்கை!
மறைந்த எம் உறவுகள் மறுவாழ்வு பெற்றிட
மறையிலே வேண்டும் நம்பிக்கை!

கரைகின்ற பொழுதுகள் காத்திரமாய் மாற
கனவிலே வேண்டும் நம்பிக்கை!
கண்ணீர் துளியிலே கதிகலங்காதிருக்க
கடவுளில் வேண்டும் நம்பிக்கை!

வாழ்கின்ற வாழ்க்கைக்கு வரலாறு காண
வார்த்தையில் வேண்டும் நம்பிக்கை!
வானவில் போன்று வானத்தில் உயர
வாழ்க்கையில் வேண்டும் நம்பிக்கை!

உடைந்த எம் வாழ்வு உருமாற்றம் பெற்றிட
உள்ளத்தில் வேண்டும் நம்பிக்கை!
உயிரோடு வாழும் உறவுகட்கெல்லாம்
உறுதியாய் வேண்டும் நம்பிக்கை!

ஏரிபிக்கும் உழவனின் ஏக்கங்கள் தீர
ஏமாற்றும் உலகத்தில் ஏணியாய் வாழ
ஏழைகள் வாழ்வில் ஏற்றங்கள் காண
எல்லோர்க்கும் வேண்டும் நம்பிக்கை!

*அ. ஜஸ்மின் ஷரோன்,*
*ஆவணம், நானாட்டான்.*

# கொஞ்சம் சிரிங்க

**தாதி :** எதுக்கு டாக்டர் பேஷன்ட் முன்னாடி நமீதா படத்த மாட்டி வச்சிருக்காங்க?
**டாக்டர் :** 'ஆன்னு' வாயத் திறக்கச் சொல்லி அலுத்துப் போச்சு அதுதான்.
*ச. ஜறின் ஜெனனி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.*

**விமல் :** ஏண்டா கணக்கு செய்யும்போது உறுமுற?
**கமல் :** என்னைக் கணக்கில புலின்னு மத்தவங்க சொல்லணும் இல்லையா?
*அ. மேரி டியூறின், காத்தான்குளம், நானாட்டான்.*

**ஆசிரியர் :** கேள்விகளுக்கு முட்டாள் தனமா ஏன் பதில் சொல்கிறாய்?
**மாணவன் :** குரு எவ்வழியோ ......... சிஷ்யனும் அவ்வழியே.
**ஆசிரியர் :** 100இல் ஒன்றை எடுத்து விட்டால் மிகுதி எத்தனை.
**மாணவன் :** இரண்டு சைபர்கள் டீச்சர்.
*செ. கஸ்விதா குருஸ், 7ம் வட்டாரம், யூட்ஸ் வீதி, பேசாலை.*

**ஆசிரியர் :** மாணவர்களே..! பொது அறிவை வளர்த்துக்கொள்ள தினமும் செய்தித்தாள்களை படிக்க வேண்டும்.
**மாணவர்கள் :** அப்ப வகுப்பில் படிப்பதால் என்ன பிரயோசனம் சேர் ...?
*யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.*

**நோயாளி :** காதுல ரயில் ஓடற மாதிரி சத்தம் கேட்குது டாக்டர்.
**டாக்டர் :** (பரிசோதித்து விட்டு) எனக்கு ஒண்ணும் கேட்கலையே.
**நோயாளி :** அப்போ ஏதாவது சிக்னல்ல நின்னிருக்குமோ?
*பு. டனிஸ் ஷர்மிலன், இல.95, முதலியார்குளம்.*

**சீனு :** எங்க பாட்டிக்கு மூன்று காதுடா!
**பாபு :** எப்படி?
**சீனு :** வலக்காது, இடக்காது, கேட்காது!

.............................................

**கவிதா :** எங்க அக்காவோட மதிப்பு இப்போ உயர்ந்து போச்சு!
**பிரியா :** என்ன பண்ணினாள் அப்படி?
**கவிதா :** அவ பெயர்தான் தங்கமாச்சே!
*இ. சுஜேன்சி பறுனாந்து, முத்தரிப்புத்துறை.*

# மன்னா விளம்பரப் பலகை

போதுமென்ற மனநிறைவுக்கு நிகரான செல்வம் எதுவும் இல்லை. பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை. *(அன்னை சாரதாதேவி) ஜெயபாலாஜி, முருங்கன்.*

பெண்மை என்பது தனித்த தூய இடத்திலிருந்து அமைதியாக மலர வேண்டிய பயிர் ஆகும். மாசும் இரைச்சலும் கும்பலும் நிறைந்த இடம் இதற்குத் தகாது. ஆனால் சில விசேட இயல்புகள் வாய்ந்த பெண்கள் நாட்டின் பொது வாழ்வில் கலந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்களாயின் அவர்களைத் தமது ஆற்றலை வெளிப்படுத்துமாறு விட்டுவிடுதலே சரியான முறையாகும். *(அன்னை சாரதாதேவி) ஜெயபாலாஜி, முருங்கன்.*

நேரம் கிடைக்கும் போதெல்லாம் தூயவர்களின் துணையை நாடு. நல்ல நூல்களைப் படி. உன் தாய்க்கு நீ செய்யும் கடமையை தலையாயது என்பதை நினைவில் கொள். *(அன்னை சாரதாதேவி) ஜெயபாலாஜி, முருங்கன்.*

"வலிக்காமல் இருப்பதில்லை சிறகுகள்.
என்றாலும் பறக்காமல் இருப்பதில்லை பறவைகள்"
*செ. நிலோசியன், சாளம்பன், அடம்பன்.*

"எங்கு தற்பெருமை ஆரம்பமாகிறதோ அங்கு நற்குணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்"
*தே. ஜெமலர் (ஜெர்மா), சாளம்பன்.*

பணிவும் சேவையும் நம்மை கடவுளுக்கு நெருக்கமாக்க உதவுகின்றன. – அன்னை தெரேசா
*பே. கிசோன்றாஜ், பொன்தீவுகண்டல்.*

# சிறுகதை

**இ. ஸ்ரெல்மி, களிமோட்டை, முருங்கன்.**

## அறிவின் தேடல்



சிறுபகுதி நிலத்தைக்கூட விடக்கூடாது என்ற உறுதியோடு பகலவன் தன் கதிர்களை பூமியெங்கும் பரப்பிக்கொண்டிருந்தான். எல்லோரும் தங்கள் வேலைகளை செய்வதற்காக வீதியிலிறங்கி வேகமாக உரிய இடம் நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

"ஐயா பேப்பர் பாருங்க, அம்மா பேப்பர் பாருங்க, அக்கா இந்தாங்க பாருங்க சுடச்சுட செய்திகள், உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், சினிமாத் தகவல் எது வேணுண்டாலும் படிக்கலாம். பாருங்க முப்பது ரூபாதான் உடனடி செய்திகள், ஐயா பாருங்க அம்மா பாருங்க" என்றபடி வீதியில் இரண்டு மூன்று சிறுவர்கள் பேப்பர் விற்றுக்கொண்டு திரிந்தனர். பேருந்து வண்டிகளில் ஏறியும் விற்றுக் கொண்டிருந்தனர்.

"வணக்கம் சார் எப்படியிருக்கிறீங்க" பேப்பர் விற்றுக்கொண்டிருந்த சிறுவன் ராஜா பஸ்ஸிலிருந்த ஒரு மனிதரைப் பார்த்துக் கேட்டான்.

அம்மனிதர் புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்து "நீ ராஜா தானே" என்றார்.

"ஆமா சார்" ராஜா பதில் கூறிக்கொண்டிருக்கும்போது ராஜாவின் நண்பன் சுரேஸ் வந்தான்.

"சுரேஸ் இது எனக்கு தமிழ் சொல்லித்தந்த மாஸ்ரர்.... என பெரியவரை அறிமுகப்படுத்தியவன் அவரிடமிருந்து விடை பெற்றான்.

அருகிலிருந்த மற்ற ஆசிரியர் அவரிடம் "யார் சார் இந்தப் பையன்"? என்றார்.

பெருமூச்சு விட்டவாறு "இவன் எங்கிட்ட படிச்ச பையன். பாவம் சின்ன வயசிலயே வீட்டுச்சுமை. படிப்ப பாதியில விட்டுட்டு பேப்பர் விக்கிறான். நல்ல கெட்டிக்காரன். உறவுகளால எந்த உதவியும் இல்ல. போர்க்காலப் பிரச்சினையால தகப்பனப் பறிகொடுத்திற்றான். தாயும் இரண்டு தங்கைகளும்தான். தாய் இதய நோயாளி. எப்ப உயிர்போகுமோ தெரியாது. இவன்தான் பேப்பர் வித்துக் கொண்டு ஒரு புத்தகக் கடையில வேல செய்யிறான். அதில வாற வருமானத்தில குடும்பம் பிழைக்குது" என்றார்.

"ராஜாவோட கதைய கேட்டால கஸ்ரமா இருக்குது சார்....." என்றவாறு அவர்கள் பயணத்தை தொடர்ந்தனர்.

நாட்கள் உருண்டோடி மாதங்களைப் பிடித்தி மாதங்கள் நகர்ந்து சென்று வருடங்களையும் தாண்டியது. ராஜாவின் வாழ்க்கையும் நாளாந்தம் வழமை போலவே நகர்ந்து சென்றுகொண்டிருந்தது.

"அண்ணா... அண்ணா நாளைக்கு எங்கட பள்ளிக்கூடத்தில வாசிப்பு மாதத்த முன்னிட்டு நிகழ்ச்சி நடக்குது. ரீச்சர் அம்மா அப்பாவ கூட்டிவரச் சொன்னவ. அம்மாவுக்குத்தான் உடம்பு சரியில்ல." என்றாள் ராஜாவின் தங்கை. "நான் வருவேன். சரி இப்ப போய் தூங்கு" என்றான் ராஜா.

காலையில் எழுந்து விரைவாகச் சென்று முதலாளியிடம் வேலைக்கு லீவு எடுத்துக் கொண்டு தங்கையுடன் பாடசாலை சென்றான். சிறுவயதில் அவனுடன் படித்த மாணவர்கள் எல்லாம் இருந்தனர். யாவரும் இவனைக்கண்டும் காணாததுபோல் திரிந்தனர். அவன் படிக்கவில்லை என்று கேலி செய்தனர்.

பல்வேறு நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தது இறுதியாக இரண்டு குழுக்களுக்கிடையில் ஒரு போட்டி நடைபெற்றது. நடுவர் கேட்கும் கேள்விக்கு குழுவினர் பதில் கூறாவிட்டால் அவையில் இருப்போர் பதிலளிக்கலாம். நடுவர் எழுந்து கேள்விகள் கேட்கத் தொடங்கினார். அனைத்தும் பொது அறிவு நம்பந்தமானவை. குழுவினர் விடைதெரியாது விழித்த கேள்விகளுக்கெல்லாம் அவையில் நின்ற ராஜா பதில் கூறினான்.

நிகழ்வுகளின் முடிவில் பரிசளிப்பின்போது ராஜாவின் பெயர் வாசிக்கப்பட்டது. ராஜாவிற்கு எல்லையில்லா மகிழ்ச்சி. சிறுவயதில் முதல் மாணவனாக மேடையிலேறி பரிசு பெற்றவன் இன்று முதல் முறை ஏறுவதுபோல் நடுங்கினான்.

"நாங்கள் நடத்திய பொது அறிவுப் போட்டியில் போட்டிக் குழுவினரைவிட அதிகமாக சரியான பதில்களைக் கூறிய ராஜாவிடம் இன்னும் சில கேள்விகள்" என்ற நடுவர், "ராஜா எத்தனையாம் வகுப்பு படிக்கிறீங்க?" என்றார்.

"ராஜா தயங்கியவாறு .. "நான் ... பள்ளிக்கூடம் படிக்கல்ல சார்." என்றவன் தன் குடும்ப நிலையை விவரித்தான். நடுவர்கள் அதிர்ந்து போய்விட்டனர்.

"பிறகு எப்படி நாங்க கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொன்னாய்?" என்றார்.

"நான் வேல செய்யிற நேரம் தவிர மற்ற நேரத்தில நியூஸ் பேப்பர், கதைப்புத்தகங்கள் எல்லாம் வாசிப்பேன். கிடைக்கிற புத்தகம், பேப்பர் எல்லாம் வாசிப்பேன்" என்றவன் தனக்குரிய பரிசினைப் பெற்றுக்கொண்டு சென்றான்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# க. பொ. த. சாதாரண மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி - 2013 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ அல் - அஸ்ஹர் ம.வி

## வினாக்களும் விடைகளும்

01. மூவொரு இறைவன் திருவிழாவிற்கு அடுத்துவரும் திருவிழா எது? - ஆண்டவரின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா
02. உலகிலேயே முதன் முறையாக செபமாலைப் பக்தியை பரப்பியவர் யார்? புனித டொமினிக் (சாமிநாதர்)
03. "ஒன்றாகச் செபிக்கும் குடும்பம் ஒன்றாக வாழும்" இவ்வாறு கூறியவர் யார்? பற்றிக் பெயிற்றன் அடிகளார்
04. எந்தக் காலப்பகுதி திருவழிபாட்டின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது? கி.பி. 4 - 6 நூற்றாண்டுகள்
05. புதுப்பலத்தைப் பெற்றுத்தரும் அருட்சாதனம் எது? உறுதிப்பூசுதல்
06. தவக்காலப் பக்தி முயற்சிகள் எவை? விபூதிபூசுதல் அடையாளம், உபவாசம், திருச்சிலுவை ஆராதனை, சிலுவைப்பாதை
07. திருச்சிலுவை வழிபாட்டின் வகைகளை எழுதுக? திருச்சிலுவைப் பவனி (சிலுவைப்பாதை) திருச்சிலுவை ஆராதனை, திருச்சிலுவை ஆசீர்வாதம், விசேட மன்றாட்டுக்கள்.
08. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் எத்தனையாம் ஆண்டு இலங்கைக்கு வந்தார்? 1705ஆம் ஆண்டு
09. எவ்வாறு நாம் செபாத்படும்போது இறைவார்த்தையின்படி வாழும் வழியைப் பெறுகின்றோம்? எம்மில் செயலாற்றும் தூய ஆவிக்குச் செவிமடுக்கும்போது
10. திருச்சபையை ஓர் உடலுக்கு ஒப்பிடுவதன் வழியாக வெளிப்படுத்தப்படுவது என்ன? கிறிஸ்துவுக்கும் திருச்சபைக் இடையே உள்ள நெருங்கிய உறவு
11. கடவுளைப் பின்பற்றுகின்ற கிறிஸ்தவனுடைய வாழ்வின் முக்கிய அடையாளமாக விளங்குவது எது? செபம்
12. பழைய ஏற்பாட்டில் யாருடைய செபம் அழைப்பு / பதில் வழங்கும் அமைப்பைக் கொண்டுள்ளது? மோசேயின் செபம்
13. விண்ணகத்தந்தை கேட்பதற்கு முன்னர் நன்மையானதை வழங்குவார். நாம் மனந்தளராமல், இடைவிடாது செபிக்க வேண்டுமெனக் கூறும் திருவிவிலியம் பகுதிகள் எவை? மத்தேயு 7:7-11, லூக்கா 18:1-8
14. "இப்பொழுது, உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார்........" என்று குறிப்பிடும் திருவிவிலியப் பகுதி எது? கொலோசையர் 1: 24
15. "நீ சிலோவாம் குளத்துக்குப்போய் கண்களைக் கழுவும்" என யாரால் யாருக்குக் கூறப்பட்டது. சிலோவாம் என்பதன் பொருள் என்ன? இயேசுவால் - பார்வையற்றவருக்கு - அனுப்பப்பட்டவர்
16. கிழக்கு ஜேர்மனி - மேற்கு ஜேர்மனி என வேறுபடுத்திய பேர்லின் மதிலை உடைத்து நாட்டை ஒன்றுசேர்ப்பதில் முன்னின்ற திருத்தந்தை யார்? திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்
17. "நான் சினமுற்று, 'நான் அளிக்கும் இளைப்பாற்றியின் நாட்டிற்குள் நுழையவே மாட்டார்கள்' என்று ஆணையிட்டுக் கூறினேன்" இவ்வாறு கூறப்பட்டுள்ள திருவிவிலியப் பகுதி எது? எபிரேயர் 4:3
18. "இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்" எனச் சான்று பகர்ந்தவர் யார்? நூற்றுவர் தலைவர்
19. லூக்கா நற்செய்தியின்படி சிறப்பிடம் பெறுபவர்கள் யார்? இகழ்ந்து ஒதுக்கப்பட்ட பாவிகள், பெண்கள், ஏழைகள், சமரியர்.
20. "இயேசுவே இறைமகனாகிய மெசியா.." எனக் கூறும் நூல் எது? யோவான்
21."கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி" எனத் தொடங்கும் நற்செய்தி நூல் எது? மாற்கு நற்செய்தி
22. எந்த நற்செய்தி நூலில் மூதாதையர் பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ளது? மத்தேயு நற்செய்தி
23. இறைவன் அழைத்தபோது, "நான் சிறுபிள்ளை எனக்குப் பேசத் தெரியாது" எனக் கூறியவர் யார்? எரேமியா
24. விவிலியத்தின் ஞான இலக்கியங்களுள் தலைசிறந்த நூல் எது? யோபு
25. பார்வோனுக்காக கட்டப்பட்ட களஞ்சிய நகர்கள் எவை? பித்தோம், இராம்சேசு

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 123

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் எசாயா 34ம் அதிகாரத்திலிருந்து 41ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

பழைய உடன்படிக்கையில் இறைவனை இஸ்ராயேல் மக்கள் படைகளின் ஆண்டவராகத்தான் பார்த்தார்கள். நாம் இப்போது வினாக்களுக்காகத் தெரிந்தெடுத்த பகுதிகள் நாடுகளுக்கிடையே நடத்த யுத்தங்களையும் வெற்றிகளையும் வீழ்ச்சிகளையும்பற்றி விரிவாகக் கூறுகின்றன.

படைகளின் ஆண்டவராக அன்று அவர்கள் கண்ட இறைவனை இன்று நாம் 'அப்பா தந்தையே' என்று அழைக்கின்றோம். மன்னிக்கும் இறைவனாக, இரக்கத்தின் ஆண்டவராக, குணமளிக்கும் ஆண்டவராகக் காண்கின்றோம்.

கிறீஸ்து பிறப்புக்குமுன் கடவுள் ஒரு குணநலன்களுடனும் இப்போது பிறிதொரு குணநலன்களுடனும் இருக்கிறாரா? இல்லை. அந்நாட்களில் வாழ்ந்த மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் அவனது வாழ்க்கைமுறைக்கும் ஏற்றவாறு அவன் கடவுளைக் கண்டான். இன்று மனிதன் வளர்ந்துவிட்டான். ஞானமும் வளர்ந்துவிட்டது. அதற்கேற்றவாறு அவன் கடவுளைக் காண்கின்றான்.

## இனி எமது வினாக்களுக்குள் செல்வோம்

01. எசாயாவின் 34ம் அதிகாரத்தைப் படிக்கும்போது ஒருவித அச்சம் தோன்றுகின்றது. அது எதைப்பற்றிக் கூறுகின்றது.
02. அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும். காது கேளாதவரின் செவிகள் கேட்கும். காலூனமுற்றோர் மான்போல் துள்ளிக் குதிப்பர். பாலைநிலத்தில் நீரூற்றுக்கள் பீறிட்டு எழும். வரண்ட நிலத்தில் நீரோடைகள் பாய்ந்தோடும். எப்போது?
03. எருசலேமின் மன்னன் எசேக்கியாவின் ஆட்சியின் எத்தனையாம் ஆண்டிலே அசீரியாவின் மன்னன் சனகெரிபு எருசலேமின்மீது படையெடுத்து வந்தான்?
04. அசீரியாவின் மன்னன் சனகெரிபு என்பவனால் ஏன் ஜெருசலேமைக் கைப்பற்ற முடியவில்லை?
05. எசேக்கியா தாம் இறக்கப்போவதை அறிந்து ஆண்டவரை நோக்கி அழுது புலம்பி கண்ணீர்விட்டு மன்றாடினார். அதற்கு மனமிரங்கிய இறைவன் அவரது ஆயுட்காலத்தை எத்தனை வருடங்களால் நீடித்துக்கொடுத்தார்?
06. எசேக்கியா மன்னன் பபிலோன் நாட்டின் தூதர்களுக்கு தன் நாட்டின் கருவூலங்களில் இருந்த செல்வங்கள் அனைத்தையும் காட்டினான். இதுபற்றி எசாயா உரைத்த இறைவாக்கு என்ன?
07. "குரலொலி ஒன்று முழங்குகின்றது. பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்." இந்த வார்த்தைகளை மத்தேயு, மாற்கு, யோவான் ஆகிய மூன்று நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றார்கள். எந்த அத்தியாயத்தில் எத்தனையாம் வசனத்தில்?
08. ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் எதைப் பெறுவர்?
09. "உன் வலக்கையைப் பற்றிப்பிடித்து, 'அஞ்சாதே உனக்குத் துணையாய் இருப்பேன்.'" என்று சொல்பவர் யார்?
10. "இதோ என் ஊழியன் அவருக்கு நான் ஆதரவளிக்கின்றேன். நான் தேர்ந்துகொண்டவர். அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது". எசாயாவின் வாயிலாக ஒலித்த இறைவனின் இந்த வார்த்தைகள், கிறீஸ்துவின் வாழ்விலும் இருமுறை ஒலித்தன எப்போது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 121 இற்கான கேள்விகளுக்கு 21 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

பீற்றர் நிக்ஷலா, பட்டித்தோட்டம், மன்னார்.

## பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. அனுசியா, கணேசபுரம், வெள்ளாங்குளம்.
2. அ. அனோஜன், சின்னவல்யன்கட்டு, இரணை இலுப்பக்குளம்.
3. யூ. சங்கீதா, கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
4. யூ. ஜெபர்ஷன், கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்.
5. அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமாவீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
6. எம். தேவி, இல.116, எமில்நகர், மன்னார்.
7. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
8. யோ. டீயூலன், நானாட்டான்.
9. அ. றெயிற்றா லோஜினி, 'கார்மேல் இல்லம், அடம்பன்.
10. வி. ஆன் செளமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.

## ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் ....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்நிகழ்வானது மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில் கடந்த 20.10.2013 அன்று கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் தலைமையில் இடம்பெற்றது. ஆசிரியரின் முதலாவது வெளியீடான, 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' என்ற நூலானது வடகிழக்கு மாகாண சாகித்திய விருதினையும், இலங்கை இலக்கியப் பேரவை விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுவரை ஊடகவியல் சார்ந்த பத்து நூல்கள் அருட்தந்தையை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்துள்ளன.

## ஆசிரியர் ஞானராஜ் ...... 8ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆசிரியர் ஞானராஜ் அவர்கள் மன்னாரில் சமாதான நீதவானாகவும் சமூக சேவையாளராகவும் விளையாட்டுத் துறையில் மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பவராகவும் மாவட்டத்தின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டவராகவும் திகழ்ந்துவருகின்றார்.

இவர் 1999ம் ஆண்டிலிருந்து இன்றுவரை மன்னார் புனித சவேரியார் கல்லூரி உதைபந்தாட்ட அணியை தேசிய மட்டத்தில் தொடர்ச்சியாக 1ம் 2ம் 3ம் இடங்களை பெறவைத்து மாவட்டத்திற்கு பெருமைசேர்த்து வருகின்றார். 2004ம் ஆண்டு இலங்கையின் சார்பில் இக்கல்லூரி அணியை தென் கொரியாவின் சியோல் நகர்வரை அழைத்துச்சென்று பெருமை சேர்த்தவர். அத்துடன் 2012ம் ஆண்டில் இலங்கை தேசிய 19 வயது உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக ஆசியக் கிண்ணப்போட்டிக்காக ஈரான் சென்று சிறப்பான பெறுபேற்றைப் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்தவர். அத்துடன் இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் இவரால் உருவாக்கப்பட்ட 7 மாணவர்கள் ஆடி வந்திருக்கின்றார்கள். இவ்வருடம் 3 பேர் அணியில் உள்ளார்கள்.

இவர் ஆசியாவில் அங்கீகாரம் பெற்ற உதைபந்தாட்ட பயிற்றுநர். சிறந்த நடுவர். 2002, 2010ல் கொழும்பில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுநர் போட்டியில் நடுவராக கடமையாற்றியுள்ளார். இந்தியாவின் கேரள மாநிலத்தில் 2008ல் சிறப்பு பயிற்றுநர் பயிற்சி பெற்றார். தற்போது மன்னார் உதைபந்தாட்ட லீக் செயலாளராகவும், மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளராகவும், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மாவட்ட இணைப்பாளராகவும் பயிற்றுனராகவும், இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்க மாவட்ட இணைப்பாளராகவும், தேசிய பயிற்றுநர் குழு உறுப்பினராகவும் காணப்படுகின்றார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழியாற்றல் உடையவர். சிறந்த அறிவிப்பாளர். சிறந்த எழுத்தாளர். தமிழ் மொழிப் பற்றாளர். இவர் புனித சவேரியார் கல்லூரியின் பழைய மாணவனாவார். மாதோட்ட துறைமுகமாம் மாந்தையை பிறப்பிடமாககொண்ட அமரர் செல்வம், ஜெயசோதி தம்பதிகளின் புதல்வராவார்.

இவ்வாறான தகுதி கொண்ட இவரை கல்வி அமைச்சு கௌரவித்தமையையிட்டு மன்னார் சமூகம் பெருமைப்படுவதுடன் இவர் மேலும் மன்னார் மாவட்டத்தை பல வழிகளிலும் எதிர்காலத்தில் முன்னேற்ற இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

*- கல்லூரி பழைய மாணவர்கள்*

## இராணுவத்தினரிடம் சரணடைந்த அருட்தந்தை பிரான்சிஸ் மற்றும் ஏனையவர்களின் வழக்கு



இறுதிப்போரின் முடிவில் முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் அரசாங்கத்தின் அழைப்பையேற்றுத் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப்புலிகளுடன், இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் உட்பட 9பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களில் 7 வழக்குகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு வவுனியா மேல்நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இரண்டு வழக்குகள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா நீதவான் நீதிமன்றத்திற்குக் கட்டளையிடப்பட்டுள்ளது. பொது மன்னிப்பளிக்கப்படும் என்ற அரசாங்கத்தின் உத்தரவாதத்தையடுத்து, விடுதலைப்புலிகள் இறுதி யுத்தம் முடிவடைந்தும், முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் சிங்கள மொழியை மொழிபெயர்த்து உதவியதாகத் தெரிவிக்கப்படும் அருட்தந்தை பிரான்சிசும் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர் அவரைப்பற்றிய தகவல்கள் எதுவுமில்லாத நிலையில் அவர் தொடர்பில் ஆட்கொணர்வு மனு ஒன்று வவுனியா மேல்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று இராணுவத்தினரிடம் சரண்டைந்து தகவல்கள் எதுவுமற்ற நிலையில் இருப்பவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேலும் 6 வழக்குகள் அண்மையில் வவுனியா மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, அரசதரப்பினர் விளக்கமளிப்பதற்கான கால அவகாசம் கோரியதையடுத்து, வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி இந்த வழக்குகளை அடுத்த மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இதேவேளை அருட்தந்தை பிரான்சிஸ் தொடர்பான ஆட்கொணர்வு மனுதொடர்பான விசாரணைகளை அவதானிப்பதற்கும், ஏனைய ஆட்கொணர்வு மனுக்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆதரவுதெரிவிப்பதற்காகவும் சுமார் 20 பேரைக்கொண்ட அருட்தந்தையர் மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோர் இந்த வழக்கு விசாரனையின்போது நீதிமன்றத்தில் பார்வையாளர் பகுதியில் ஆஜராகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது, மன்னார் மறைமாவட்டம் மற்றும் யாழ் மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளுமே இவ்வாறு வருகை தந்திருந்தார்கள்.

## மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் .......

5ஆம் புக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து திரு. அலெக்ஸ் அமலரட்ணம் அவர்கள் பொதுநிலையினர் பணியில் தனது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டது எல்லோராலும் வரவேற்கப்பட்ட ஒரு நிகழ்வாக இருந்தது. தேநீர் இடைவேளையின்பின் இடம்பெற்ற கலந்தாய்வரங்கில் மன்னார் மறைமாவட்டப் பேரவை உறுப்பினர்கள் பலர் தமது சொந்த அனுபவங்களையும், பங்கின் பணிகள், தேவைகள் பற்றியும் எடுத்துக்கூறினர்.

ஈற்றில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலந்துகொண்டு உரையாற்றும்போது பொதுநிலையினரின் பணிகள் வெறும் உதவிகளாக மக்களுக்கு வழங்கப்படாமல் இயேசுவைப் பின்பற்றி "அன்புப் பணிகளாக" இடம்பெறவேண்டும் என்பதைப் பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.136

## எசாயா அதிகாரம் 1 முதல் 33 முடிய

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05 | | | | | 10 | 27 | ✵ | ✵ | 02 |
| | 18 | | ✵ | | 14 | | | 12 | |
| | | 25 | | | | | | | |
| | 11 | | | 08 | | | 23 | | |
| | | 17 | ✵ | | | 29 | 16 | | 06 |
| | 24 | 21 | ✵ | 03 | | | | ✵ | ✵ |
| 15 | | | | | 19 | | | | 20 |
| | | | | | 28 | 22 | | | |
| | 09 | | 01 | 26 | | ✵ | 13 | | |
| 04 | | | | | 07 | | | ✵ | ✵ |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)
உங்கள் விடைகளை அனுப்பவேண்டிய முகவரி :
***குறுக்கெழுத்துப்போட்டி, மன்னா பத்திரிகைப் பணியகம், கலையருவி, இல. 116/3 புனித சூசையப்பர் வீதி, பெற்றா, மன்னார்.***

### இடமிருந்து வலம்

3. சாவின் நிழல் சூழ்ந்துள்ள___மேல்........... ஒளி உதித்துள்ளது.
4. அவற்றுள் ஒன்று ..................... நகரம் என்று அழைக்கப்படும்.
5. அந்நாளில் தாவீதின் குடும்பத்தாரின் .................... அவன் ___ வைப்பேன்.
7. ஆனால் குழறிய ___ இம்மக்களுக்குப் ................. கற்பிப்பார்.
8. தமது வலிமையுள்ள ___ வைத்து ...................... எனக்கு ___ விடுத்தார்.
11. சிறகடித்து அலையும் ................... போலும்___ காணப்படுவர்.
13. நேர்மை வளமான வயல்களின் ........................
16. அவர்கள்வழி ...................... துரும்புபோல் பறந்துபோகும்.
22. வேலைக்கு அமர்த்தப்படுவோர் ................... பதறுவர்.
25. ..................... நாட்டில் வாழ்வோரே ___ கதறியழுங்கள்.
26. ..................... வேண்டி எகிப்துக்குச் ___ கேடு.

### வலமிருந்து இடம்

1. அவர்களுக்காக ___ தரும் .......................... ஒருவரை அவர் அனுப்புவார்.
10. அவர்மேல் என் நம்பிக்கையை ................. நிற்கச் செய்வேன்.
14. அவர் தொலையிலுள்ள .................... இனத்துக்கு ___ காட்டியுள்ளார்.
17. கனிகொய்யுங் ......................... இனி வராது.
18. எருசலேமின் ................. மலையில் அவர்கள் ஆண்டவரை வழிபடுவார்கள்.
20. பகைவன் பெருவெள்ளமெனப் ___ எங்களை ........... இயலாது.
24. அவர்களால் ................... இயலாமற் போயிற்று.
25. ............... சினம் தணியும்வரை ___ கொள்ளுங்கள்.

### மேலிருந்து கீழ்

2. ............................ நாட்டைக் குறித்த திருவாக்கு.
3. அவற்றைச் ....................... சோர்ந்து போனேன்.
5. என்னிடம் ..................... வாருங்கள்.
8. அதற்கு .................. நான் கேட்கமாட்டேன்.
11. நாள் .................. சென்றபின் தண்டிக்கப்படுவார்கள்.
12. சமாதானத்தின் ...................... மனங்கசந்து அழுகின்றனர்.
15. அது அரசனுக்கென்று ...................... செய்யப்பட்டது.
16. அருகிலும் தொலையிலும் உள்ளோரை அச்சுறுத்திய ....................... கூட்டத்தார் அவர்கள்.
21. கூலியாள் ___ கேதாரின் ............................ மங்கிப்போகும்.
27. எகிப்தியருக்கு எதிராக எகிப்தியரையே ........................ கிளர்ந்தெழச் செய்வேன்.
28. தம் கண்களால் காந்தக் ...................... தொடுக்கிறார்கள்.
29. ஒரே இரவில் ............................ நகரம் ___ அழிக்கப்படும்.

### கீழிருந்து மேல்

1. உன் நினைவு நிலைக்குமாறு இன்னிசை .................. பாடு.
6. எருசலேமில் தப்பி வாழ்வோரும் ............... எனப் பெயர் பெறுவர்.
8. அருகில் உள்ளோரே, என் ................ அறிந்துகொள்ளுங்கள்.
9. மானிடரைப் .............. பொன்னைவிடவும் ___ அரிதாக்குவேன்.
11. கைதிகளாய் அவர்கள் ............... குழியில் ஒன்றுதிரட்டப்படுவார்கள்.
13. ஓர் இனத்திற்கு ___ இனம் ...................... எடுக்காது.
15. விழிநீர் .......................... வழியத் ___ அழுகின்றனர்.
19. துடுப்புப் ......................... அங்குப் போவதில்லை.
22. அவர்களின் நிழல்கள் .......................... பெற்றெழ மாட்டா.
23. வளமான ................ நிலங்களிலிருந்து ___ அகற்றப்பட்டன.
25. ஆனால் காடு அழியக் ......................... மழை பொழியும்.

## திருத்தந்தையின் நாற்காலியில் அமர்ந்து ..........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

கூட்டத்தில் பெரும்பாலும், வயதான தம்பதிகள்தான் இருந்தனர். அவர்கள் திருத்தந்தையின் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். இப்போது மேடையில் திடீர் சலசலப்பு ஏற்பட்டது. நான்கு வயதுச் சிறுவன் திடீரென மேடையேறி, திருத்தந்தையின் நாற்காலியில் உட்கார்ந்ததுதான் சலசலப்புக்கு காரணம். மேடையில் இருந்தவர்கள் சற்று அதிர்ச்சி அடைந்தாலும் அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை கூட்டத்தில் இருந்தவர்களுக்கு வியப்பு.

திருத்தந்தையின் கவனமும் இதில் திரும்பியது. அவர் மேடையில் திரும்பி பார்த்தார். ஒரு வாண்டு, தன் இருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து லேசாக புன்முறுவல் செய்தார். அந்தச் சிறுவனோ சீரியசான மூடில் இருந்தான். அவரையே கூர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் நாற்காலியில் சாய்ந்தபடி உட்கார்ந்து காலாட்டியபடி இருந்தான்.

திருத்தந்தை பேச்சைத் தொடர்ந்தார். அவர் பேச்சைவிட அச்சிறுவன்மீதுதான் பலரின் கவனமும் இருந்தது. ஒரு கட்டத்தில் அவன் எழுந்துவந்து அவர் காலைப் பற்றிக்கொண்டான். கூட்டம் கைதட்டி ஆரவாரித்தது. இதையும் திருத்தந்தை புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார். திருத்தந்தை உரையாற்றி அமர்ந்தவுடன் அவர் அருகில் சென்று அவர் அணிந்திருந்த சிலுவையை கையால் பிடித்துப் பார்த்தான். பின்னர் அவரைப் பார்த்து சற்று விலகி, சடசடவென மேடையில் இருந்து இறங்கிப் போய் தன் பெற்றோருடன் உட்கார்ந்து கொண்டான். அவன் பெயர் விபரம் தெரியவில்லை. இது தொடர்பான செய்தியும், புகைப்படகங்களும், காணொளியும் சர்வதேச ஊடகங்களில் பரபரப்பான செய்தியாக வந்துகொண்டிருக்கின்றன. அப்படங்களில் சிலவற்றை கீழே காணலாம்.

## ஆசிய உதைபந்தாட்டப் போட்டிக்காக ......


1ஆம் பக்கத் தொடர்ச்சி


யோண்சன் அவர்கள் தோட்டவெளி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி. யோகராஜா யோசப் அவர்களின் புதல்வராவார். கிசோர் என்பவர் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தை சேர்ந்த திரு. திருமதி. சுதாகர் அவர்களின் புதல்வராவார். இவர்களை புனித சவேரியார் கல்லூரி சமூகத்துடன் மன்னார் உதைபந்தாட்ட சமூகமும் வாழ்த்தி நிற்கின்றது. இவர்கள் பயிற்றுவிப்பாளர் ஞானராஜ் அவர்களால் உருவாக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## சிறுகதை ........ 12ஆம் பக்கத் தொடர்ச்சி

நடுவர் மாணவர் எல்லோரையும் பார்த்து, "பார்த்தீர்களா பிள்ளைகளே, கண்டது கற்பவன் பண்டிதனாவான்" என்று சொல்வார்கள். ராஜா சிறுவயதில் கல்விகற்க முடியாது சென்றாலும் தன் வேலையின் மத்தியிலும் புத்தகங்கள் வாசிப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறான். கல்வி கற்பதையே கடமையாகக் கொண்ட நாம் வாசிப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறோம். வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது எவ்வளவு உண்மை பார்த்தீர்களா? இன்றிலிருந்து ஒவ்வொருவரும் பொது விடயங்களைத் தேடித்தேடிப் படிக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்க வேண்டும். வாசிப்பதினால் கிடைக்கும் வாழ்வின் வெற்றியை அடைய இன்றே புறப்படுவோம். இத்துடன் நிகழ்வு நிறைவடைகின்றது." என்றார்.

தனியார் நிறுவனத்தின் ராஜா மீண்டும் பாடசாலை வரவும், படிக்கவும் அதிபர் உதவி செய்தார். ராஜா பாடசாலையில் கல்விகற்பதில் முதலிடத்தில் திகழ்ந்து பாடசாலைக்கும் தனக்கும் பல பெருமைகளைத் தேடிக்கொண்டான்.







## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 134ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஜெ. றெபேக்கா குரூஸ்,
1ம் வட்டாரம், வங்காலை.

**இரண்டாம் பரிசு:**
தொ. நிஷா, பாப்பாமோட்டை,
திருக்கேதீஸ்வரம்.

**மூன்றாம் பரிசு:**
ம. செபதேயு,
புதுக்காடு, தேவன்பிட்டி.


**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 75 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 134ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. கே. ஆர். கலிஸ்ரஸ், கற்குளம் - 02, ஆசிக்குளம், வவுனியா.
2. அ. லெலிமோ, இல - 180, ஒல்லிமோட்டை, மன்னார்.
3. அ. நெல்சன், பரிகாரிகண்டல், முருங்கன்.
4. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருகோணமலை.
5. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
6. அ. றூபி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
7. என். ஜெகப்பிரியன், இல-180, ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.
8. அ. சுகுணராஜ், தேவன்பிட்டி, புதுக்காடு.
9. ச. திவாரகாகுளம், 8ம் வட்டாரம், பேசாலை.
10. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
11. ஜெ. சாந்த றொபட்சி குரூஸ், அக்னேஸ்புரம், வங்காலை.
12. செ. கஸ்விதா குரூஸ், 7ம் வட்டாரம், பேசாலை.
13. டே. நிருபியா, சிறுக்கண்டல், முருங்கன்.
14. ஐ. இருதயமேரி, கற்குளம் - 02, ஆசிக்குளம், வவுனியா.
15. ஜெ. சாம்சன் குரூஸ், அக்னேஸ்புரம், வங்காலை.
16. ந. டிலக்சினி பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
17. பி. நவரட்ணம், இல-180, ஒல்லிமோட்டை, மன்னார்.
18. எ. கிறீஸ்றதிஷன், இல-180, ஒல்லிமோட்டை, மன்னார்.
19. றி. சுரேக்கா, பாலைப்பெருமாள்கட்டு, குருவில், வட்டக்கண்டல்.
20. அ. சுகன்யா, தேவன்பிட்டி, புதுக்காடு.
21. ச. ஆன் டினுஷிக்கா டபரேரா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
22. லோ. சோனியா பறுனாந்து, 8ம் வட்டாரம், பேசாலை.
23. கி. றொசாந்தினி, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
24. திருமதி. ச. மேரி அஞ்சலா, கள்ளப்பாடு தெற்கு, முல்லைத்தீவு.
25. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
26. நி. மேரி ஜோசப் குரூஸ், வட்டாரம் - 08, வங்காலை.
27. பி. லக்ஷனா, அச்சங்குளம், நானாட்டான்.
28. நெல்சன், சிறுக்கண்டல், முருங்கன்.
29. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை.
30. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
31. எம். திரேசா, 22/21, 3 வீதி, எமில்நகர்.
32. அ. ஜான்சன், சிறுக்கண்டல், முருங்கன்.
33. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
34. பி. நித்தியானந்தன் குரூஸ், வட்டாரம் - 08, வங்காலை.
35. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
36. ரி. ஆன் ஜீவனா, சிறுக்கண்டல், முருங்கன்.
37. டல்ஸ்ரன் றொய்ஸ் குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
38. நி. மரியம்மா பீரிஸ், வட்டாரம் - 08, வங்காலை.
39. யே. யூக்கலிஸ்ரா, இத்திக்கண்டல், அடம்பன்.
40. அ. லூட்ஸ் அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல், யாழ்ப்பாணம்.
41. சி. றோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
42. பி. நவரட்ணம், இல-180, ஒல்லிமோட்டை, மன்னார்.
43. பி. றெஜீபன், அச்சங்குளம், நானாட்டான்.
44. எ. விமல், ஒல்லிமோட்டை, மன்னார்.
45. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
46. எஸ். சுதேபிரியசகி குலாஸ், அக்கினேஸ்புரம், வங்காலை.
47. நே. எட்மன் றிச்சட், சிறுக்கண்டல், முருங்கன்.
48. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
49. தேவிகா பத்மராஜா, மடுமாதாவீதி, பெற்றா, மன்னார்.
50. எஸ். பெனிற்றா, பள்ளமடு, விடத்தல்தீவு.

## இல.134 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வு | ய் | ஓ[07] | ல் | ✵ | னி | க[23] | டை | ப[08] | னி |
| மு | மு[19] | டி | ட | பா[16] | லை | ஏ[11] | வ[05] | லி | மை |
| பு[13] | றி | ✵ | ம[27] | ச[32] | ரை | ரி | ✵ | ர | று |
| ல | ப[04] | கை | ✵ | றை | தி[22] | ✵ | ன | ம[24] | சி[38] |
| ✵ | போ[25] | பொ[28] | ன் | எ[37] | கு[17] | த[36] | சி[02] | லை | கொ[39] |
| அ[20] | ர் | யி | உ[01] | ள் | ள | ம் | ல | நீ[12] | ✵ |
| மை | வ[09] | ரி | ✵ | ளி | த் | ✵ | ர் | ன் | உ[35] |
| தி | ழி | ✵ | எ[18] | ளி | து | நீ[31] | ✵ | ட[29] | ம் |
| நீ[15] | ர் | சீ[33] | மி[03] | ல | தா[26] | யூ[06] | ழ | வா[21] | ப |
| அ[10] | ன் | பு[30] | க | ழ் | ✵ | ச[34] | பை | ய | தூ[14] |




***விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல.135ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு டிசம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.***

# நீங்காத நினைவுகள்

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 01 1982



உதிர்வு 25 10 2008

### திரு. பத்திநாதன் வளன்ராஜ்

(சகாய வீதி, அடம்பன்.)

வானக வீட்டில் வாழச் சென்ற வளனே,
நித்திய பிதாவின் நித்திலனே!
மண்ணகப் போராட்டத்தை முடித்து நீ
விண்ணகம் சென்று இன்று ஐந்து
ஆண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்!
புனிதமான உன் எண்ணங்கள்
நிறைவேறவும், புனிதர்கள் கூட்டத்தில்
நீ சேரவும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

***நீங்காத நினைவுகளுடன் :***
***குடும்பத்தினர்***

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928



உதிர்வு 06 11 2007

### திருமதி. அற்புதம் சவிரிமுத்து

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
புத்திரகண்டான், முருங்கன்.)

***"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"***

அம்மா! உங்களை பிரிந்து மூவிரண்டு
ஆண்டுகள் சென்றாலும் என்றும் எம்முடன் நினைவில்
நீங்கள் ஒளிவிளக்காய் வாழ்ந்து வருகிறீர்கள்.
பாசத்தின் உறைவிடமாய் உங்கள்
அன்புச் சிறகுக்குள் வைத்து வழிநடத்தினீர்கள்.
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த கால நினைவலைகள்
எம் இதயத்தில் என்றும் அழியாது.
அமைதியில் நித்திய இளைப்பாற்றி பெற
எங்கள் செபங்களை சமர்ப்பிக்கிறோம்.

***பிரிவால் துயருறும் : பிள்ளைகள்,***
***மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை***
***- தகவல் : மகள் செ. நவறோஸ்***

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 10 1934



உதிர்வு 08 11 2005

### திருமதி. பேதுரு செபமணி அருளம்மா

(முருங்கன் பிட்டி, முருங்கன்.)

***"உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சியுண்டு. உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு" (தி.பா 16:11)***

அம்மா!
ஆண்டுகள் எட்டு ஆனாலும்
எப்படி நாங்கள் மறப்போம் உங்களின் அன்பை!
யார் எமக்கு ஈடுசெய்வார் உங்கள் அன்பை?
அன்போடு எமை அணைத்து நாம் நலமாய் வாழ
வழிசெய்தீர். உங்களின் நினைவுகள் இதயத்தில் என்றும்
நிறைந்துள்ளது. என்றும் இறைவனின் சந்தியில் இன்புற்று
வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

***பிரிவால் துயருறும் : கணவன், பிள்ளைகள்,***
***மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 05 1952



உதிர்வு 17 11 2009

### மோசேஸ் மொத்தம் தர்மதாசன்

(உயிர்த்தராசன்குளம்,
இறப்பு, பிறப்பு, விவாகப் பதிவாளர்,
சமாதான நீதவான்),

குடும்பத்தின் குல விளக்கே
காற்றாய் வந்த காலனவன்
உம்மை எம்மிடம் இருந்து
பிரித்து இன்றோடு நான்காண்டுகள்!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காத உம் நினைவோடு
உமது ஆன்ம சாந்திக்காய் இறைவனிடம்
தினமும் மன்றாடும் உம் அன்பு
உறவுகள்.

***உம் பிரிவால் துயருறும் :-***
***மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.***

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 11 1975



உதிர்வு 01 11 2007

### திரு. சவிரிமுத்து சாமிநாதன் யூட்புனிதராஜ்

(கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.),

"கார்த்திகையில் உன் பெற்றோரின் மணப்பந்தம்
கார்த்திகையில் உன் ஜனனம் - மகனே
கார்த்திகையில் உன் பயணம் - அண்ணா
கார்த்திகைப் பூவாய் உன் மரணம் - அப்பா
காத்திருக்கின்றோம் உன் வரவுக்காய் - ஐயா

***"என்னிடம் வருபவரை நானும் இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவான் 6:44)***

***உம் பிரிவால் துயருறும் :-***
***மனைவி, மகள்***
***மற்றும் குடும்பத்தினர்.***

## 07ம் ஆண்டு 11/2ஆண்டு நினைவஞ்சலி





### வ. யேசுரத்தினம் பிறிசில்லா ராசமலர்

(பெற்றா, மன்னார்.)

மலர்வு : 08 - 12 - 1929
உதிர்வு : 07 - 11 - 2006

மலர்வு : 28 - 08 - 1926
உதிர்வு : 15 - 04 - 2012

***"என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியனாய் யான் வந்தேன்:***
***அங்கே திரும்புகையில் பிறந்த மேனியனாய் யான் செல்வேன்:***
***ஆண்டவர் அளித்தார். ஆண்டவர் எடுத்துக் கொண்டார்.***
***ஆண்டவரது பெயர் போற்றப்பெறுக." (யோபு 1:21)***

என்றும் அன்புடனும் நீங்கா நினைவுடனும்
எங்கள் இதயங்களில் ஆழமாக உறைவீராக.

***அன்புடன் பிள்ளைகள், மருமக்கள்,***
***பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரி,***
***உற்றார், உறவினர்.***

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

## சந்தாவைப் புதுப்பியுங்கள்!

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.
- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு படுத்துகின்றோம்.

**கட்டண விபரம்**
கறுப்பு வெள்ளை 4,500/=
கலர் 7,500/=

மன்னா

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்"
(2 திமொத்தேயு 4:7)

"நீதிமான்களின் பிரிவு பெரும் துன்பமாகக் கருதப்பட்டது. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது".
(சாலமோனின் ஞானம் 3:2,3)

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 02 1936

உதிர்வு 07 10 2013

### திருமதி. செபஸ்தியாம்பிள்ளை அன்னம்மா

(நானாட்டான்.)

"நானே உலகின் ஒளி. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

எம் பாசமிகு அன்னையே
உம் பிரிவை எண்ணி தாங்கொண்ணா
துயரத்தில் துடிக்கின்றோம் அம்மா!
அன்னைக்கு அன்னையாய்
தந்தைக்கு தந்தையாய்
உம் பிள்ளைச் செல்வங்களின் நல்வாழ்விலே
திரியாக நின்று உருகினாய் அம்மா!
தியாகம் என்னும் கடலிலே
அன்பு என்னும் வலையிலே
பாசம் என்னும் பிணைப்பிலே
எம்மை கட்டிக் காத்தாய் அம்மா!
என்றும் உங்கள் பாசமிகு நினைவுகளுடன்,
உங்கள் பாசமிகு பிள்ளைகள்,

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 04 1927

உதிர்வு 22 11 2012

### திரு. சந்தியாப்பிள்ளை பேதுருப்பிள்ளை

(மோட்டக்கடை, நானாட்டான்.)

"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப்பாருங்கள், அவரிடத்தில் நம்பிக்கைகொள்பவர் பேறுபெற்றவர்"

ஒவ்வொரு நாளும் உங்கள் ஒவ்வொரு செயலும்
எம்மைவிட்டு நீங்காது உங்களை எம் கண்
முன்னே பிரதிபலிக்கின்றன.
நித்திய சாந்திபெற்று இளைப்பாற வரம்வேண்டிநிற்கும்,
சகோதரி, பிள்ளைகள், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 09 07 1949

உதிர்வு 02 10 2013

### திருமதி. ச. மேரி றோசலின்

(தூய லூர்து அன்னை ஆலயம், போயிட்டி, இளவாலை, (மாரீசன்கூடல்), யாழ்ப்பாணம்)

அம்மா!
ஆகாரம் கொடுத்தாய் நீ ஆகாயம் காட்டி
ஆளுமை கொடுத்தாய் நீ அன்பைக் காட்டி
அ.ம.தி.க்கு கொடுத்தாய் நீ சிலுவை காட்டி?
அடுத்து!
என்ன கொடுப்பாய் உன் கடவுளைக் காட்டி
படைத்தவனோடு என்றும் வாழ வேண்டுகிறோம்.

ஆறாத துயரில் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி



### லிங்கத்துரை சுரேஸ் லோறன்ஸ் லடீஸ்

(சவேரியார்புரம், சிலாவத்துறை)

மலர்வு : 13 - 12 - 1993 மலர்வு : 27 - 05 - 1994
உதிர்வு : 04 - 10 - 2013 உதிர்வு : 04 - 10 - 2013

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்" (2 திமொத்தேயு 4:7)

இன்சொல்லால் நண்பர் தொகையைப் பெருக்கி
பண்பான பேச்சால் உங்கள் மதிப்பை உயர்த்தி
அனைவரோடும் நட்புடன் பழகி எம்மை விட்டுப் பிரிந்தவர்களே
"உண்மையாகவே தேடுகின்றோம்" தரிசனம் தரமாட்டீரா?
போய் வருகிறேன் என்ற "அன்புத் தெய்வங்களே"
திரும்பியபோது "அடியற்ற மரபோல்" வந்தீர்களே!
துடிப்பில்லாத ஓடமாகிப் போனதோ உமக்கு
பொக்கிசமாக நெஞ்சில் பதிந்த உமது நினைவுகள்
என்றும் ஞாபகம் வருகின்றதே எமக்கு....
உமது பிரிவுடன் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுகின்றேன்.
நீங்கா நினைவுகளுடன் : குடும்பத்தினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 04 1941

உதிர்வு 14 11 2012

### ம. செபஸ்ரியாம்பிள்ளை

(ஓல்லிமடு, நானாட்டான்.)

ஆண்டொன்று ஆனதுவோ - ஐயா
ஆறமுடியவில்லை உம்பிரிவை எண்ணி
சேய்கள் நாம் தனித்து தவித்திருக்க
தேவன் பாதம் நாடிச் சென்றனையோ!

கனிவாய் பேசும் கருணையுள்ளம் கொண்டவரே
காலனவன் உம்மை கவர்ந்து சென்றதனால் -
விட்டுச்சென்ற நினைவுகளை
விலக்கிவிட முடியாமல் வேதனையில் மூழ்குகின்றோம்.

எப்பிறப்பு வந்தாலும் எங்களுக்கு
தந்தையாய் நீர் வந்திடவே
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
உம் பிரிவால் துயருறும் :
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04 04 1943

உதிர்வு 10 11 2012

### திரு. சந்தான் டெனிஸ்

(காத்தான்குளம்)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் ஐயா
ஆறவில்லை எம் துயரம்
மீண்டுமெப்போ காண்போமென - நாம்
மனம் நொந்து ஏங்கித் தவிக்கின்றோம்.

ஆண்டவனடி சேர்ந்தீரெனும் நினைவு
ஆற்றிட எம் மனதை
ஆறுதல் அடைகின்றோம் - உம்
ஆன்மா சாந்திபெற அனுதினம் வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் உறவுகள்
தகவல் : மகன் கெய்ஸ்சர்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.